அட்டவணை 55: 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீ.அ.அ.ச யினால் தாக்கல் செய்த மற்றும் வீ.அ.அ.சயிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விபரணம்.

விபரம்	31.12.2014 வரை திரட்டு	2015 ஆம் ஆண்டில் வீ.அ.அ. எதிராக தாக்கல் செய்த வழக்கு	2015 ஆம் ஆண்டில் வெளியாட்களுக்கு வீ.அ.அ. தாக்கல் செய்த வழக்கு	2015 காலப் பகுதியில் முடிக்கப்பட்ட வழக்கு	மொத்தம்
உச்ச நீதிமன்றம்	06	07	01	04	10
மேல் முறையீட்டு நீதிமன்றம்	26	23	-	03	46
உயர் நீதிமன்றம்	13	12	01	04	22
மாவட்ட நீதிமன்றம்	98	99	03	09	191
நீதவான் நீதிமன்றம்	178	04	253	75	360
தொழிலாளர் நீதிமன்றம்	01	03	-	01	03
தொழில்த்துறை நீதி மன்றம்	-	-	-	-	-
மனித உரிமை ஆணைக்குழு		15	-	14	01

3.22 பெறுகைச் சேவை

வீ.அ.அ.ச யின் பெறுகைச் சேவைப் பிரிவின் ஊடாகவே பெறுகைச் சேவைகள் செயற்படுத்தப் பட்டன. அனுசரணை ஊழியர்களின் உதவியுடன் பணிப்பாளர் நாயகத்திற்குத் தேவையான தொழில்சார் ஆதரவுகளை பணிப்பாளர் (பெறுகைப் பிரிவு) மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதியினால்) வழங்கப்படுகின்றது.

வீ.அ.அ.ச யின் ஒட்டுமொத்த பெறுகைக்கு மற்றும் வீதி மற்றும் பால முன்னேற்ற GOSL நிதி உதவியின் கீழான காரியாலய எழுதுபொருள், சரக்கு போன்ற கொள்முதல் நடவடிக்கைகளை கையாள்வதுடன், உத்தரவு, திட்டமிடலிலும் இப்பிரிவாகும். இந்நிறுவனத்தின் சங்கிலித் தொடர் சேவையை வழங்குவதற்கு துணை புரியும் அதே நேரத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் மதிப்பிடுதல், கேள்விப் பத்திரங்களைக் கோரல் இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும்.

3.22.1 குறித்த ஆண்டு காலப்பகுதியின் நடவடிக்கை மற்றும் திட்டமிடப்பட்ட திட்டங்களின் வளர்ச்சி

வீதி மற்றும் பால வேலைகளிற்காக நிர்மானத்திற்கு பெறுகை ஒழுங்குமுறை செயற்படுத்துவதற்கு இப்பிரிவிற்கு இயக்கப்படவில்லை. நுகர்விற்காக ரூபா.31.13 மில்லியன் பெறுமதியான நுகர் பொருட்கள் மற்றும் அலுவலக எழுது பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

நுகர் பொருள் மற்றும் அலுவலக எழுதுபொருட்கள் பெறுகைக்கு இவ் வேலையின் நோக்கம் மட்டுப்படுத்தப்பட்டள்ளது. 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 31.13. மில் வேலை கையாளப்பட்டதுடன் இது கடந்த 2014 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 6.53 மில்லியன் அதிகரிப்பாகும்.

3.23 ஆளணி முகாமைத்துவம்

தலைமைத்துவ காரியாலயத்தில் வீ.அ.அ.சயின் நிறுவாகப் பிரிவினால் ஆளணி முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் நிர்வாகத்தின் பார்வையின் கீழ் வருகின்ற ஒரு பிரிவாகும். நிர்வாகப் பிரிவிற்கு ஒரு பணிப்பாளர் தலைவராகவுள்ளார். இவருக்கு உதவியாக இரண்டு பிரதிப் பணிப்பாளர்களும் 7 நிர்வாக உத்தியோகத்தளும், ஒரு சிரேஷ்ட்ட நிர்வாக உத்தியோகத்தரும் மற்றும் அனுசரணை ஊழியர்களும் உள்ளனர்.

நிர்வாகப் பிரிவானது வீ.அ.அ.யின் தொடர்புபட்ட ஒட்டுமொத்த மனிதவள முகாமைத்துவத்திற்கும் நிர்வாகச் செயற்பாட்டிற்கும் பொறுப்பாகவுள்ளது. ஆளணி முகாமைத்துவ நடவடிக்கைகள் அதாவது ஆட்சேர்ப்பு, அபிவிருத்தி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள், வரவு முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களின் விடுமுறை கலைப்பும் நிர்வாகப் பிரிவு மேற்கொள்கின்றது.

அட்டவணை இல 56 : 31.12.2015 இல் உள்ளவாறான ஊழியர் படையணி

இல.	பதவி	அனுமதியளிக்கப்பட்ட பணிநிலை	உள்ள பணி நிலை	
			நிரந்தரம்	ஒப்பந்தம்
(i)	சிரேஷ்ட முகாமைத்துவ சேவை	86	80	-
(ii)	பொறியியல் சேவை	593	548	115
(iii)	நிர்வாக உத்தியோகத்தர் சேவை	19	27	-
(iv)	தகவல் தொழில்நுட்ப சேவை	19	12	-
(v)	கணக்காய்வாளர் சேவை	29	30	-
(vi)	சட்ட உத்தியோகத்தர் சேவை	06	05	-
(vii)	ஜுனியர் நிர்வாக சேவை	47	46	-
(viii)	கணக்களர்/கணக்காய்வாளர் உதவி சேவை	70	74	-
(ix)	இணைஉத்தியோகஸ்தர் சேவை	78	74	
(x)	தொழில்நுட்ப சேவை – I	103	54	
(xi)	தொழில்நுட்ப சேவை – II	952	815	59
	மேலதிக சேவை			
(xii)	முகாமைத்துவ உதவி சேவை	1,753	1,684	294
(xiii)	அனுசரணை ஊழியர்	2,550	2,224	291
	உப மொத்தம்	**6,305**	**5,673**	**763**
(xiv)	பராமரிப்பு தொழிலாளி (நிரந்தரம்)	4,024	4,203	50
(xv)	பராமரிப்பு தொழிலாளி (தற்காலிகம்)			
மொத்தம்		**10,329**	**9,886**	**813**

3.23.1 மனிதவளம்/ஆளணி நடவடிக்கைகள்

ஊழியர்கள் முக்கியமான சொத்தாகும் ஆகும். அவர்கள் இலங்கையின் தேசிய வீதி வலைப்பின்னலின் உயர்தர முன்னேற்றத்துடன் வீ.அ.அ.ச யை அரசின் முக்கியமான பங்காளியாக இட்டுச் செல்வதற்கு பிரதானமான பங்களிப்பைச் செய்கின்றனர். 2014ஆம் ஆண்டு இறுதியில் மொத்தமாக 10,669 ஊழியர்களை அதில் 9886 நிரந்தரம் மற்றும் 813 ஒப்பந்த அடிப்படையில் வீ.அ.அ.ச கொண்டுள்ளதுடன், ஆளணி முகாமைத்துவமான முக்கியமான நடவடிக்கை இடமாக நிருவனத்தில் கருத்தில் கொள்ளப்படுகிறது. 2015 காலப்பகுதியில் நிர்வாகப் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பின்வருமாறு.

- மனிதவளங்கள் / மூலோபாய திட்டமிடல் கற்றல் வேலை முறைப்படுத்தல் தொடர்பான மனிதவளதிட்டமிடல்
- தேவை பற்றிய கற்றல் மற்றும் மதிப்பிடல்
- பணிநிலைத் தேவை பற்றிய கற்றல் மற்றும் மதிப்பீடு
- SOR உருவாக்கம் / திருத்தம்.
- உரிய விண்ணப்பத்தாரிகளை பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தல்
- விண்ணப்பம் கோரல்.
- தேவைப்பாடுகள்
- புதிய பணியாளர்களுக்கான தூண்டுதல் பயிற்சிகள்
- நேர்முகத்தேர்வுக் குழுவினை நியமித்தல்
- வேலைவாய்ப்பு
- வேலைப்பட்டியலை தயாரித்தல் / தொழில் விளக்கம்
- வருகை மற்றும் விடுகை முகாமைத்துவம்
- செயல்த்திறன் முகாமைத்துவம் / செயல்த்திறன் மதிப்பீட்டு முறைமையை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- தொழிலாளர் ஈடுபாடு தொழிலாளர்களை வேலையின்பால் ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை செய்தல்
- தொழிலாளர் முகாமைத்துவம் - திருப்தியற்றவர்களை முகவரியிடல் / தொழிலாளருடன் தொடர்புடைய பிரச்சினைகள்
- குறைந்த சம்பளத்துக்கான சட்டரீதியான இணக்கம், வருகைக்கான உரிமம்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- தொழிலாளர் ஊக்குவிப்பு சிறந்த செயற்றிறனுக்கான வெகுமதி, மேலதிக தொழிற்றுறை உறவிற்கான தகுதி

- வெற்றியளிக்கக்கூடிய திட்டமிடல் ஓய்வு, இராஜினாமா செய்தல், கையளித்தல்.
- தொழிலார் நலன்புரி நிதியம் மற்றும் EPF / ETF நன்மைகள் மற்றும் பணிக்கொடை நன்மைக்கான செலுத்துகை
- சீர்திருத்தம் / கட்டமைப்பு மாற்றங்கள்

3.23.2 நிர்வாகத் தொழிற்பாடுகள்.

மனிதவள முகாமைத்துவ தொழிற்பாட்டின் கீழ் பணியாளர்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவத்திற்கான கொள்கைகள் விதிகள், ஒழுங்குமுறைகள், நடைமுறைகளை உருவாக்குதலும் உரிய அறிவுறுத்தல்களை வழங்குதலும் நிர்வாகத் துறையினால் முன்னெடுக்கப்படுகின்றது. மனிதவள முகாமைத்துவ அலகானது தொழிலாளர் சூழலை முன்னேற்றுவதற்கான விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கைகளை வெளியிட்டுஅதன் அமுல்படுத்தல் பற்றி கண்காணிக்கின்றது.

பின்வரும் நிர்வாகத் தொழிற்பாடுகள் நிர்வாகப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது

- நிர்வாகத்திட்டமிடல்
- கொள்கை வகுத்தல்
- நிலையற்ற கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடல்
- கொள்கைகள் சுற்றறிக்கைகள் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்
- ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல்.
- உரிய நேரத்தில் உள் மற்றும் வெளியில் கடிதங்களை பகிர்ந்தளித்தல்.
- சோத்துக்களை கொள்முதல் செய்தலும் பராமரித்தலும்.
- ஏனைய அதிகாரசபை / நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணல்.
- ஆவண அறிக்கைகளை பராமரித்தல்
- ஒழுக்க செயல்களை நடைமுறைப்படுத்தல்
- சட்ட விடயங்களை நீதி நிறுவனங்களுடன் கையாளுதல்.
- அலுவலக கட்டிடங்களை பராமரித்தல் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- அரச மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படும் சமூக மத நல்லிணக்க நிகழ்வுகளில் பங்கேற்றல்
- அனர்த்தங்களின் போதான அவசரகால நிலைமைகளின் போது பொதுமக்களுக்கு உதவுதல்

- ஏனைய நிறுவனங்களுடன் நல்லுறவினைப் பேணல்
- போக்குவரத்து பராமரிப்பு
- தேவையான போது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்
- களஞ்சிய சாலைகளிற்கு தளபாடங்களை கையளித்தல்
- பாராளுமன்ற, மாகாணசபை தேர்தல்களின் போதான கடமைகள் தங்குமிடங்களுக்கான சேவைகளை வழங்குதல்.
- தகவல் மற்றும் தரவுகளை முகாமை செய்தல்.
- அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டளைகளை செய்து முடித்தல்.

3.23.3 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள் வாங்கப்பட்ட ஊழியர்களின் விபரணங்கள்.

01.01.2015 – 31.12.2015 வரையான உள்வாங்கள்கள்

பதவி	ஊழிர்களின் எண்ணிக்கை
முகாமைத்தவ உதவியாளர்	65
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	01
இயந்திர மேலதிகாரி	01
காரியாலய தொழிளாளி	04
இலகு வாகன ஓட்டுனர்	02
பண வசூலிப்பாளர்	108
ரோந்து குழுவினர்	02
உதவியாளர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	06
பொறியியலாளர்	01
வேலை மேற்பார்வையாளர்	02
வரவேற்பாளர்	01
இலகு உபகரண இயக்குனர்	17
ஆலோசனையாளர்	06
பிளம்பர்	01
A/C தொழில்நுட்பவியலாளர்	01
கள உதவியாளர்	01
அலுவலக உதவியாளர்	20
பொருள் பொறியியலாளர்	01

மொத்தம்	243

காட்சி 23: 2010 - 2015 காலப்பகுதியில் உள்வாங்கப்பட்ட ஊழியர்கள்



3.23.4 நிர்வாகப் பிரிவினுடைய வருடாந்த திட்டம்

அங்கீகாரம் பெற்ற SOR மற்றும் பணிநிலை அடிப்படையில் தேவைப்பாடுகளின் அடிப்படையில், பின்வரும் பகுதிகளில் நிர்வாகப் பிரிவின் மனிதவள மேம்பாட்டுக்கான வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் முடிவு செய்யப்படும்

- ஆட்சேர்ப்பு
- பதவியுயர்வு

பணிப்பாளர் பயிற்சிக்கு ஒருங்கிணைந்த வீ.அ.அ.ச ஊழியர்களுக்கான பயிற்சித்திட்டத்தை தயாரித்தல் முது நிலை அணுகு முறையை அமுல்படுத்த இந்தப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

3.23.5 2015 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம்

- 12 ஊழியர்கள் உள் பதவியுயர்வுகள் மூலம் பணியமர்த்தப்பட்டனர்.
- உள் தானியங்கி பதவியுயர்வுகள் 434 அதிகாரிகள் / ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது
- SOR இறுதி வரவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் 98% மீள்பார்வை நிறைவடைந்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீ.அ.அ.ச 69 ஊழியர்களிற்காக வெளி வளங்கள் திணைக்களம் மற்றும் கௌரவ பிரதம மந்திரியினதும் அனுமதியுடன் கல்வி உதவித்தொகை பெறப்பட்டது.
- சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 2012 ஆம் ஆண்டறிக்கை மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.
- பதில் நிர்வாகப்பணிப்பாளரால் நிர்வாகப்பிரிவு ஊழியர்களிற்கு 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டது.
- அனைத்து பதிவுகள் மற்றும் தரவு நுழைவு செயலாக்கம் சரிபார்க்கப்பட்ட e-HRM கணனி
- தொழிலுக்காக 5 ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் விடுமுறை வழங்கப்பட்டது.
- 117 ஊழியர்களுக்கு சுய காப்புறுதி முறைமையில் செலுத்துவதற்காக தொகைகள் 170,013,732.62
- 114 ஊழியர்களுக்கு ஊழியர் நலன் நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF)நன்மைகளை அவர்கள் பெறறுக்கொள்வதற்கு உதவப்பட்டது.
- 91 ஊழியர்கள் / உத்தியோகத்தர்களின் (தொழிலாளர் உள்ளடங்களாக) ஒய்வூதியத்துடன் தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- 01 ஊழியர்கள் தொழிலிலிருந்து விளக்கப்பட்டுள்ளனர்.
- 07 ஊழியர்கள் - தொழிலாளர்கள் பதவியிலிருந்து விலகினர்
- 95 எண்ணிக்கையான நிர்வாக சுற்றறிக்கைகள் கடிதங்கள் மற்றும் 4 எண்ணிக்கையான நிர்வாக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன
- ஊயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நெடுஞ்சாலைகளுக்காக 11 வரி விலக்கப்பட்ட வாகன விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதுடன் செயற்படுத்தப்பட்டது.

- 17 ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 28 எண்ணிக்கையிலானவை தொடங்கப்பட்டுள்ளன.
- ரூபா 70,409,872.00 பணிக்கொடை 114 ஊழியர்களிற்கு செலுத்தியுள்ளனர்
- 10 ஊழியர்களிற்கு மொழி கொடுப்பனவு பணம் மற்றும் 24 ஊழியர்களிற்கு ஏற்றத்திற்குரிய கொடுப்பனவு செலுத்தினர்.
- செலுத்தப்பட்ட கடன்கள் பின்வருமாறு
- ரூபா 85,179,702.00 504 ஊழியர்களிற்கு 10 மாத கடன்கன்கள்.
- மோட்டார் வண்டிக்கடன் 64 ஊழியர்களிற்கு தொகை ரூபா. 9,600,000.00
- மிதி வண்டி கடன் 8 ஊழியர்களிற்கு தொகை ரூபா.80,000.00
- சொத்துக்காக 148 பணியாளர்களிற்கு வங்கி கடனுதவியளித்தது தொகை ரூபா.10,824,205.00
- புத்தக முற்கொடுப்பனவு சரிபார்க்கப்பட்டதுடன் 1310 ஊழியர்களிற்கு ரூபா.5,240,000.00 தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டது.
- மருத்துவ கொடுப்பனவிற்காக விடுமுறைகள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டது.
- வாகனத்திற்கான 308 ஊழியர்களிற்கான வங்கிக்கடன் வசதி 19,406,104.00
- 12 ஊழியர்களிற்கு பதில் பதவி கொடுப்பனவுப்பணம் செலுத்தப்பட்டது
- MSD சுற்றறிக்கை இல.43(I)17 ஏற்ப சம்பளத்தை மாற்றியமைத்தது.
- ஒப்பந்த மற்றும் தற்காலிக நிரந்தர ஊழியர் குலாமில் நிரந்தர பணியாட் தொகுதி உள்வாங்கப்பட்டது.

3.24 நிதி முகாமை

வீ.அ.அ.ச யின் மூலதன நடவடிக்கைகளை அதன் தலைமை காரியாலயத்தின் நிதிப் பிரிவின் மூலம் நடாத்தப்படும். அதன் மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) அவர்களின் விடய பொறுப்பின் கீழ்வரும் ஒரு பகுதியாகும். நிதிப் பிரிவின் பணிப்பாளர் நிதியின் தலைமையில் நிர்வகிக்கப்படுவதுடன், பிரதிப் பணிப்பாளர்கள் இருவரின் மற்றும் கணக்காளர்களின் குழுவின் மற்றும் பங்குபற்றல் நிர்வாகிகளின் ஒத்துழைப்பும் அவருக்கு கிடைக்கும். பிரதேச கணக்காய்வாளர்களின் பத்து பேரின் மற்றும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் 10 பிரதேசங்களில் இருப்பர். அவர்கள் மாகாண நிர்வாக பணிப்பாளரின் கீழ் செயற்படுவர்.

வீ.அ.அ.ச யின் மொத்த மூலதன முகாமை சம்பந்தமான பொறுப்பு நிதிப் பிரிவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இங்கு வீதி நிர்மாணம் மற்றும் நிர்வகித்தல் சம்பந்தமாக அமைச்சின் மூலம் கிடைக்கும் ஒதுக்கீட்டு நிதி மற்றும் மீள்புனரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக வீதிக்கு ஏற்படும் சேதத்தினை திருத்துவதற்காக அரசு/தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபரினால் கிடைக்கும் பணம் முகாமை செய்யப்படும். கிராம பாலம் நிர்மாணிக்கும் அலகு, இயந்திர பொறுப்பு முகாமை அலகு, அதிவேக வீதி மேற்பார்வை முகாமை மற்றும் நிர்வாகப் பிரிவு மற்றும் பரிசீலனை மற்றும் அபிவிருத்தி அலகுக்கு இணைக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர்கள் நிர்வகித்தல் போன்ற அலகு /பிரிவின் பணிப்பாளரின் கீழ் இருப்பர். அது தற்போது நிர்வாகம் என்ற வகையில் பணிப்பாளர் (கட்டுமான) கீழ் இருக்கும். இதைவிட அனைத்து பிரதான இயந்திர வியலாளர்கள் வேலை மற்றும் பொது அலுவலக செலவிற்காக செய்யப்படும் சிறிய அளவான கொடுப்பனவு களுக்காக நிதிப் பிரிவினால் வழங்கப்படும் நிதியை பயன்படுத்தி அரச வங்கி கணக்கு நடாத்திக் கொண்டு செல்லப்படும். இது பிரதான இயந்திரவியலாளர்களினால் மேற்கொள்ளப்-படும் வீதி நிர்மாண மற்றும் நிர்வகிக்கும் வேலைகளில் மிகத் திறனான நடவடிக்கையினை காட்டியுள்ளதுடன், அவர்களுக்கு குறிப்பிட்ட நிதி எல்லைக்குள் பொருட்கள் மற்றும் சேவையை பெற்றுக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3.24.1 வீ.அ.அ.ச யின் நிதியியல் செயல்திறன்

பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட ஆண்டிலும் வீ.அ.அ. வேலை மற்றும் சாதாரண நிர்வாக நடவடிக்கை தொடர்பான முழு அளவான அறிக்கை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் கட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 57: 2015 ஆம் ஆண்டில் வீ.அ.அ.ச யின் ஒட்டுமொத்த நிதிச்செயற்பாடு

வகை	ஒதுக்கீடு (ரூ. மில்.)	பெற்றுக்கொள்ளப் பட்ட நிதி மற்றும் செலவு (ரூ.மில்.)	அடையப்பட்ட வீதம் (%)
வீதி வேலைகள்	38,871.85	35,035.36	90.13
வீ.அ.அ.ச பொது பராமரிப்பு	6,000.00	6,000.00	100.0
மொத்தம்	**44,871.85**	**41,035.36**	**91.45**

அட்டவணை இல. 58: 2011 – 2015 காலப் பகுதியில் வீ.அ.அ.ச யின் நிதி நிலமைச் சுருக்கம்

	ரூ.(மில்.) 2011	ரூ.(மில்.) 2012	ரூ.(மில்.) 2013	ரூ.(மில்.) 2014	ரூ.(மில்.) 2015
சொத்துக்கள் பொறுப்புகளும்					
நடைமுறைச் சொத்து	12,550.81	15,364.93	16,504.76	25,615.10	25,440.81
நடைமுறைச் சொத்து அல்லாதவை	1,810.33	81,465.98	162,165.72	280,350.56	293,244.95
மொத்த சொத்து	**14, 361.14**	**96,830.91**	**178,670.48**	**305,965..66**	**318,685.76**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	437.51	8,940.25	37,689.4	112,434.04	130,979.84
நடைமுறை பொறுப்பு	17,032.95	18,535.20	16,428.5	22,897.90	26.296.37
மொத்த பொறுப்புகள்	**17,470.46**	**27,475.45**	**54,117.9**	**135,331.94**	**157,276.21**
தேரிய சொத்து	**(3,109.32)**	**69,335.46**	**124,552.57**	**170,633.72**	**161,409.55**
உரிமையாண்மை	**ரூ.(மில்.) 2011**	**ரூ.(மில்.) 2012**	**ரூ.(மில்.) 2013**	**ரூ.(மில்.) 2014**	**ரூ.(மில்.) 2015**
மூலதனம் மற்றும் ஒதுக்கீடு	2,330.4	77,561.13	132,564.68	184,209.80	174,149.23
திரட்டப்பட்டவை (பற்றாக்குறை)	**(5,439.78)**	**(8,205.67)**	**(8,012.31)**	**(13,576.08)**	**(12,739.68)**
மொத்த ஊரிமையாண்மை	**(3,109.32)**	**69,335.46**	**124,552.57**	**170,633.72**	**161,409.55**

3.24.2 வீ.அ.அ.ச யின் வருவாய்

நிதிப் பிரிவின் வருமான அலகு ரூ.901.77 மில். பெற்றுக்கொள்ள முடிந்ததுடன், ஏனைய வருமானமான விளம்பரம், இயந்திரங்கள் வாடகைக்கு விடப்பட்டதின் மூலம். உடன் வருவாயை ஒதுக்குதல் குறித்த ஆண்டு காலப்பகுதியில் நிதி முகாமைத்துவம் நடவடிக்கையில் இருந்து 214.5 மில்லியன் ரூபாய்களை இப்பிரிவு உழைத்தது.

3.24.3 வீ.அ.அ.ச யின் ஊழியர்களின் சம்பளம்

நிதிப் பிரிவின் சம்பளப் பிரிவின் ஊழியர்கள் 6,262 பேர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதுடன், ETF மற்றும் EPF கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்த அலகு கடன் தொகை செலுத்தல் மற்றும் அறவிடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

3.24.4 வீ.அ.அ.ச யின் சொத்து மற்றும் களஞ்சியசாலை

நிதிப் பிரிவின் சொத்து மற்றும் களஞ்சியசாலை அலகு அலுவலர் உபகரணம் மற்றும் காகிதாதிகள் தலைமைக் காரியாலயத்தின் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதுடன், சிலசமயம் பிரதேச காரியாலயங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்த அலகு சொத்து முகாமையினை செவ்வனே செய்வதுடன், அலுவலக தளபாடம், இயந்திரம், காணி மற்றும் கட்டிடங்கள் ஆகிய சொத்து ஆகியவற்றுக்கு அட்டவணை ஒன்றின் மூலம் நிறுவகிக்கின்றது. ஆண்டுக்கான நிலையான சொத்து பரிசீலனை நாடு பூராகவும் நடாத்துகின்றது. 2015 ஆம் ஆண்டு சொத்து பரிசீலனை 2015 ஒக்டோபர் மாதத்தில் பெற்ற அறிக்கை குறிப்பிட்டவாறு பெறப்பட்டுள்ளது. இருப்பு மற்றும் எழுது திரவிய பொருட்கள் பௌதீக பரிசீலனை ஆண்டிறுதியில் முடிந்துள்ளது.மேலும் இப்பிரிவினாலேயே கையிருப்புக்கள் மற்றும் பயன்படாத சொத்துக்களைஅகற்றலுடன் தொடர்பு பட்ட வேலை மற்றும் நிறைவடைந்த செயற்த்திட்ட சொத்துக்களை பங்கிடல்களை இப்பிரிவு செய்கிறது.

3.24.5 வீ.அ.அ.ச யின் நிதி கணக்குகள் மற்றும் நிதித்தகவல்

நிதி தகவலை முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தலைமைக்காரியாலய வருமானம் மற்றும் கொடுப்பனவு தரவுகளுடனான கணக்கீட்டிற்காக நிதிப் பிரிவின் பிராந்திய கணக்கீட்டு அலகின் ஊடாக மாகாண காரியாலயங்களின் கொடுப்பனவு தரவுகள் மற்றும் அலகின் வருமானங்கள் பெறப்பட்டன.

3.24.6 வீ.அ.அ. சபையின் பிராந்திய கணக்கீட்டு அலகு

மேந்தலை மற்றும் வேலைகளிற்கான முற்பணங்களை கொடுப்பதற்காக மாகாணங்களின் அனைத்து பிராந்திய கணக்காளர்களுடன் தலைமைக் காரியாலயத்தில் உள்ள பிராந்திய கணக்கீட்டு அலகு ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது. கணக்கீட்டிற்கான இறுதி கணக்கீட்டு அலகுக்கு பிராந்திய கணக்கீட்டு அலகினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டு பராமரிப்பு தரவுகள் ஒத்துபோகின்றதா என்று சரிபார்த்தல் மற்றும் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளல்.

3.24.7 வீ.அ.அ.சபையின் கொடுப்பனவு அலகு.

தலைமைக்காரியாலயத்தில் உள்ள பிரிவுகளுடன் தொடர்புபட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் நிதிப்பிரிவின் கொடுப்பனவு அலகு மேற்கொள்கின்றது. (வேலைப்பிரிவின் வேலை பற்றுச்சீட்டுக்கள் தவிர்ந்த இது வீ.அ.அ.சபையின் செயற்திட்ட அலகினால் நடாத்தப்படுகின்றது) இக்கொடுப்பனவுகளான சிவில் வேலைகள், மேந்தலை கொடுப்பனவுகளான

எரிபொருள் நிரப்பு மற்றும் அலுவலக உபகரணம் மற்றும் வாகன பராமரிப்பு, வாடகை, அலுவலக ஊழியர்களிற்கு தேவையான சம்பளம் மற்றும் கடன் போன்றவை.

3.24.8 வீ.அ.அ.ச யின் வரவு செலவு மற்றும் குத்தகை வேலைத்திட்டம்

நிதிப்பிவின் குத்தகை அலகிற்கு வீ.அ.அ.ச யின் பொது நடவடிக்கைகளுக்கான வரவு செலவு அடங்கலாக குத்தகை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. நிதிச்சட்டத்துக்கு அமைய பணிப்பாலர்களுக்கு வீ.அ.அ.ச ஒட்டுமொத்த வரவு செலவை தயாரித்து மற்றும் சமர்ப்பிப்பதற்கு இவ் அலகே பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக, பிராந்திய காரியாலயங்கள், பிரிவுகள் மற்றும் ஏனைய செயற்பாடு அலகுகளில் இருந்து தகவல்கலை பெற்றுக்கொள்வதினால் வருமானவரி திணைக்களத்திற்கு அனுப்புதல் மற்றும் வரிப்பாகங்களை காலத்துக்கு காலம் தயாரிப்பதற்காக இவ் அலகின் பொறுப்பாகும்.

3.24.9 நிர்வாக அலகு

நிதிப்பிரிவின் நிர்வாக அலகானது அலுவலக நிர்வாக செயற்பாடுகளில் உதவும் அதே வேளை இந் நிர்வாக அலகில் 93 தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். தனிநபர் கோப்புகளை பேணுதல், விடுமுறை பதிவுகளை வருடாந்த பணிக்கொடைக்காக வழங்குதல், உள்வரவு, வெளிவரவு கடிதங்களை கையளித்தல் போன்ற செயற்பாடுகள் நிர்வாக அலகினால் முன்னெடுக்கப்படுகின்றன.

3.26 உள்ளக கணக்காய்வு செயற்பாடு

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் கீழ் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பிரிவானது வீ.அ.அ.ச யின் தலைவரின் கீழ் வருகின்றது. மற்றும் பிரதிப் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வு அதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அனுசரணை ஊழியர்களின் உதவியுடன் பணிப்பாளர் ஒருவர் இப்பிரிவிற்கு தலைவராகவுள்ளார்.

வீ.அ.அ.ச யினால் இவ்வாண்டுக்கென அனுமதிக்-கப்பட்ட உள்ளக கணக்காய்வு வேலைகள் நடைபெறுகின்றன. நாடு முழுவதிலும் உள்ள வீ.அ.அ.ச யின் இயக்கம் மற்றும் நிதி நடவடிக்கைகளின் அளவு, நிறுவன அமைப்பு கணக்கீடு முறைகள் கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே இத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றது.

3.25.1 உள்ளக கணக்காய்வு செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகள்

- நிறுவனத்தின் நற்பயன் அழிக்கக் கூடிய நோக்கத்தினை நிறைவேற்றுதல் மற்றும் வீ.அ.அ.யில் திறமையான முறையின் ஊடாக வீ.அ.அ.யின் கொள்கைகளை சக்தி மிக்கதாக பிரயோகிப்பதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
- நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தினை அதிசக்தி மிக்கதாகவும் மற்றும் பொருளாதார முறையிலும் நிறுவன ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டமிடல் வேலைகளை உள்ளக் கணக்காய்வு பிரிவின் வேலையாகும்.
- மோசடி மற்றும் தவறுகளை துப்பறிந்து மற்றும் தடுப்பதற்காக போதுமான அளவு உள்ளக சரி பார்த்தல்களை கண்டுபிடித்தல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு இயக்கத்தினையும் சுதந்திரமாக மதிப்பீடு செய்வதற்கு சுகந்திரமான செயலாற்றுகை.
- நிறுவனத்திலுள்ள முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகளை மீளாய்வு செய்தல்.
- முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்கு முறைகளில் உள்ள பலவீனங்கள் குறைபாடுகளை இணங்கண்டு அவற்றை முன்னேற்றுவதற்கான சிபாரிசுகளைச் செய்தல்.
- கணக்காய்வின் நோகத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் வீழ்ச்சி அடைந்த கணக்காய்வு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய பகுதியில் தேவையான கணக்காய்வுடன் தொடர்பான கணக்காய்வு தொழில்நுட்பம் மற்றும் இந்த நோக்கம் மற்றும் தொழில்நுட்பத்தினை வைத்து விபரக் கணக்காய்வு நிரலை தயாரித்தல்.
- வீ.அ.அ.ச யினால் பராமரிக்கப்படும் கோவைகளை பூர்த்தி செய்தலும் சரியானது என்பதை உறுதிப்படுத்தலும் மற்றும் நிதிப் பிரிவினால் கொடுக்கப்படும் தகவலின் உண்மைகளை ஆராய்தல்.
- ஊழியர்களின் செயல்திறன்களின் தரத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களின் செயற்பாட்டை உறுதிப்படுத்தல்.
- நடாத்தப்படும் புலன்விசாரணை மற்றும் ஒவ்வொரு கணக்காய்வினதும் அறிக்கைகள் தலைவருக்கு கொடுத்தல் மற்றும் வீ.அ.அ.யின் நோக்கங்களை அடைவதில் செயற்பாட்டு முகாமைத்துவ உபகரணமாக உள்ளகக் கணக்காய்வு பிரிவு பயன்படுவதை உறுதிப்படுத்தல்.
- அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் மூலம் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு தேவையான தகவல்களை வழங்கல்.
- பல்வேறு வகையான இழப்புக்களில் இருந்து வீ.அ.அ.ச யின் சொத்துக்கள் எந்தளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை கண்டறிதல்.
- நேரத்திற்கு நேரம் அரசினால் வெளியிடப்படும் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் மற்றும் வீ.அ.அ.யின் நிர்வாக மற்றும் நிதி விதிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை கண்டறிதல்.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தொழில் சார்ந்த அர்ப்பணிப்பை மற்றும் சுதந்திரத்தைப் பராமரித்தல்.
- வீ.அ.அ.ச யின் முகாமைத்துவ குழு மற்றும் அதனுடன் தொடர்புடைய கணக்காய்வை ஒருங்கிணைத்தல்.
- செயற்த்திட்டங்களை பரீட்சித்தல் / வேலையை பரீட்சித்தல் ,ஊழியர் பயன்பாடு ,இருப்பு கட்டுப்பாடு போன்றவை
- வீண்விரயம் மற்றும் போலித்தாள்களுக்கு அறிக்கைகள் மற்றும் வீண்வரயம் மற்றும் போலித்தாள்களை தடுப்பதற்கு உதவுதல்.

அட்டவணை இல. 59: 2015 ஆம் ஆண்டிற்கான திட்ட வேலைகளின் கணக்காய்வில் அமுல்படுத்தப்பட்டவை

	திட்டமிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் எண்.	*நிறைவு செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் எண்.*	*வீதம் (%)*
மாகாண பணிப்பாளர்களின் காரியாலயம்	10	10	100%
பிரதான பொறியிலாளரின் காரியாலயம்	20	20	100%
நிறைவேற்று பொறியியல் காரியாலயம்	29	29	100%
கள கணக்காய்வு – மாவட்டம்	09	09	100%
CE செயற்த்திட்ட காரியாலயம்	04	04	100%
அஸ்போல்ட் ஆலை	06	06	100%
LBF செயற்த்திட்டம்	12	12	100%
கடுகதிப்பாதை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்தவ பிரிவு (EOM&M)	12	12	100%
வீ.அ.அ.ச பிரிவுகள்	08	08	100%
நிதிப்பிரிவு	12	12	100%
விசாரணை	-	14	-
மொத்தம்	***122***	***136***	

அத்தியாயம் 4 –
2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான முன்னேற்ற தடைகள்

நாட்டின் முக்கியமான அதிகாரசபையாக நெடுஞ்சாலை உள்ளதுடன், தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளதுடன், புதிய பாலங்கள், நெடுஞ்சாலைகள் திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தையும் கொண்டுள்ளதுடன், செலவு மிக்க கடுகதிப் பாதை வலையமைப்பினையும் கொண்டுள்ளது. வீ.அ.அ.ச 2014 ஆம் ஆண்டில் அதன் நடவடிக்கைகளை திருப்திகரமாக மேற்கொண்டது. வீ.அ.அ.சபையானது உரிய வளர்ச்சிக்கான நோக்கங்கள் மற்றும் அடைவுகளை நிரப்பும் போது முட்டுக்கட்டையாக பலதரப்பட்டட தடைகள் வந்தன. இருந்தாலும் 2014 இல் பலதரப்பட்ட தடைகள் வீ.அ.அ.யின் வருடாந்த நிகழ்ச்சி வளர்ச்சியில் தாமதம், மறுத்தல் மற்றும் எதிராக வருதலில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நிதி நிலமை, சமூக நிலமை, காலநிலை, இயற்கை போன்ற காரணங்களினாலேயே இந்தத் தடைகள் உருவாக்கத்திற்கான காரணங்கள் ஆகும். இது தடுத்தல், விளக்கப்படுதல் அல்லது தீர்வாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் திருப்திகரமற்ற கையாளுகைகள் ஆகும்.

4.1 வீதி மற்றும் பால வேலைகளை அமுல்படுத்துதல்

4.1.1 வீதி மற்றும் பால வேலைகளின் அமுல்படுத்தலில் பின்வரும் தடைகளுக்கு முகம் கொடுக்கப்பட்டது.

வீதி மற்றும் பால வேலைகளை அமுல்படுத்துதலானது பின்வரும் தடைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

- பிரதான தடையாக அமைவது என்னவென்றால் திறைசேரியில் இருந்து உரிய ஒதுக்கீடு பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதம், இதன் விளைவாக ஒப்பந்தக்காரர்களின் மாதாந்த வேலைப் பற்றுச்சீட்டுக்கள் உரிய நேரத்தில் செலுத்த முடியாமல் போனது. இது இரு செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை பாதிப்பதுடன், ஒப்பந்த செலவுகளை அதிகரித்துள்ளது.
- நிலத்தை சுவீகரிப்பதற்கு மேலதிக காலம் பெற்றுக் கொண்டமை செயற்திட்டத்தை அமுல் படுத்துவதில் தேவையற்ற தாமதத்தை ஏற்படுத்தியது.
- பயன்பாட்டுச் சேவையில் இடமாற்றத்தில் ஏற்பட்ட தாமதமானது செயற்திட்டத்தை அமுல்படுத்துதலின் தாமதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

- குறிப்பிட்ட பகுதியில் இடம்பெறும் ஏனைய அபிவிருத்தியின் தேவைப்பாடுகளை இதனுள் உள்ளடக்கி வேலைப் பரப்பை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையானது ஒரு தடையாக இருந்தது.
- வேலைத் தளங்களில் எதிர்பாராமல் நிலத்தின் தன்மையில் ஏற்பட்ட மாற்றமானது தாமதத்திற்கு காரணமாக அமைந்தது.
- மோசமான கால நிலையும் கூட செயற்திட்ட அமுல்படுத்தலின் பாதிப்பினை ஏற்படுத்தியது.

4.1.2 முன்மொழியப்பட்டு எடுக்கப்பட்ட தீர்வுகள்

ஒப்பந்தக்காரர்களுக்கு காலத்தை நீடித்து கொடுப்பதுடன், குறிப்பிட்ட ஒப்பந்தங்களின் உறுப்புரி மைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் நீடிக்கப்பட்டதற்கான செலவு கள் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்படவில்லை.

4.2 காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல்

4.2.1 2014 இல் காட்சியளிக்கப்பட்ட கட்டாயப்படுத்தல்கள்

வீ.அ.அ.ச யின் ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் காணிப் பிரிவின் ஊடாக பாரிய அபிவிருத்தி நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதன் முக்கிய பாத்திரத்தை இப்பிரிவு கொண்டுள்ளது. சில தோல்விகள் அவதானிக்கப்பட்டன. அவை போத்தலின் தலை வடிவங்களின் முறையாகும். செயற்பாட்டின் கீழே இந்த விடயங்கள் அதிகமான முறையை ஏற்படுத்துகின்றன மற்றும் அவை சம்பந்தமான விடயங்கள் பின்வருமாறு:

இந்த ஆண்டு காலப்பகுதியில் எதிர்கொண்ட சிரமங்கள்

வீ.அ.அ.சபையின் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்திக்கு காணிப் பிரிவின் ஊடாக முக்கிய பாத்திரத்தை செயற்படுத்துகின்றது. சில தோல்விகள் அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டின் கீழே இந்த விடயங்களை அதிகமான முறையை ஏற்படுத்துகின்றன மற்றும் அவை சம்பந்தமான விடயங்கள் பின்வருமாறு.

- வீதிப் பிரிவுகளுக்கு தற்போது தேவைப்பாடாகவுள்ள சட்டங்களின் புதுப்பித்தலில் உள்ள பலவீனம்.
- இருப்பு உரிமையாளர்களினால் கொடுக்கப்படும் குறைவான முதன்மை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, மதிப்பீட்டுத் திணைக்களம், ஆராச்சித் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயங்கள் சில செயல்முறை நடவடிக்கைகளுடன் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றது.
- சொத்து, வடிவமைப்பு, பராமரிப்பிற்காக கணினி வலைப்பின்னல் முறை, தரவுகளினை தேடும் முறை மற்றும் கையாளுதல்கள் இப்பிரிவிற்குள் குறைவான நிலமையில் உள்ளது.

- பிரதேச செயலகம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான பயிற்றப்பட்ட ஊழியர், தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பற்றாக்குறை.
- நஷ்டஈட்டுக் கொடுப்பனவிற்காக குறைவாகவுள்ள நிதிகள் மற்றும் சிக்கலாகவுள்ள காணி உரிமை, அதற்கான சட்ட அமுலாக்கல்களின் பிரச்சினை மற்றும் நீதிமன்றங்களுடன் இணைந்து உரிமையாளர்களை சரி பார்த்துக் கொள்ளலில் உள்ள சிக்கல்.

4.2.2 சரி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

இச்சூழ்நிலைகளைக் குறைப்பதற்கு காணிப் பிரிவினால் எடுக்கப்பட்ட முன்மொழிவுகள் பின்வருமாறு:

- ஏனைய திணைக்களங்களுடன் சிநேக பூர்வமான நட்புடன் இருத்தல் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயத்துடன் சீரான ஊக்கமூட்டும் யோசனைகள் மற்றும் சாத்தியப்படும் போது ஏனைய தேவையான வளங்களை வழங்கல்.
- தொடர்புபட்ட உறுப்பினர்களின் செயல்முறைகளை கண்காணித்தல் மற்றும் பராமரித்தல் (பிரதேச செயலாளர், மதிப்பீட்டுத் திணைக்களம், ஆராச்சித் திணைக்களம்).
- உள்ளூர் அதிகாரசபையுடன் ஒரு நிலையான பங்காளியின் ஊடாக காணி சுவீகரிப்பு தகவல் முறைமை மற்றும் தகவல் தரவுகள் தயாரிக்கப்பட்டன. இலகுவான கையாளுகை க்கும் காணிப் பிரிவில் பதிவுகளை தேடுதல் ஆகும்.
- உரிமையாளர்களை அடையாளம் காண்பதற்கு சொத்துக்களை புதுப்பித்தல் (வீ.அ.அ.ச யினால் குடியேற்றப்பட்ட காணிகள்) மற்றும் வீ.அ.அ.ச க்கு உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- காணி சுவீகரிப்பதற்கான பாகம் 44 பிரசுரித்தல்.

4.2.3 முன்மொழியப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள்

மேலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்ட நிலமைக்கு கொண்டுவர பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

- வீ.அ.அ.ச யின் காணிப் பிரிவின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் அனைத்து செயற்திட்டங்களிற்குமான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.
- GIS வசதிகளுடன் ஒருகிணைந்த முறைமையினை வீ.அ.அ.ச தவிர்ப்பதற்காக அனைத்து காணிச் சுவீகரிப்புகளுக்குமாக காணிப் பிரிவில் மத்திய தகவல் மற்றும் காணிச் சுவீகரிப்பு தகவல் முறை ஸ்தாபிக்கப்பட்டது.
- IT கொள்ளளவை முன்னேற்றுதல்.
- தேவையாகவுள்ள பதவிகளை நிரப்புதல் விசேடமாக காணி உத்தியோகத்தர்கள் போன்றவை. தற்போது தேவைப்பாடாகவுள்ளதற்கு அமைவான திறனான செயற்பாட்டை செய்தல்.

4.3 வீதிகளின் நிலைமை பற்றிய தரவுச் சேகரிப்பு மற்றும் மதிப்பீடு

4.3.1 MFNSV மற்றும் FWD அளவையியலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

MFNSV மற்றும் FWD அளவையியல் சிக்கல்கள்.

அளவையியல் தாமதங்கள்

4.3.1.1 MFNSV

- MFNSV வாகனத்தின் தேய்ந்து போயிருந்த சக்கரத்தொகுதியினை மாற்றுதல்
- தவணைக்காலத்து பராமரிப்பு பொருட்கள் (அதர்ச்சி உட்கவரி, தடுப்புக்கருவி, தடுப்புத்தகடு, ஒலி பெருக்கி) அடையாளம் காணப்பட்டு அவை மாற்றப்பட்டன
- அன்மையில் MFNSV காப்பு வாகனத்தின் தடுப்பு உடைந்தது.

பரிகார அளவீடுகள்

- அளவையியல் வாகனத்துக்கான புதிய சக்கரத்தொகுதியை பொருத்துதல்
- தவணைக்கால பராமரிப்புக்குரிய இணங்காணப்பட்ட பொருட்களை (அதர்ச்சி உட்கவரி, தடுப்புக்கருவி, தடுப்புத்தகடு, ஒலி பெருக்கி) போன்றவற்றை DIMO இனால் மாற்றுதல்.
- தற்காலிக திருத்த வேலைகள் செய்யப்பட்டன. ஏவ்வாறாயினும் அளவையியல் வேலைகள் 46 நாட்கள் காப்பு வாகனம் உடைந்ததால் தாமதமாகியது.

4.3.1.2 FWD

- FWD யின் நீரியல் முறைமையில் ஏற்பட்ட பிரச்சினைகள்.
- FWD யின் கட்டி இலுக்கும் வாகனத்தில் ஏற்பட்ட பிரச்சினை – தடுப்புப்பணி முறைமையின் குறைபாடு

பரிகார அளவீடுகள்

- வழங்குனரிடம் இருந்து மேலதிக தடையை ஒன்று வேண்டப்பட்டது. சுவீடனிருந்து வழங்குனர் அதனை பெற்றுத்தர 9 நாட்கள் எடுத்தன.
- FWD யின் கட்டி இலுக்கும் வாகனத்திலிருந்த பிரச்சினை-தடுப்பு பணிமுறைமையின் குறைபாடு பல முறை திருத்தம் செய்யப்படும். அப்பிரச்சினை தொடர்கிறது.

பரிந்துரைகள்

- MFNSV மற்றும் FWD யிற்கான மேலதிக அளவையியல் குழு ஒன்றைப் பயிற்றுவித்தல். ஏனெனின் சிலவேளை ஏற்கனவே உள்ளவர்கள் இடமாற்றம் / ஓய்வுக்கு உட்படலாம்.
- FWD இயந்திரத்துக்கு உரிய இலுக்கும் வாகனமொன்றை தயார்படுத்தல்
- MFNSV அளவையியல் வாகனத்துக்கு பொருத்தமான காப்பு வாகனமொன்றை தயார்படுத்தல்.

4.3.1.3 தரவுப்பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

- வேறு பிரிவாக பார்க்கக்கூடிய வாடிக்கையாளர் சூழலில் வேலை செய்ய முடியாமை. இதற்கு காரணம் வீ.அ.அ.ச யின் புதிய கட்டிடத்தின் வலைதளப்பிரச்சினை.
- இணைய வசதியின்மையால் SLRAMS இனை அடிப்படையாகக்கொண்ட புதிதாக விருத்தி செய்யப்பட்ட வலைதளத்தை பயன்படுத்துவதில் உள்ள பிரச்சினை.
- பணியாளர் குழுப்பற்றாக்குறை
- புதிய SLRAMS ஆனது அதன் சேவை வழங்குனரோடு பராமரிப்புடன் படிக்கையில் ஈடுபடல்.

பரிகார அளவீடுகள்

வீ.அ.அ.ச முகாமைத்துவத்திலிருந்து காலத்திற்கு காலம் திட்டமிடல் பிரிவின் வேண்டுகோளுக்கேற்ப தேவையான வளங்கள் வழங்கப்பட்டன.

- அதன்படி வீ.அ.அ.ச ஆனது உலக வங்கியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து உதவும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனோடு விசாலமான பல்பயன்பாடுடைய வலைத்தள அடிப்படையிலான சொத்து முகாமைத்துவ முறைமை விருத்தி செய்யப்பட்டது.
- இவ் ஆலோசனையின் கீழ் திட்டமிடல் பிரிவுக்கு தரவு களஞ்சியப் படுத்துவதற்காகவும் பகிரவுமாய் பின்வரும் பொருட்கள் கிடைக்கப்பெற்றன.

ரேக் மவுன்ட்டபில் NAS சர்வர்	-	1 எண்
TB NAS வண்தட்டுக்கள (உருப்படி இல.1 உள்ளே கட்டமைக்கப்பட்டுள்ளது)	-	8 எண்
NAS பெட்டிகள்	-	10 எண்
3TB நிலையான வண்பொருள்	-	10 எண்

- மேலும் RSAP செயற்த்திட்டத்தினூடு திட்டமிடல் பிரிவின் தரவுச் செயன்முறை அலகிற்காக பின்வரும் கணனிப்பாகங்கள் கிடைத்தன

UPS உடன் இரட்டை திரை கணனிகள்	-	5 எண்
கலர் பிரின்டர் வசதியுடன் பலதரப்பட்ட நடவடிக்கை நகல்	-	1 எண்
மேசைக் கணனிகள்	-	3 எண்
மடிக் கணனி (தலை அலகு)	-	1 எண்

- வீ.அ.அ.ச முகாமைத்துவம் இவ்அலகினை கொண்டு செல்லவும் உருவ பகுப்பாய்வு வேலைகளுக்காகவும், கள வேலைகளுக்காகவும் நான்கு அலுவலர்களை (ஒரு தொழில்நுட்ப உதவியாளர், ஒரு போக்குவரத்து விபரம் சேகரிப்பவர், இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள்) நியமிக்கப்பட்டனர்.ஒரு சிரேஷ்ட போக்குவரத்து அளவையாளர் நாலந்தாவிலுள்ள நிர்வாக பொறியியலாளர் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.
- திட்டமிடல் பிரிவு SLRAMS இன் பராமரிப்பு உதவி பற்றிய முன்மொழிவொன்றினை சேவை வழங்குனரிடம் இருந்து வேண்டி அதனை பொதுப்பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவிற்கு அவர்களது மதிப்பீட்டிற்காக அனுப்பியது.

4.3.1.4 SLRAMS இன் வெற்றிகரமான இயக்கத்திற்கான பரிந்துரைகள்

- சொத்து முகாமைத்துவத்தினை தியாக மனப்பாங்குடன் இயங்கும் தொழிலாளர் குழாம் ஒன்றினால் தொடர்ந்தும் கொண்டு செல்லப்பட வேண்டும் (பணிநிலை அனுமதியுடன்)
- SLRAMS இன் வினைத்திறனான முகாமைத்துவத்துக்கு அதிவேக இணையத்தொடர்பு (இலங்கை அரசின் இணையம் - LGN) வீ.அ.அ.ச தலைமை அலுவலக கட்டிடத்தில் அவசியமாகும்.
- இம்முறைமைக்கு வரையறுக்கப்பட்ட பாவனையாளர் அணுகல் மட்டம் தேவை.
- SLRAMS முறைமையில் வீதி வலையமைப்பின் வெளிசார் தரவுகள் ஒழுங்கான அமைப்பில் சேகரிக்கப்பட வேண்டும். (GIS மென் பொருளிற்கான அனுமதிப்பத்திரம் கொள்வனவு செய்யப்படல்)
- SLRAMS இன் ஒவ்வொரு தொகுதிகளுக்குமான தரவு சேகரிப்பின் போதும் வழிகாட்டுதல்கள் பொறிமுறைகள் வழங்கப்பட வேண்டும்
- தரவு சேகரிப்பு, முறைமை பதிவேற்றம் மற்றும் செயலாக்கம் பற்றி உரிய பணியாளர் குழாமிற்கான பயிற்சி

4.4 முகாமைத்துவ தகவல் முறைமையை பராமரித்தல்

பராமரிப்பு முகாமைத்துவ தகவல் முறைமையுடன் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் தடைகள் ஏற்பட்டது.

- 2015 புரட்டாசி புதிய தலைமைக்காரியாலய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதில் இருந்து வலைப்பின்னல் உட்கட்டமைப்பு மற்றும் சேகரிப்பு முகாமைத்துவ அறை நேர ஒழுங்கிய கருத்தில் கொள்ளப்பட்டது.
- எல்லாப் பிரிவுகளிலும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுப்பதற்கு அதை பாவிப்பவர்களுக்கு குறைவான ஆர்வம்.
- ∴பைபர் ஆப்டிக் இணைப்பை ஏற்கனவே உள்ள ADSL மின்னஞ்சல் சேவையக இணைப்பை மேம்படுத்த தேவைப்பட்டது (இது www இல் இருந்து மின்னஞ்சல் சேர்வர் அணுகல் எளிதாக செய்யும்)

4.5 இயந்திரவியல் சேவைகள்

4.5.1 2015 இல் தோன்றிய தடைகள்

- வீதிப் பராமரிப்பு வேலைகளுக்கு தேவையான புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டின் பற்றாக்குறை.
- வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் இயந்திர வேலைகளில் உள்ள கொடுப்பனவில் உள்ள தாமதம்.
- வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் 1500 தொகுதிகளுக்கு அதிகமான திருத்த வேலை மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு இருக்கும் கேள்விகளுக்கு முகம் கொடுப்பதற்கு பின்வரும் வசதிகளில் குறைவுகள் காணப்படுகின்றன.
    - ஒவகெடகிரேன், ஜெரல்ட்கொஸ்ட் போன்ற விசேட உபகரணங்கள்
    - வேலைத் தளத்தில் களஞ்சிய வசதிகள்
- அன்றாட பராமரிப்பு சிறிய திருத்த வேலைகள் போன்ற போக்குவரத்துப் பிரிவில் கையாளு வதற்கு தேவையான ஒரு இயந்திரவியல் மேற்பார்வையாளர்களின் தேவைப்பாடு.
- திறனற்ற இயக்குனர்கள் பாத குறியீட்டு இயந்திரம், அமுக்கும் இயந்திரம் அண்ட வைக்கும் இயந்திரம் போன்ற இலகு இயந்திரங்களில் அந்த குறித்த பகுதியில் இயக்குனர் சிறுதேவை இல்லாத திருத்த வேலைகள் அல்லது குறைவான பாவனை என்பவற்றுக்கு இட்டுச் செல்கின்றது.

- அங்குலான வேலைத்தளத்தின் கூரையில் அரிக்கப்பட்ட இரும்பு ஆக்சைட்டு துகள்கள் கீழே விழுவதை புனரமைக்க தேவைப்பட்டது மற்றும் இத்தளத்தின் கீழ் தட்டில் உள்ள ஊழியர்களிற்கு இத்திருத்த வேலை தொந்தரவாகவும் பாதுகாப்பு இன்மையாகவும் இருந்தது.

4.5.2 முன்மொழியப்பட்ட தீர்வுகள்

- அங்குலான வேலைத் தளத்தில் வேலைத் தளத்தின் வசதிகளை புதுப்பிப்பதற்கு மற்றும் வீதிப் பாராமரிப்பிற்கான வேலைகளுக்கான உபகரண பெறுகைக்காக வரவு செலவுத் திட்டத்தில் போதுமான அளவு நிதியளிப்பிற்கு பேரம் பேசுதல்.
- பராமரிப்பு, தளத் திருத்தங்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் சம்பந்தமான கொடுப்பனவுகளைக் கையாளுவதற்கு நிதிப் பிரிவில் ஒரு கணக்காளரை நியமிக்க.
- போக்குவரத்துப் பிரிவு, வேலைத் தளம் மற்றும் இயந்திரவியல் பிரிவுகளை உறுதிப்படுத்து வதற்கு பின்வரும் ஊழியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
    - வேலைத் தளத்திற்காக கணனி இயந்திரங்கள் 01 ஆங்கில தட்டெழுத்து
    - 03 இயந்திரவியல் மேற்பார்வையாளர்
    - 01 கணக்கு உதவியாளர்
    - 02 முகாமைத்துவ உதவியாளர்கள்
    - 01 களஞ்சியக் காப்பாளர்
    - 05 இயந்திரவியலாளர்கள்
    - 01 தன்னியக்க மின்சாரவியலாளர்
    - 02 சேவை மனிதர்
    - 05 மெக்கானிக் உதவியாளர்
- அநுராதபுரம் வேலைத் தளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் அதிகாரிகள் நியமித்து இருக்கப்படல் வேண்டும்.
    - 01 இயந்திரவியல் பொறியியலாளர்
    - 01 இயந்திரவியல் மேலதிகாரி
    - 06 இயந்திரவியலாளர்கள்
    - 02 மின்னியலாளர்
    - 04 உதவியாளர்கள்
    - 01 களஞ்சிய மனிதன்
    - 02 முகாமைத்துவ உதவியாளர்கள்
    - 03 சாரதி
    - 02 எந்திர விளைஞர் / ∴பிட்டர்

- வழமையான பராமரிப்பு மற்றும் இயக்கத்தில் பிரிவுகளில் உள்ள இலகு உபகரணங்களை இயக்குபவர்களிற்காக முழு பயிற்சித் திட்டத்திற்கான ஏற்பாடுகள் அல்லது திறமையாக இயக்குபவர்களை முன்மொழிகின்றோம்.
- போக்குவரத்து பிரிவில் ஒன்று திரட்டப்பட்டுள்ள வாகனங்களின் சிறிய பழுதுகளை கையாளுவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் சிறிய பழுதுகளை கையாளுவதற்கு இயந்திரவியல் பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து வழமையான பராமரிப்பு இயந்திரவியல் மேலதிகாரி ஏற்பாடு செய்ய நாங்கள் முன்மொழிந்துள்ளோம்.
- ஒவ்வொரு மாகாணத்தில் சிறிய பழுதுகளை கையாழ்வதற்கு இயந்திரவியல் பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து வழமையான பராமரிப்பு
- ஒவ்வொரு மாகாணத்தில் சிறிய பழுதுகள் மற்றும் வழமையான பராமரிப்புக்களை கையாளுவதற்கு இயந்திரவியல் பிரிவுகளுடன் மற்றும் அங்குலான வேலைத்தளம் ஒருங்கிணைந்து செயற்படும் நோக்கத்திலும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் மற்றும் வேலைத் தளங்கள் சம்பந்தமான பழுதுகளை நோக்கமாகவும் கொண்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு உத்தியோகத்தர் (ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்) நியமிக்கப்படல் வேண்டும் என நாங்கள் முன்மொழிந்தோம்.

- வோல்க் பிஹைன்ட் ரோலர்ஸ், பிலேட் கொம்பெக்டேர்ஸ்,கொம்பெக்டர் ரம்மேர்ஸ் க்ராஸ் கட்டேர்ஸ், ச்செய்ன் சோவ் போன்ற இலகு உபகரணங்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பில் ஈடுபடுவதற்கு அஸ்போலட் / தூள் ஆலைத்தளங்களில்.மேற்பார்வை ஊழியர்களின் உரிய நேரத்துடன் தனது சேவைக்கு பெற ஒவ்வொரு பிரிவுக்கும் பங்கீடு செய்ய நாங்கள் முன் மொழிந்தோம்.

- மகநெகுமவிலிருந்து வீ.அ.அ.ச க்கு உடுகாவத்தை வேலைத்தளத்தை எடுத்துக்கொள்ளவும், தேவையான பணியாளர்களை வீ.அ.அ.ச க்கு செயல்படத்தவும்.
- MM பிரிவு அல்லது RBC அலகு ஊடாக வெளி நிதியின் மூலம் உடனடியாக அங்குலான பட்டறை கட்டிடத்தின் கூரையினைப் புதுப்பித்தல்.

4.6 ஆளனி முகாமைத்துவம்

4.6.1 வளர்ச்சியின் தடைகள்

- சம்பள மற்றும் பணி நிலை ஆணைக்குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட இடைஞ்சல் காரணமாக புதிய SOR யை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம்.

- SOR வரைபில் சங்கங்களின் ஆட்சேபனைகள் மேலும் புதிய SOR இனை அமுல்படுத்து வதில் தாமதத்தை ஏற்படுத்தியது.
- வருடாந்த இடமாற்றலை நடைமுறைப்படத்தலில் தாக்கம் செலுத்தும் சில கட்டுப்படுத்த முடியாத காரணங்களை வீ.அ.அ.ச எதிர்நோக்குகிறது.
- உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மற்றும் திணைக்களங்களிற்கு விண்ணப்பங்களை அனுப்புவதில் உள்ள தாமதம்.
- முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கிடைப்பதால் ERD ற்கு கடிதங்களை அனுப்புவதில் உள்ள கடினம்.
- விபத்துக் கொடுப்பனவுகள் மற்றும் ஆடைக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதில் உள்ள தாமதம்.இதற்கு காரணம் கௌரவ பிரதம அமைச்சரின் தாமதிக்க அனுமதி
- விண்ணப்பங்களில் போதிய தகவல்கள் வழங்கப்பட்டதனால் பரிந்தறைகள் மற்றும் விண்ணப்பங்களை அனுப்புவதில் உள்ள தாமதம்.
- நிர்வாகப்பணிப்பாளரின் ஓய்வின் பின்பு அவ்விடம் பிரிதொரு பதவியியல் நிர்வாகப்பணிப்பாளரினால் நிரப்பப்படாது பதில் நிர்வாகப்பணிப்பாளர் ஒருவர் 2015 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். ஆவர் ஒரே நேரத்தில் பிரிவுகளையும் நிர்வகிக்க வேண்டி இருந்தது.

அத்தியாயம் 5 –
2015 ஆம் ஆண்டின் வெளிநாட்டின் உதவியால் செயற்படுத்தப்படும் திட்டம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அமைப்பின்படி அதன் செயல்நோக்கம், செயற்பணி இலக்குகள் மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை அணுகுவதற்காக திட்டத்தை நடைமுறைப் படுத்தும் அலகு வெளிநாட்டின் உதவியினால் பாரிய திட்டம் செயல்படுத்தப் படும். தேசிய நெடுஞ்சாலைத் தொகுதியின் தரத்தை மேலும் அபிவிருத்தி செய்தலும் நெருக்கடியைக் குறைப்பதற்காக திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பகுதிக்கு பொறுப்பளிக் கப்பட்ட நெடுஞ்சாலை பாலத் திட்டங்களை செயற்படுத்தல்.

திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிக்கு (PMU) வெளிநாட்டு உதவியின் மூலம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கடுகதிப் பாதை, நெடுஞ்சாலை பாலத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். ஒவ்வொரு திட்ட நடைமுறைப்படுத்தல் பகுதியும் பணிப்பாளர் ஒருவரின் பொறுப்பில் செயற்படுத்தப்படுவதுடன், நேராக துறைமுக நெடுஞ்சாலை அமைச்சின் கீழ் நடைபெறும். மேலும், திட்டத்தின் செயற்பாடுகள் உயர்மட்டத்தில் செயற்படுத்துவதற்காக உதவிப் பணிப்பாளர் ஒருவரும் பொறியியலாளர்களும் உதவிக்காக செயற்குழு ஒன்றும் அவர்களுக்கு சிறப்பான உதவியை அளிப்பார்கள்.

PMU இன் பிரதான நடவடிக்கைகள் வருமாறு

- செயற்திட்டக் கடன்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நன்கொடை முகவருடனான உதவிகளுடன் தொடர்புபட்ட நடவடிக்கை.
- சிவில் வேலை ஒப்பந்தங்கள் மற்றும் ஆலோசனைகளுடன் இணைந்த பெறுகை நடவடிக்கைகள்.
- காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம்.
- நஷ்டஈடு மற்றும் மீள்குடியேற்ற கொடுப்பனவுகள்.
- ஏனைய நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு.
- ஒப்பந்தக்காரர் மற்றும் ஆலோசகருக்கு இடையிலான ஒருங்கிணைப்பு.
- மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை (CEA) தேவைகளுக்கு அமைய சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தைத் தயாரித்தல் (EMP).
- செயற்திட்டங்களிற்கான மீள்குடியேற்ற அமுல்படுத்தல் திட்டத்தைத் தயாரித்தல்.

- பாதிக்கப்பட்ட வீட்டுப் பகுதியினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப் பட்டது.
- செயற்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பகுதியினர்களுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகளை முகாமைத்துவப்படுத்தல்.
- உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை பெறுவதன் ஊடாக தனிப்பட்ட ஒப்பந்தங்களின் பிரச்சினைகள், வசதி செய்து கொடுத்தல் தொடர்பான தீர்மானங்களை இனம்கண்டு வளர்ச்சியினை குறித்த காலங்களில் மீளாய்வு செய்தல்.
- தொழில்நுட்ப செய்கைகள் அறிக்கையின் ஒழுங்கு முறைகளை அமுல்படுத்தல்.
- செயற்திட்ட நிதி திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தினைத் தயாரித்தல்.
- வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு, பொறியியலாளர் மதிப்பீடு, மாதாந்த வளர்ச்சி அறிக்கைகள் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்.
- செயற்திட்டங்களின் ஆலோசனைச் சேவைகளைக் கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம்.
- சிவில் வேலைகள் ஒப்பந்த செயற்திட்டங்களின் கொடுப்பனவு சான்றிதழ், கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம்.
- ஒப்பந்த சேவைகளின் ஆலோசனைக்கு நீடிப்பு, திருத்தம் மற்றும் மதிப்பீடு.
- சிவில் வேலை ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட நேர நீடிப்பு மற்றும் செலவு வேறுபாடு களிற்கு அனுமதி.
- பயன்பாட்டு முகவர்கள், மேலதிக வளங்கள் திணைக்களம், வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் நன்கொடை முகவர்களுடனும் ஏனைய ஒருங்கிணைப்புக் கூட்டம் மற்றும் மாதாந்த இயக்க குழுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்.
- PMU வினால் கையாளப்பட்ட மனித உரிமைகள் வழக்கு மற்றும் சட்ட விடய செயற்திட்டங்களில் பிரசன்னமாதல்.

5.1 தெற்கு போக்குவரத்து அபிவிருத்தித்திட்டம்.

ADB, JBIC, NDF, SIDA மற்றும் GOSL யினால் நிதியிடப்பட்ட பலதரப்பட்ட செயற்த்திட்டப்பாகங்கள் உள்ளடங்களாக தெற்கு போக்குவரத்து அபிவிருத்தித்திட்டம் உள்ளது. விவசாயம், மீன்பிடி, உள்ளாசத்துறை மற்றும் கைத்தொழில்களின் வளரச்சியை ஊக்குவிப்பதினால் தென்மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திற்கு உதவுவதே இச் செயற்த்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தென்மாகாணத்தின் தலை நகரத்தின் காலி நெடுஞ்சாலையிலிருந்து வீதி அணுகுகையுடன் தென்மாகாணத்தின் மாத்தறை – கொழும்பு பெறு பாகங்கள் கொட்டாவையில் இணைகின்ற, நெடுஞ்சாலை கட்டுப்பாட்டு அணுகுகை இலங்கையில் முதலாவதாக செயற்த்திட்ட உற்பத்தி கொள்கையாகும். 11 இடைமாற்றங்கள் ஊடாகவே மாத்திரம் கடுகதிப்பாதைக்கு அணுகுகை இவை நெடுஞ்சாலைகள் / பாரிய வீதிகள் எங்கே கடுகதிப்பாதையை ஊடறுக்கின்றதோ அவை அமையப்பெற்ற இடங்கள் ஆகும்.

படம் 7: தெற்கு கடுகதிப்பாதை



5.1.1 தற்போதைய நிலைமை

செயற்த்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் 2003 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.அதிவேக பாதையின் கொட்டாவையிலிருந்து பின்னதூவை வரையிலான தொகுதி (95.3 கி.மீ) மற்றும் மேலதிக காலி துறைமுக வீதி (5.8 கி.மீ) ஆகியவற்றுக்கான தொடக்க வேலைகள் 2011 ஆம் ஆண்டு கார்த்திகை 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வீ.அ.அ.ச பின்னதூவையிலிருந்து கொடகமை மற்றும் காலி மேலதிக துறைமுக வீதி என்பவற்றின் எஞ்சிய வேலைக்கான ஒப்பந்தத்தை சீனா தேசிய தொழில்நுட்ப எற்றுமதி மற்றும் இறக்குமதி கூட்டுத்தாபனத்தக்கு (NTIC) இரண்டு ஒப்பந்தங்களையும் 2010 ஆம் ஆண்டு ஆனி 11 ஆம் திகதி ஒப்படைத்தது. அதில் ஒரு முதலாம் ஒப்பந்தம் பின்னதூவையில் இருந்து கொகொட 30+800 முதல் 45+000 மற்றும் கொடகொடயிலிருந்து கொடகமை 45+000 முதல் 61+050 மேலதிக காலி துறைமுக வீதியின் எஞ்சிய வேலைகள் (0.0 இலிருந்து 4.285 கி.மீ) சீனாவில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியின் நிதிப்படுத்தலின் உதவியினூடு ஆரம்பித்தது. இவ்விரய்டு ஒப்பந்தங்களினதும் மூலக்கடன் தொகையின் 85% 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி காலாவதி திகதியாக குறிப்பிடப்பட்டிருப்பினும் தற்போது அது 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை முழு வசதிகளையும் அளிப்பதற்காக விரிவாக்கப்பட்டது.

இவ்விரு ஒப்பந்த பொதிகளும் சிவில் வேலைகள் மற்றும் அதனுடன் இனைந்ததான ஏனைய வேலைகளையும் உள்ளடக்கி இருப்பதோடு பகுதியளவில் பூரணப்படுத்தப்பட்டிருந்த இரண்டு அதிவேக பாதைகள் பின்னதூவையில் இருந்து கொடகமை, நான்கு வீதத் தொடர் வசதிகளை ஏற்படுத்துவதோடு காலி மேலதிக துறைமுக வீதி மற்றும் சுமார் 28.8 கி.மீ உள் வீதி மேம்படுத்தல் வேலைகள் ஆகியவற்றை பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டது.

ஒப்பந்தக்காரர் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை 2014 ஆம் ஆண்டு பங்குனி 14 ஆம் திகதி பூரணப்படுத்தியதுடன் அதிவேகப்பாதையின் பின்னதூவையிலிருந்து கொடகமை தொகுதிக்கான வேலைகள் 2014 ஆம் ஆண்டு பங்குனி 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

பாகம் கொடகொடயிலிருந்து கொடகம

இத்திட்டத்தை செயற்படுத்திய பின்னர் பின்வரும் நிகழ்வுகள் அடையப்பட உள்ளன.

- தெற்கு பிராந்தியத்தின் அபிவிருத்தியின் எதிர்காலத்திற்கான முன்னேற்றப்பட்ட போக்குவரத்து வசதிகள்.
- செயற்திட்ட செல்வாக்கு மண்டலத்தின் பொருளாதார நடவடிக்கையின் அதிகரிப்பு.
- பொருளாதார அபிவிருத்தி காரணமாக வறுமை ஒழிப்பு.
- மேற்கு கடற்கரையில் மறைந்திருக்கும் சுனாமி தாக்க எதிரான பாதுகாப்பு.
- கொழும்பு – காலி - ஹம்பாந்தோட்டை – வெல்லவாய (A002) நெடுஞ்சாலையின் கோர விபத்துக்களின் குறைவு (பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டியில் செல்வோர் அதிகமாக பாதிக்கப்பட்டவர்களாகும்).
- காலி துறைமுக அபிவிருத்தி.

கட்டுமான ஒப்பந்த நிறைவின் போது, ஏனைய பின்வரும் வீதிகள் மற்றும் தெற்கு கடுகதிப் பாதையை இணைக்கின்ற நேரடியான அல்லது நேரடியற்ற வெவ்வேறான தேசிய வீதிகளிற்கு புனருத்தாபனம் செய்வதற்காக CNTIC ஒப்பந்தங்களிற்கு மதிப்பீட்டு சேமிப்பதற்கு வீ.அ.அ.சபை தீர்மானித்தது. புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றுதல் வேலைகளிற்காக 2014 ஆம் ஆண்டு அமைச்சரவை நியமித்த பெறுகைக்குழு (SCAPC) மற்றும் பெறுகைக்குழு அமைச்சு (MEC) யிடம் இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் பின்வரும் வேலைகளிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

- ஆறு தேசிய வீதிகளிற்கு புனருத்தாபனம்

வீதியின் பெயர்	வீதியின் நீளம் (கி.மீ.)
வெலிகம – கனன்கே வீதி (B465)	9.6
வெலிகம – தெலிஜ்ஜவில வீதி (B466)	7.7
தொரபே - ஹியாரே (B578)	8.7
கொடகம – தெலிஜ்ஜவில(A24)	4.5
யக்கலமுல்லை - இமதூவ வீதி (B238)	6.2
இமதூவ – அஹங்கம வீதி	10

- 0+000 - 0+440 கி.மீ. மீது AA024 இல் இருந்து 4 ஒழுங்கையாக மறுசீரமைப்பு.
- அஹங்கம - இமதூவ வீதி, தொரபே - ஹியாரே வீதி, வெலிகம – கன்னங்கே வீதி, வெலிகம – தெலிஜ்ஜாவில வீதி, கொடகம – தெலிஜ்ஜவில வீதியில் STDP யின் கீழ் தற்போதைய எதிர்கால பழுதுக்கு புனருத்தாபனம் 45.3 கி.மீ. நீளம் மற்றும் நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் பொறுத்துக்கள் அண்ணளவாக 17.6, 4.4, 13.0, 10.3 ஆகும்.

பிரதான சிவில் வேலைகள் ஒப்பந்தத்தில் மேலும் சேமிப்பதன் காரணத்தில் 2015 இல் பிரதான ஒப்பந்தத்திற்கு (பொதிகைகள் 1 மற்றும் 2) மாறுபாடு ஒழுங்கு (UD) என பின்வரும் வேலைகளிற்கான பிரதான ஒப்பந்தங்களுக்கு சேமிக்கப்பட்ட மதிப்பீடுகளை பயன்படுத்த வீ.அ.அ.ச தீர்மாணித்தது.

- மாத்தறை – அகுரஸ்ஸ வீதியில் பால நிர்மானம்
- தொரபே - ஹியாரே வீதியில் பால இல வீதியில் பால நிர்மானம்
- களுவெல்ல – கராபிடிய – லபுதுவ நகராட்சி வீதி (5.6 கி.மீ.) மற்றும் லபுதுவ – தலங்கஹ வீதி (B248) (2.2 கி.மீ.) உடைய புனருத்தாபனம்
- வந்துரப – மாப்பலகம வீதி (14.1 கி.மீ.)
- யக்கலமுல்லை - இமதூவ வீதி (1.735 கி.மீ.)

தொரபே - ஹியாரே வீதி பாலத்தில் பால இல.5/2 Ch 3+880யில் அகலமாக்கல்

வெலிகம – கனக்கே வீதி புனருத்தாபனம் (B465)

அட்டவணை இல. 60: செயற்த்திட்ட விபரங்கள்

விபரங்கள்	JICA PKg.1 கொட்டாவை முதல் தொடங்கொடை	JICA PKg.1 தொடங்கொடை முதல் குருந்துகஹெதெக்ம	ADB பாகம் குருந்துகஹெதெக்ம முதல் பின்னதுவ	பின்னதுவ முதல் மாத்தறை மற்றும் GPAR தெற்கு பாகம்
நன்கொடை	JICA	JICA	ADB	சீன எக்ஸிம் வங்கி
நீளம்	34.4 கி.மீ	31.6 கி.மீ	29.3 கி.மீ	**35.8 கி.மீ**
அசல் கானி எண்ணிக்கை	4	2	2	**2**
திருத்திய கானி எண்ணிக்கை	4	4	4	**4**
ஒப்பந்தக்காரர்	சீன துறைமுகம்	டைசெய்	குமாகை குமி	**சீனதேசிய தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒருங்கினைப்பு**
ஆலோசனை மேற்பார்வை	ஒரியன்டல் ஆலோசனை ஜப்பான்	ஒரியன்டல் ஆலோசனை ஜப்பான்	ரவுடன் UK	**இனைந்த ஆலோசனை RDC/ECC/MG**
ஒப்பந்தம் ஆரம்பம்	19 புரட்டாசி 2005	24 பங்குனி 2006	25 சித்திரை 2003	**பொதி 1,2 – 23** சித்திரை **2011** **GPAR – 20** தை **2011**
ஒப்பந்தம் முடிவு (அசல்)	18 புரட்டாசி 2009	23 பங்குனி 2010	25 சித்திரை 2006	**பொதி 1,2 – 22** சித்திரை **2013** **GPAR – 30** ஆனி **2011**
திருத்திய ஒப்பந்தம் கைசாத்திட்ட திகதி	29 சித்திரை 2009	22 கார்த்திகை 2007	25 ஆனி 2008	வின்னப்பிக்க அற்ற
திருத்திய ஒப்பந்தம் அமுல்ப்படுத்துகை திகதி	1 மார்கழி 2007	7 புரட்டாசி 2007	1 தை 2007	வின்னப்பிக்க அற்ற
ஒப்பந்தம் நிறைவு (கனிசமான நிறைவு)	23 கார்த்திகை 2011	23 கார்த்திகை 2011	11 ஆவணி 2011	**பொதி 1,2 – 14** பங்குனி **2014** **GPAR – 26** கார்த்திகை **2011**
அசல் ஒப்பந்த விலை (SCR பில்லியன்)	9.6	8.3	8.7	**பொதி 1 - 10.17** **பொதி 2 – 8.53**
திருத்திய ஒப்பந்த விலை(...பில்லியன்)	21.97*	27.16	30.83	**பொதி 1 – 6.12** **பொதி 2 – 8.12**
தற்போதய வளர்ச்சி	**100%**	**100%**	**100%**	**பொதி 1 – 100% **** **பொதி 2 – 100% **** **GPAR – 100%**

**** திருத்தப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் முன்னேற்றம் கணக்கிடப்படுகிறது. (திருத்தம் 5)**

அட்டவணை இல.61: செயற்திட்ட முன்னேற்றம்

இல	வீதிப் பிரிவு	நீளம் (கி.மீ.)	மொத்தம் மதிப்பிட்ட செலவு (ரூபா.மில்.)	ஆரம்பிக்கப் பட்ட திகதி	நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி	2014வரை வளர்ச்சி (%)	2014 வரை செலவீனம் (ரூபா.மில்.)	2015 மார்கழி இறுதியில் வளர்ச்சி (%)	2015 காலப் பகுதியில் செலவு (ரூ.மில்.)
1	JICA பொதி.1	34.4	54,922.11	19.10.2005	23 கார்த்திகை 2011	100	21,928.93	100	-
2	JICA பொதி.2	31.61		24.03.2006	23 கார்த்திகை 2011	100	27,244.69	100	168.37
3	ADB பாகம்	29.3	32,855.73	25.04.2003	10 ஆவணி 2011	100	34,617.87	100	-
4	தெற்கு பாகம் பொதி.1	14.2	20,049.00	20.04.2011	14- பங்குனி -14	100	5,714.97	100	3,096.30
5	தெற்கு பாகம் பொதி.2	20.35		20.04.2011	14- பங்குனி -14	100	4,902.49	100	1,216.69

1. 2014 மற்றும் 2015 காலப்பகுதி கொட்டாவ – கொடகமைக்கு மொத்த காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் ரூபா 19.19 மில்லியன் மற்றும் 5101.90 மில்லியன் (GOSL நிதி)

2. 2014 மற்றும் 2015 ஆம் காலப் பகுதியில் தெற்கு பாகத்தில் கொள்கலன் அறைகள் மற்றும் பைபர் கம்பி மின்பிறப்பாக்கி மற்றும் பண வசூலிப்பு கட்டத்திற்கான மொத்த செலவின் 3241.30 மில்லியன் மற்றும் 118.403 மில்லியன் (GOSL) நிதி.

5.1.2 பிரிவின் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

- செயற்த்திட்ட கடன்கள் மற்றும் கொடைகள் தொடர்புபட்ட கொடை வழங்கும் முகவருடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்.
- ஆலோசனை மற்றும் சிவில் வேலை ஒப்பந்தங்களுடன் தொடர்பு பட்ட கொள்முதல் செயற்பாடுகள்.
- மதிப்பிட்டக்குழு மற்றும் கேள்விப்பத்திர சபை ஆகியவற்றின் தொழிற்பாட்டிற்கு வழிவகுத்தல் மற்றும் செயற்பாட்டின் முன்னேற்றத்தை கண்காணித்தல். ஏற்கனவே திட்டமிடப்பட்ட குறுகிய கால இலக்குகளை நிறைவேற்றும் விதமாக கொள்முதல் திட்டங்களை செயற்படுத்தல்.
- செயற்த்திட்ட திசைமாற்றம் குழுக்கல் மற்றும் ஏனைய தொடர்புக் கூட்டங்களைக் கூட்டுதல், பங்குதாரர்களின் நடவடிக்கைகளை பதிதல், கூட்டக்குறிப்புக்களை தயாரித்தல் மற்றும் விணியோகித்தல்.
- பிரதான செயற்த்திட்ட மூலங்களின் உண்மையான அபிவிருத்தியை செயற்த்திட்ட் நடவடிக்கைகளோடு ஒப்பிட்டுக் கண்காணித்தல் மற்றும் மாறுபாடுகளுக்கான காரணங்களை அறிந்து கொள்ளலினூடாக ஆலோசகர்களிடமிருந்தும் உயர் அதிகார சபைகளிடம் இருந்தும் சரியான நடவடிக்கைகளைத் தூண்டுதல்.
- செயற்றிட்டத்திற்கான மாற்றங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உருவாக்குதல் மற்றும் செலவு, நண்மை மற்றும் தொழில்நுட்ப செயல்த்திறன் தாக்கங்களை அறிந்துகொள்ளல். செயற்த்திட்ட மாற்றங்கள் மற்றும் அவ்வாறான மாறிகளின் விளைவுகளை அவதாணித்தல்.
- செயற்த்திட்ட பதிவுகளை தொடர்புபட்ட முகவர்களிடம் இருந்து சேகரித்தல் மற்றும் இணைந்த செயற்த்திட்ட தரவு வங்கி ஒன்றை தேவையான தகவல்களுடன் தகவல்முறைமை மற்றும் கண்காணிப்பு கருவியாக தாபித்தல்.
- ஆலோசகர்களின் செயல்த்திறனை கண்காணித்தலும் அவர்கள் எவ்வாறு செயற்த்திட்டங்களில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதனை அறிந்து கொள்வதனூடாக ஒப்பந்த குழுக்களின் திருப்பதி நிலையை அறிதல்.
- தனிநபர் ஒப்பந்தங்களின் தவணை முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், நிலச்சரிவகளை இணங்காணுதலும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆலோசகர்களிடமும், உயர் அதிகார சபைகளிடமும் ஆலோசிப்பதனூடாகப் பெறுதலும்.
- செயற்த்திட்டம் - நிதி அமைச்சின் ஏனைய பங்குதாரர்களுடன் உரையாடுதல் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய செயன்முறைகளை ஸ்த்தாபித்தல்.
- செயற்த்திட்டத்தின் நிதி நிலைமையை நிலையாக கண்காணித்தல் உட்செலவுகளை வழங்குவதற்கான வழிகளை ஆராய்தல், மிகைச் செலவு மற்றும் தூண்டுதல்

நடவடிக்கைகளை தேவையான சந்தர்ப்பங்களில் உயர் அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக் கொடுத்தல்.

- கடன் உடனபடிக்கைகளில் பட்டியல் இடப்பட்டுள்ள செயற்பாடுகளை கண்காணிப்பதனூடு சரியான கால அடிப்படையில் பின்பற்றதலை அறிந்து கொள்ளல்

- வலைதளம் ஒன்றினை உருவாக்குவதினூடாக செயற்த்திட்ட சுயவிபரம், கொள்முதல்கள், சிவில் வேலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தகவல்களை நானாந்த பதுப்பித்தல் செயற்பாடுகளினூடாக வழங்குதல்.

- நிலக் கையகப்படுத்தல் மற்றும் இழப்பீட்டினூடு மீளக்குடியமர்த்தல், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல். செயற்த்திட்டமொன்றினால் நடைமுறைப்படுத்தலினால் பாதிக்கப்பட்ட நபர்களை மீளக்குடியமர்த்தும் செயற்த்திட்ட வழிகாட்டலுக்கமைய மீளக்குடியமர்த்தல்.

- சூழலில் நிலச்சரிவு, மண்ணரிப்பு, நிலக்கீழ் நீர், மேற்பரப்பு நீர் ஆகியனவற்றின் மீது செயற்த்திட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைக்கும் அளவீடுகளை கண்காணித்தல்.

- வெலிகமை மற்றும் இமதூவை சாவடி அலுவலகம் சாவடி வாயில்களின் கட்டுமாண வேலைகள்.

- குடியேற்றக் கட்டிடமாக அமைச்சரவை அமைச்சர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையாக இலங்கை ரூபாய் 9 பில்லியனும் பிரத்தியோக வரி முழுமையான, இறுதியான தொகையாக வீ.அ.அ.ச மற்றும் தாய்சாய் கூட்டுத்தாபனமும் தொடங்கொடை குருந்துகஹதெக்ம வரையில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியது.

4021	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு உள்ளூர் நிதி	64,962,561.37	47,339,561.54
4021A	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு மூலதன வழங்கள்	-	6,923,041.57
4022	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு செயற்த்திட்டங்கள்	6,039,630,463.52	5,509,996,530.59
4024	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு உள்ளூர் நிறுவனம்	27,290,000.00	26,707,708.33
4025	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு உள் பூட்டுகை	257,997.47	1,604,262.39
4026	பிற்போடப்பட்ட வருமானத்தில் பதிவழிப்பு உள் நிதி	7,368,327.68	6,701,688.35
		6,139,509,350.04	5,599,272,792.77
	குறிப்பு 34 அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவீனம்		
61	அபிவிருத்தி செலவீனம் அமைச்சு	2,238,961,039.27	6,521,252,522.59
65	அபிவிருத்தி செலவீனம் நம்பிக்கை	2,800,566,923.36	3,232,262,538.61
63	அபிவிருத்தி செலவீனம் வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம்	10,181,958,411.20	11,172,705,633.98
63	அபிவிருத்தி செலவீனம் RWI - NSB நிலுவையில்	5,400,000,000.00	-
637	அபிவிருத்தி செலவீனம் மாலைதீவு செயற்திட்டம்	-	208,181,068.02
654	அபிவிருத்தி செலவீனம் ஒருங்கிணைந்த நிதி நிதியீட்டல்	1,121,964,652.50	1,619,122,973.05
		21,743,451,026.33	22,753,524,736.25
	குறிப்பு 34.1 அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவீனம் JICA		
634	அபிவிருத்தி செலவீனம் JICA செயற்த்திட்டம்	-	1,117,336,054.79
		-	1,117,336,054.79
	குறிப்பு 35 தனிப்பட்ட ஊதியம்		
5101 & 81	சம்பளம் மற்றும் கூலிகள்	5,887,029,298.17	5,001,860,175.55
5102 & 82,83	EPF மற்றும் ETF	907,903,701.30	788,142,900.37
51023 & 85	பணிக்கொடை	376,004,711.61	591,576,468.04
51025	நஷ்டஈடு	2,948,245.33	406,768.48
51032 & 84	மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கெடுப்பனவு	201,627,587.61	329,499,788.09
5104&5,86&7	நேரடி தொழிலாளி செலவீனம்	401,321,122.40	263,634,268.84
		7,776,834,666.42	6,975,120,369.38
	குறிப்பு 35A நேரடி தொழிலுக்கு தனிப்பட்ட இமல்சன் விபரணம்		
81	சம்பளம் மற்றும் கூலிகள்	2,121,563,075.92	1,883,987,346.39
82 & 83	EPF மற்றும் ETF	314,649,939.65	296,195,134.21
84	மேலதிக நேரக்கெடுப்பனவு	68,368,915.15	102,017,362.39
85	பணிக்கொடை	202,900,640.16	232,188,669.74
86 & 87	போனஸ்	74,406,139.37	55,633,889.37
		2,781,888,710.25	2,570,022,402.10
	குறிப்பு 36 வினியோகம் மற்றும் பாவிக்கப்பட்டவை		
512	நானாவித மற்றும் காரியாலய உபகரணம்	50,894,104.76	68,101,204.06
		50,894,104.76	68,101,204.06

		2015 ரூபா.	2014 ரூபா.
	குறிப்பு 37 ஏனைய நிரவாக செலவுகள்		
51052	மருத்துவ காப்புறுதி	8,414,088.05	12,211,617.51
5106	போக்குவரத்து மற்றும் பயணக்கொடுப்பனவு	108,903,426.64	134,687,734.87
5107	மனிதவள அபிவிருத்தி	7,435,681.75	19,047,165.56
511	கட்டணங்கள் மற்றும் ஏனைய படிகளும்	6,288,971.93	18,580,510.14
515	தொடர்பாடல்	29,269,968.18	30,687,690.53
516	வாடகை, இறைகள் மற்றும் வரிகள்	124,364,361.93	139,371,076.69
51701	பயன்பாடுகளும் ஏனையவைகளும்	82,423,435.70	106,571,002.70
513	எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	82,673,444.15	118,101,392.49
514	வாகன காப்புறுதிப் பத்திரம்	25,017,402.41	17,342,420.16
5185	திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு பயணிகள் வாகனங்களுக்கு	75,682,729.68	91,013,825.21
5181-88	ஏனையவைகளின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு	22,944,975.28	36,702,609.57
519	கணக்காய்வுக் கட்டணங்கள்	1,758,759.00	703,111.76
521	வங்கிக் கட்டணங்கள்	2,785,156.41	2,674,477.26
5232	அனுமதிக்கப்படாத பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் VAT	23,911,668.66	134,589,899.94
5235	முத்திரைக் கட்டணுங்கள்	-	22,650.00
5237	பதிவழிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணங்கள் ESC	-	25,672,268.00
5238	தேச நிர்மாண வரி	108,606,240.00	88,491,327.00
5266	திரட்டிய முற்பண குறைபாட முன் ஏற்பாடு	13,035,890.85	-
5241	விழாக் கட்டணங்கள்	-	788,644.43
5268	பாவணைக்கு உதவாத பொருட்கள் பதிவழிப்பு	-	1,900.00
5272	தண்டப்பணம்	980.64	183,851.20
		723,517,181.26	977,445,175.02
	குறிப்பு 38 தேய்வு மற்றும் மெதுவாக நிலைமாறும் செலவீனம்		
53	தேய்வு	768,497,618.93	629,894,352.83
54	நிலைமாறும்	5,626,435,561.71	5,088,337,640.76
		6,394,933,180.64	5,718,231,993.59
	குறிப்பு 39 நிதிச் செலவுகள்		
5224	காணி குத்தகையில் வட்டி	4,711,854.00	4,392,909.00
638	உள்ளூர் வங்கி கடன்களில் வட்டி	10,949,410,363.24	6,777,644,775.99
		10,954,122,217.24	6,782,037,684.99
	குறிப்பு 40 வருமான வரி செலவீனம்		
55	வருமான வரி மற்றும் & S R L குறிப்பு (40 A)	838,524,893.00	601,094,090.00
		838,524,893.00	601,094,090.00
	குறிப்பு 40 A		
	தற்போதைய வரி செலவீனம்	838,529,078.00	639,180,200.00
	கழி		
	Y/A 2014/2015 இல் முன்னேற்பாட்டிற்கு மேலால் தள்ளுபடி	(4,185.00)	(43,313,824.00)
	கூட்டு		
	Y/A 2013/2014 இல் முன்னேற்பாட்டின் கீழ் தள்ளுபடி	-	5,227,714.00
		838,524,893.00	601,094,090.00
	2015/2016 வருடத்திற்கான தற்போதைய வரிப் பொறுப்பு	838,529,078.00	639,180,200.00
	கழி		
	சுய மதிப்பீட்டு வரி செலுத்துதல்	(466,218,580.34)	(170,320,195.00)
	சரியான எதிராக வரிக்கடன்		
	தேசிய வரி கடன்	(21,449,984.50)	(73,202,065.00)
	பொருளாதார சேவைக்கட்டணம்	-	(69,039,403.00)
	தற்போதைய வருட வட்டியில் WHT	(53,123.41)	(27,087.00)
	வட்டி முன்னேற்பாடுகளுக்கு WHT கணக்கு காரணமாக மீள் நிதி	-	(2,475,571.00)
	2015/2016 ,2014/15 வருடத்திற்கான வரி மீதி	350,807,389.75	324,115,879.00
	குறிப்பு 41 திரட்டப்பட்ட (குறை)		
3522	திரட்டப்பட்ட (குறை) முன் கொண்டுவரப்பட்டது.	(13,576,083,596.76)	(8,012,311,811.23)
		(13,576,083,596.76)	(8,012,311,811.23)

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

2015/2016 வருடத்திற்கு மதிப்பீடு

வியாபார வருமானப் பொறுப்பில் இருந்த திருத்தப்பட்ட இலாபத்திற்கு கணக்கீடு

	ரூபா.	ரூபா.
வாடிக்கையாளர் வேலையில் இருந்து வருமானம்		
செய்யப்பட்ட வேலைப் பெறுமதி	482,901,754	
நேரடிச் செலவீனம் கழி	(425,184,664)	
வாடிக்கையாளர் வேலையில் இருந்து திரட்டிய இலாபம்		57,717,090
சேவைக்கான கட்டணத்தில் இருந்து திரட்டிய இலாபம்		179,093,878
குத்தகை வருமானம் மற்றும் வாடகை		277,426,162
மேந்தலைப் பெறுகை		33,104,700
காஸ்ட்டிங்யாட்டில் இருந்து மிகை		403,459
உள்ளூட்டுக்காக கொங்ரீட் கற்களில் இருந்து வருமானம்		133,302
ஏனைய வருமானம்	93,977,667	
கழி		
வரி எதிர்பார்ப்பு நடவடிக்கைகளில் பிற்போடப்பட்ட கடன்பட்டோர்	(572,219)	
வரி எதிர்பார்ப்பு நடவடிக்கைகளில் RDM வாடிக்கையாளர் மேந்தலை பெறுகை	(28,736,378)	
வரி எதிர்பார்ப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட சொத்து அழித்தல இலாபம்	(13,453,510)	
		51,215,560
கடுகதிப்பாதை வருமானம்		
STDP	2,251,848,411	
CKE	1,961,574,056	
OCH	618,133,116	
	4,831,555,583	
நேரடிச் செலவீனத்தில் கழி		
செலவினம்	(658,953,211)	
திறைசேரி வழங்கிய EMU மேந்தலைகளில் அதிகரிப்பு	(233,460,128)	
		3,939,142,243
மொத்த வியாபார பொறுப்பு வருமானம்		4,538,236,394
NBT கழி		(108,606,240)
வரிக்கான தேறிய வியாபார வருமானம்		4,429,630,154
கழி தேய்மான கொடுப்பனவுகள்		(20,521,280)
வியாபார பொறுப்பு வருமானத்தில் இருந்து திருத்தப்பட்ட வியாபர இலாபம்		**4,409,108,874**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. RCT/B/RDA/01/15/01

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 11 August 2017

21 AUG 2017 ROAD DEVELOPMENT AUTHORITY
CHAIRMAN'S OFFICE 18 AUG 2017 R.D.A.
FINANCE DIVISION 22 AUG 2017 Road Development Authority "Maga Piyasa Mahamedura" Battaramulla.

The Chairman,
Road Development Authority.

Report of the Auditor General on the Financial Statements of the Road Development Authority for the year ended 31 December 2015 in terms of Section 14 (2) (c) of the Finance Act, No. 38 of 1971.

Reference to my letter of even number dated 18 April 2017 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

W. Premananda
Additional Auditor General.
for Auditor General

Copies to: 1. Secretary, Ministry of Higher Education and Highways

2. Secretary, Ministry of Finance and Mass Media

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. ஆர்சீரீ/பீ/ஆர்டீஏ/01/15/0 உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2017 ஏப்ரல் 12

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு

நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

அதிகாரசபையின் பூரண உரிமைத்துவம் கொண்ட உப கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியினதும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட அதிவேகப்பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனியினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே, மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் மேற்குறிப்பிட்ட உப கம்பனிகளுடன் ரூபா 1.9 பில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அக் கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் மற்றும் நிலுவையிலுள்ள மீதிகள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)இணங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 1–நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

(i) கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெறும் நேரத்தில் இனங்காணப்பட்டு தொடர்புடைய காலத்திற்காக அறிக்கையிடப்படுதல் வேண்டிய போதிலும், உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி புனரமைத்தல் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மீது மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 104,004 மில்லியன் கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் பிற்போட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாதுள்ள ரூபா 255.42 மில்லியன் பெறுமதியான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய மீதிகள் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ii) அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான 12 மாத காலப்பகுதியில் வசூலாகுமென எதிர்பார்க்கப்பட்ட பெறவேண்டியவைகள் அல்லது தீர்க்கப்படவுள்ள பொறுப்பொன்றுநடைமுறைச் சொத்தொன்றாக அல்லது நடைமுறைப் பொறுப்பொன்றாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களால் சம்ர்ப்பிக்கப்பட்ட சிட்டைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வேலைதொடக்க முற்பணங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களிற்கும் கொடுப்பனவு பிரிவிகளிற்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 59,598,529 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் அவற்றின் தீர்ப்பனவுக் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது நடைமுறைச் சொத்துக்களாக எடுக்கப்பட்டிருந்தன. அதேநேரம் குறித்த பிரிவுகளிற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 12,237,389 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

(iii) தீர்க்கப்படவுள்ள திகதிகளை இனங்காணாது ரூபா 4,858,982,805 மற்றும் ரூபா 3,331,018,091 தொகையான பிடி காசுகள் முறையே நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மறும் வழுக்கள்

உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்திய தொகை பிற்போட்ட செலவினமாக கருதப்பட்டு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கடனில் மீளளிக்கப்பட வேண்டிய மூலதனப் பகுதி பிற்போட்ட செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நடப்பாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கணக்கீட்டு நடைமுறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 –ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(i) சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதியும் பயனுள்ள ஆயுட்காலமும் குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும்,ரூபா 972 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகப்

பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வழமையாக, அதிகாரசபையின் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கைதவிர்ப்புத் திகதி வரைக்கும் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. அதிகாரசபையின் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மாதம் முழுவதற்கும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. இது தொடர்பிலான வெளிப்படுத்தலொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களினால் 2013 – 2015 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 507 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் அதிகாரசபையின் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் அதன் மீதான பெறுமானத்தேய்வு ரூபா 219.51 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) வீதிகளின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்களிற்காக 05 வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 69,800,000 பெறுமதியான மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(இ) (i) நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து கிடைத்திருந்த ரூபா 11,981,954 விற்பனை பெறுவனவுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் அதிகாரசபையினால் கையற்கப்பட்டிருந்த திகதியிலிருந்து கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 15,050,000 பெறுமதியான கட்டிடங்கள் மீது 2015 ஆம் ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2015

ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 752,500 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையினால் பேணப்பட்ட 46 நடைமுறைக் கணக்குகளின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 120,935,788,038 கூட்டுத்தொகையான வங்கிக் கடன்கள் குறிப்பிட்ட வங்கிகளால் உறுதிசெய்யப்பட்டிருந்த ரூபா 116,537,540,890 கூட்டுத்தொகையான மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தெற்கு அதிவேகப் பாதையின் கிரயம் ரூபா 114,166 மில்லியனாகும். இருப்பினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அதிவேகப் பாதையின் நேரொத்த பெறுமதி ரூபா 114,071 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது.

(இ) துணைக் கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய / செலுத்தவேண்டிய மீதிகளிற்கும் குறிப்பிட்ட துணைக் கம்பனிகளினால் பெறவேண்டிய / செலுத்தவேண்டியவை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்களிற்கும் இடையே ரூபா 635,840,889 ஆன வேறுபாடொன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் அவ்வாறே தனியார் தரப்பினரிடமிருந்தும் நிலுவையாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்கு அதிகாரசபை பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், வெளித்தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டியவை உள்ளிட்ட மீதிகளைத் தீர்ப்பதற்காக அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட நிலமைகள் கீழே தரப்படுகின்றன.

(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

	விபரம்	தொகை	சேவைநாடுனர் விபரம்	அறவிடப்படாதுள்ள காலம் / ஆண்டுகள்
		ரூபா		
(i)	கடன்பட்டோர்	7,368,162,377	16 கடன்பட்டோர் கணக்குகள்	2012 இலிருந்து 2014 வரை மற்றும் 1987 முதல் 2014 வரை
(ii)	சேவைகள் மற்றும் வாடகை முற்பணங்கள்	7,405,680	08 அரசாங்க நிறுவனங்களும் ஆட்களும்	2001 – 2014
(iii)	வாடகை முற்பணங்கள்	6,494,948	18 வைப்புக்கள்	2008 – 2014
(iv)	ஒப்பந்த முற்பணங்கள்	27,402,432	28 ஒப்பந்ததாரர்கள்	2005 – 2014 மற்றும் 08 ஆண்டுகளிற்கு மேலாக
(v)	ஏனைய முற்பணங்கள்	3,740,000,000	நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு	2014 முதல் 2015 வரை
(vi)	கணக்கு மீதான முற்பணங்கள்	11,478,909	வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனி	2013 முதல் 2015 வரை
		71,100,621	05 ஒப்பந்ததாரர்கள்	2013 முதல் 2015 வரை
(vii)	வேலைதொடக்க முற்பணங்கள்	2,000,000,000	மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை	2014 முதல் 2015 வரை
		1,119,966,845	34 ஒப்பந்ததாரர்கள்	2001 முதல் 2015 வரை
(viii)	கொள்வனவு முற்பணங்கள்	33,631,574	92 வழங்குனர்கள்	2011 முதல் 2015 வரை மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக
(ix)	பெறவேண்டிய வாடகைகள்	1,781,623	பொறளை நிலக்கீழ் பாதையிலுள்ள 02 கடை உரிமையாளர்கள்	05 முதல் 08 ஆண்டுகள் வரை
		1,109,689	கண்டி நிலக்கீழ் பாதையிலுள்ள 05 கடை உரிமையாளர்கள்	03 முதல் 04 ஆண்டுகள் வரை

(x)	அறவிடப்படாத சம்பளங்களும் ஏனைய படிகளும்	62,004,844	260 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள்	ஒரு ஆண்டு
		62,757,658	94 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள்	இரண்டு ஆண்டுகள்
		1,718, 292	07 அமைச்சுக்களிற்கு விடுவிக்கப்பட்ட பதவியணியினர்	2013 முதல் 2015 வரை
(xi)	அறவிடப்படாத பதவியணியினர் கடன்கள்	3,104,786	அதிகாரசபையின் 50 ஓய்வுபெற்ற ஊழியர்கள்	01 முதல் 12 ஆண்டுகள் வரை

(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

	விபரம்	தொகை	சேவைநாடுனர் விபரம்	தீர்க்கப்படாதுள்ள காலம்
		ரூபா		
(i)	சேவைநாடுனர் வைப்புக்கள்	494,608,295	200 சேவைநாடுனர் வேலைகள்	01 முதல் 07 ஆண்டுகள்
		227,865,985	119 சேவைநாடுனர்	2010 முதல் 2014 வரை
		2,278,159	111 ஒப்பந்ததாரர்கள்	29 ஆண்டுகளிற்கும் மேலாக
(ii)	பாதுகாப்பு வைப்புக்கள்	973,394,696	1073 ஒப்பந்த வேலைகள்	03 முதல் 10 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கும் மேலாக
(iv)	செயற்திட்டங்களிற்கும் ஏனைய ஒப்பந்ததாரர்களிற்கும் செலுத்த வேண்டியவை			
	- பூரணப்படுத்தப்படாத சிட்டைகள் மீது	205,861,302	28 ஒப்பந்த வேலைகள்	01 ஆண்டிற்குக் குறைவாக
	- அங்கசீகரிக்கப்படாத முரண் வேலைகள் மீது	135,099,370	27 ஒப்பந்த வேலைகள்	
(v)	ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்த வேண்டியவை	328,923,378	06 ஒப்பந்ததாரர்கள்	01 ஆண்டிற்குக் குறைவாக
(vi)	வருமானத்திற்கு மாற்றப்படாத தாமதக் கட்டணங்கள்	676,846,546	450 ஒப்பந்த வேலைகள்	2010 முதல் 2015 வரை

2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

மொத்த அலகுகள், அலகு விலைகள் மற்றும் மொத்தப் பெறுமதிகளை உள்ளடக்கிய விபரமான பட்டோலைகள் போன்ற சான்றுகள் இன்மை காரணமாக ரூபா 552,044,028 கூட்டுத்தொகையான கருவிகள், நேர் பொருட்கள், நேரில் பொருட்கள், உதிரிப் பாகங்கள், எழுதுகருவிகள் மற்றும் அச்சுப் பொருட்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு	விபரங்கள்
(அ) இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்	
(i) நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2015 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 336 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை	அதிகாரசபையின் 02 உப அலுவலகங்களிற்கும் 03 பிரிவுகளிற்கும் வழங்கப்பட்ட ரூபா 31,651,973 கூட்டுத்தொகையான சில்லறைக் காசு கட்டுநிதிகளும் எரிபொருள் கட்டுநிதிகளும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 396	வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாதுள்ள ரூபா 3,903,709 பெறுமதியான 67 காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை (i) 9.4 ஆம் பிரிவு	அதிகாரசபையின் 260 பதவிநிலை அங்கத்தவர்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.
(ii) 9.3.1 (viii) ஆம் பிரிவு	முகாமைத்துவ மட்ட பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகார சபையினால் வெற்றிகரமான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள்,முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,962.68 மில்லியனான வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 1,674.93 மில்லியன் வரிக்கு முந்திய மிகையினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 6,637.61 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 12,506 மில்லியனால் அதிகரித்திருந்தமையே நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது. இருப்பினும், அதிகாரசபையின் செயற்பாட்டுச் செலவினமும் மீளாய்வாண்டில் ரூபா 5,868.47 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதேவேளை, உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கான கடன்கள் அதிகரித்திருந்தன.

3.2 அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல்

வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல் ரூபா 21,307 மில்லியன் ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 45 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், அரசாங்க பங்களிப்பு மற்றும் அதிவேகப் பாதை வருமானம் (அரசாங்க முதலீடுகளிலிருந்தான உழைப்புக்கள்) என்பன ரூபா 1,016 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக அமைந்திருந்ததுடன் அதிகாரசபையின் சுய பெறுமதி சேர்த்தல்கள் எதுவும் காணப்படவில்லை. அதேவேளை, கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் அரசாங்கப் பங்களிப்புக்களும் உதவிகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீதிகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய வீதிகளை நிர்மாணித்தல் போன்ற அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

	திசெம்பர் 31 இல் உள்ளவாறு	
	2015	2014
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	(855.55)	2,717
தேறிய சொத்துக்கள்	161,409	170,633
திரண்ட பற்றாக்குறை	(12,740)	(13,576)

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் திரண்ட பற்றாக்குறை முன்னைய ஆண்டின் ரூபா 13,576 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 12,740 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும்,தேறிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் முறையே ரூபா 3,572.55 மில்லியன் அல்லது 131 சதவீதத்தினாலும் ரூபா 9,224 மில்லியன் அல்லது 05 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய வீதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 4,994.78 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும்,மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1,996.81 மில்லியன் அல்லது 39.97 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 23 செயற்திட்டங்களில் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் 06 நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களினால் அமுலாக்கப்பட்டிருந்த வீதி பராமரிப்பு வேலைகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 161.37 மில்லியன் கிரயத்தில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த வேலைகள் மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 27.91 மில்லியனாக இருந்தது.

(iii) காலரீதியான பராமரித்தல், வடிகால்கள் மற்றும் கட்டமைப்பு மேம்படுத்தல்கள், சமிக்கை விளக்கு முறைமைகளையும், வீதி விளக்குகளையும், வீதி குறிகாட்டிகள் மற்றும் அடையாளங்களையும் பராமரித்தல், சிற்றளவு வீதி பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் அவசர பராமரித்தல்கள்/அனர்த்த வேலைகள் என்வற்றிற்காக

ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. அதன் விளைவாக, நியம தர மட்டத்தில் தேசிய வீதி வலைப்பின்னலை பராமரித்தல் என்பது, ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைவான பயன்படுத்தல்கள் காரணமாக பாதிப்படைந்திருந்தது.

4.1.2 பொறியியல் சேவைகள் மற்றும் பாலங்கள் வடிவமைப்பு பிரிவின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த பிரிவின் வேலைத் திட்டம் 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்ககப்பட்டிருந்த போதிலும், அத் திட்டத்திற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 69 பாலங்களை வடிவமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 39 பாலங்கள் மாத்திரமே வடிவமைக்கப்பட்டிருந்தன.

(iii) பாதுகாப்பு தலைமையகத்திற்கான நுழைவுப் பாதையிலுள்ள பாலங்களினதும் கடற் சுழியோடல் விஸ்தரிப்பு மீதான தெஹிவலை கால்வாய்க்கு மேலுள்ள பாலத்தினதும் வேலைகள் அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராதிருந்த போதிலும், அதிகாரசபையின் பால வடிவமைப்பு பிரிவினால் வடிவமைக்கப்பட்டிருந்தன.

4.2 ஒப்பந்த நிர்வாகம்

4.2.1. வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்

மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள்

(i) ரூபா 25,103 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் 259 வீதிகளின் முன்னேற்ற வேலைகளை பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வெலைகளின் ஒட்டமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டன. அந்த வீதி முன்னேற்ற வேலைகளில் 206 வேலைகள் அதிகாரசபைக்கு உரித்தற்ற வேலைகளாக காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான கிரயங்கள் முறையே ரூபா 17,928 மில்லியன் மற்றும் ரூபா 913 மில்லியனாகும். பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான 53 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு உரித்தானவையாக

காணப்பட்டன. அவற்றின் ஒப்பந்தப் பெறுமதியும் செலவிடப்பட்ட தொகையும் முறையே ரூபா 7,175 மில்லியன் மற்றும் ரூபா 581 மில்லியனாக காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டிய மேலும் 84 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,902 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் எந்த வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அச் செயற்திட்டங்களில் ஒன்றுக்காக ரூபா 2.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த 84 செயற்திட்டங்களில், 54 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு உரித்தற்றவையாக இருந்ததுடன் அவற்றின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,465 மில்லியனாகும்.

(ஆ) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்பி)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1,433.85 கிலோ மீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 152 பில்லியன் தொகையான கடன்களை பெறுவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 64 வீதிகள் புனரமைப்பதற்கு ரூபா 152 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது.

அதிகாரசபை 2012 – 2015 வரையான காலத்தில் 07 உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 131,441 மில்லியன் மொத்தமான கடன்களை பெற்றிருந்தது. அதில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,523 மில்லியன் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் செலுத்தவேண்டிய பகுதி ரூபா 126,918 மில்லியனாகும் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் பகுதி என்பவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

வங்கியின் பெயர்	ஆண்டிற்காக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள்				மொத்தம்	ஆண்டின் போது திருப்பிச் செலுத்திய முதல்		மொத்தம்	2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி
	2012	2013	2014	2015		2014	2015		
	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.	ரூபா மில்.
கொமர்ஷல் வங்கி	1,266	634	2,647	1,497	6,044	128	361	489	5,555
இலங்கை வங்கி	3,703	9,637	10,402	6,606	30,348	218	1,469	1,687	28,661
மக்கள் வங்கி	3,369	5,234	4,806	562	13,971	607	1,220	1,827	12,144
தேசிய சேமிப்பு வங்கி	384	4,953	43,931	5,076	54,344	-	339	339	54,005
அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்	209	724	* (32)	309	1,210	-	45	45	1,165
ஹட்டன் நஷனல் வங்கி	-	3,614	8,562	7,365	19,541	-	136	136	19,405
தேசிய அபிவிருத்தி வங்கி	-	-	4,214	1,769	5,983	-	-	-	5,983
மொத்தம்	8,932	24,796	74,530	23,184	131,441	953	3,570	4,523	126,918

* 2013 இல் தவறுதலாக செலவு வைக்கப்பட்டு 2014 இல் திருத்தப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் (எல்பிஎவ்பீ) கீழுள்ள வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக 54 வீதிகளிற்கான ஒப்பந்த பிரேரணைகளை ஒப்பந்தகாரர்கள் தாமே கொண்டு வந்திருந்தனர். சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகளின் பிரகாரம், 54 வீதிகளிற்குமான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 162 பில்லியனாக காணப்பட்டதுடன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (சீஏரீசீ) ரூபா 146.5 பில்லியனுக்கு இந்த ஒப்பந்த வேலைகளை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது. இருப்பினும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட

கொள்வனவுக் குழுவானது சீஏரீஈசீ இனால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதியினை எவ்விதக் காரணமுமின்றி ரூபா 155.79 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(ii) ஒப்பந்தகாரரின் பிரேரணைகளை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) முறைப்படி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை விடயங்கள், அளவைகள், மதிப்பாய்வை ஆதாரப்படுத்தும் வீதங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீதிக்குமாக பொறியியலாருடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நெடுஞ்சலை நியம வீதத்தை (எகஎஸ்ஆர்) பயன்படுத்தி சீஏரீஈசீஇனால் ஒப்பந்தகாரருடைய பிரேரணைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அளவீட்டு பட்டியலில் (பிஓகியூ) ஒப்பந்தகாரரால் பிரேரிக்கப்பட்ட வீதங்களை பொறியியலாருடைய வீதங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்வாக இருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிலிருந்துஒப்பந்தகாரர்களிற்கு வீதங்கள் முரண்பட்டிருந்தன.

(iii) 2012 இன் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிகமாக அஸ்பற் இடப்பட்டிருந்த சில வீதிப் பகுதிகள் எல்எவ்சீஎவ்பி இன் கீழ் புனரமைப்பதற்காக திரும்பவும் சேர்க்கப்பட்டிருந்தன.

(vi) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் 28 வீதிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 55,392.2 மில்லியன் கடன் பெற்றிருந்தது. பெறப்பட்ட கடனில், செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஏனைய நடவடிக்கைகளில் ரூபா 28,000 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 21,238.98 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், கிடைக்கக்கூடிய கடன் மீதி ரூபா 6,153.34 மில்லியனாக இருந்தது. இருப்பினும், செய்யப்பட வேண்டிய மிகுதி வேலைகளிற்காக பெறப்பட்ட கடனிலிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா 34,153.34 மில்லியனாக இருந்தது. இதன்படி,மிகுதி வீதி வேலைகளிற்காக கொடுப்பனவுகளை செய்கின்ற வேளையில்எதிர்காலத்தில் கட்டாயமாக நிதிப்பிரச்சனைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதுடன்இது நிர்மாண வேலைகளை மோசமாக பாதிக்கக்கூடும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) பெல்மடுல்ல – எம்பிலிபிட்டிய – நெகாகம வீதியை புனரமைப்பதற்கு மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்டிருந்த ரூபா 2,172 மில்லியன் தொகையான கடனைப் பயன்படுத்தி எம்பிலிபிடியவில் சனாதிபதி இல்லத்தையும் 9.21 கி.மீ விஸ்தீரணமுடைய ஏனைய 17 வீதிகளையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 161.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(vi) 08 வீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வீதிகளின் நீளம் மற்றும் அகலம், கொங்ரீட் வடிகால்கள், மதகுகள், பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் வீதியின் மேற்பரப்பு நிர்மாணம் போன்ற சில வேலைகளைக் குறைத்து ரூபா 3,333 மில்லியன் தொகையான

சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்,இச் சேமிப்புக்கள் மூலச் செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட நோக்கெல்லையினை கருத்திற்கொள்ளாது ஏனைய நிர்மாண செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. ஏனைய செயற்பாடுகளின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

செயற்பாடு	செலவிடப்பட்ட தொகை
	ரூபா மில்லியன்
அங்கீகரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு செயற்திட்டங்களிற்கு முரணாக 59 வீதிகளை நிர்மாணித்தல்	943.54
செயற்திட்டத்திற்கு முரணாக ஏனைய வீதிகளில் பாலங்களை நிர்மாணித்தல்	65.86
கேகாலையில் டெளசன் விடுதியை நிர்மாணித்தல், மாகாணப் பணிப்பாளரின் அலுவலகம் மற்றும் ஏனைய வீதிகளை நிர்மாணித்தல்	1,370.23
07 ஏனைய முரண்பட்ட வீதிகளை நிர்மாணித்தல்	953.47
மொத்தம்	**3,333.10**

(இ) நரோவுட் அப்கோட் வீதியில் பாலத்தின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நோர்வுட் அப்கோட் வீதியில் 9/12 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணம் ரூபா 3,456,682 தொகையில் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 4 மீற்றர் முதல் 7 மீற்றர் வரை பாலத்தின் அகலம் அதிகரிக்கப்பட்டிருந்தமையால் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 8,162,377 இற்கு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 3,425,378 தொகையினை பெற்றுக்கொண்ட பின்னர் பாலத்தின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(ii) பாலத்தின் மேற்பரப்பின் ஒரு பகுதியில் மாத்திரம் கொங்றீட் இடல் பிரயோகிக்கப்பட்டிருந்ததுடன் அபாய சமிஞ்சை உருவாக்கப்பட்டிருந்த போதிலும்,கை இயந்திரத்தைப் பயன்படுத்தி பாலத்தின் ஏனைய பகுதிகள் போதிளவில் பாதுகாக்கப்படாமையினால் விபத்து ஆபத்துக்கள் உயர்வாக இருந்தன.

(iii) பாலத்தின் நிர்மாணத்தை 2010 ஒக்தோர் 26 இல் தொடங்குவதற்கும் 2011 மார்ச் 25 இற்கு முன்னர் முடிவுறுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணம் 2016 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) விஜயபாகுகந்த பாலத்தின் நிர்மாணம்

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 7.9.11 ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 30.83 மில்லியன்பொறியியல் மதிப்பீட்டை விடவும் 25.31 சதவீதம் குறைவாகரூபா 23.90 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. பாலத்தின் நிர்மாண வேலைகளை 2012 சனவரி 09 இற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 04 மாதங்கள் கடந்த பின்னரும் கூட 2014 திசெம்பர் வரையிலும் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்வில்லை. இருப்பினும், தாமதக் காலத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன், மேலதிக வேலைகள் காரணமாக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 11,992,423 இனால் அல்லது 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது

(ii) பாலம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும்,பாலத்தினை பயன்படுத்துவோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பக்கவாட்டுச் சரிவுச் சுவர்களின் நிர்மாணம், கை இயந்திர செப்பனிடுதல், பாலத்தின் மேற்பரப்பின் மீது தாரிடுதல் மற்றும் பாலத்திற்கும் நுழைவுகளிற்கும் இடையே பின்புறத்தை நிரப்புதல் போன்ற வீதியின் பூரணப்படுத்தல் வேலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2.2 திருகோணமலைவெளிச்சுற்றுவட்ட வீதியின்புனர் நிர்மாணம்

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495 மில்லியன் தொகை செலவழித்து மட்டக்களப்பு – திருக்கோவில் ஆறு- திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்தை பின்தள்ளி தொடர்புபட்ட அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை (ஏ-6) என்பவை தொடர்புபடுகின்ற திருகோணமலையிலுள்ள வெளிச்சுற்று வட்ட வீதிகளில் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இருப்பினும், நிதிகள் இன்மை காரணமாக பாலங்களை தொடர்புபடுத்துகின்ற வீதிகள் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2016 மே 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2.3 கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கதிர்காமம் சுற்றுலா விடுதியின் நிர்மாண வேலைகள் 2004 இல் தனியார் கம்பனி ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர், நிர்மாண வேலைகள் நேர் ஊழிய அடிப்படையின் ஊடாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, சுற்றுலா விடுதியின் கீழ் மாடியின் நிர்மாண வேலைகள் ரூபா 12,352,242 இற்காக ஒப்பந்தகாரருக்கு 2010 செப்தெம்பர் 28 இல் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 11,771,448 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2011 யூன் 07 இற்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், நிர்மாண வேலை 2015 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கீழ் மாடி வேலைகளில் குறிப்பிடத்தக்களவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், முதலாவது மாடியின் நிர்மாண வேலைகளும் அக் குறைபாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் 2014 திசெம்பர் 24 இல் ரூபா 7,922,316 இற்காக அவருக்கே ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(iii) கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய விதத்தில் நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துவதற்கு 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2008 ஆகஸ்ட் 20 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவா வீதியிலுள்ள காணிக்காக வருடாந்த குத்தகை வாடகையாக ரூபா 6 மில்லியன் செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், 2009 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாதாந்த வாடகை ரூபா 1,000 எனத் திருத்தப்பட்டது. அமைச்சரவையால் நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த குத்தகை கொடுப்பனவை குறைப்பதற்கு இயலக்கூடியவாறு குத்தகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் 2014 நவம்பர் 29 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் வரை தலைமை அலுவலகம் புதிய கட்டிடத்திற்கு குடிபெயர்ந்திருக்காமையால் 2014 திசெம்பரிலிருந்து 2015 ஏப்ரல் வரை ரூபா 49.4 மில்லியன் தொகையான கட்டிட வாடகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குறித்த வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராமை மற்றும் நிதிகள் கிடைக்காமை என்பன காரணமாக 2011 முதல் 2015 வரையான ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 14,857.52 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய 169 வீதிச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவை தொடர்பில் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த செலவினம் ரூபா 2,213.87 மில்லியனாகும். ரூபா 7,293.38 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய மேலும் 73 வீதிகளை அகலமாக்கல் மற்றும் முன்னேற்றுதல் செயற்திட்டங்கள் 2015 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்த மொத்தக் கிரயம் ரூபா 1,689.63 மில்லியனாகும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் ரூபா 32,139,477 பெறுமதியான உதிரிப்பாகங்களின் இருப்புக்கள் பயன்படுத்தப்படாது 2012 ஆம் ஆண்டு முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 4,746,349 பெறுமதியானசீருடைகள், சப்பாத்து மற்றும் செருப்புகள், ரயர் மற்றும் பொருள் இருப்புக்கள்- அஸ்பற் பொறி பழுதடைந்த பொருளிருப்பு என்பன அவற்றினை கைதவிர்ப்பு செய்வதற்கு கவனத்திற்கெடுக்காமல் 2008 முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

4.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபையால் அதன் இணைந்த கம்பனிகளுடன் நிறைவேற்றப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மக நெகும கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய தொகை

(i) அதிகாரசபையால் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களிற்கான வாடகை 2012 பெப்ரவரி 10 இல் உரிய கம்பனியுடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 2010 முதல் 2014 வரையான காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 333,200,550 தொகையான வாடகையை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு 2004 – 2007 வரையான ஆண்டுகளின் போது சொத்துக்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 63,276,545 மானியத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 10,923,083 தொகையான கூலியினையும் 2014 ஆம் ஆண்டின் போது குளிர் கலவையினை வழங்கியமைக்காக ரூபா 5,685,164 தொகையினையும் அறவிடுதலுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அல்லது வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்படாத முரண் கட்டளைகளும் வேலைக் கட்டளைகளும்

(i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்/பதிற் கடமை தலைவரின் 2011 மார்ச் 28 ஆந் திகதிய 2011 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், முரண் கட்டளைகளையும் மேலதிக மற்றும்

கூடுதலான வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், பின்வரும் கூடுதலாக செய்யப்பட்ட வேலைகளிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாத முரண் கட்டளைகளின் பெறுமதி	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய முரண் கட்டளைகளின் தொகை	மொத்தம்
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஒப்பந்தப் பெறுமதிக்குள் வழங்கப்பட்ட முரண் கட்டளைகள்	987.4	272.8	1,260.2
ஒப்பந்த பெறுமதியினை விஞ்சி வழங்கப்பட்ட முரண் கட்டளைகள்	384.7	42.3	427.0
மொத்தம்	1,372.1	315.1	1,687.2

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 மார்ச் 19 ஆந் திகதிய 2013 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், அக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பின்வரும் வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

	வேலைக் கட்டளைகளின் பெறுமதி	2015 யூலை வரை செலுத்திய தொகை
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
2013 இலிருந்து வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள்	17,093.4	2,898.7
2013 வரை வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள்	587.8	197.2
மொத்தம்	17,681.2	3,095.9

(iii) மேலும், முன் அங்கீகராம் இன்றியும் வீதிகளை அகலப்படுத்தி முன்னேற்றுவதற்கான ஒப்பந்தங்களிற்காக தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரம் இன்றியும் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த முரண் வேலைக் கட்டளைகளின் பெறுமதி ரூபா 19,368.4 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 3,281.9 மில்லியனாகும். அதற்கமைய, செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியினைக் கணிப்பிட்ட பின்னருள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அட்டுறுச் சட்டைகளின் பெறுமதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலை செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பதவியணி

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் பதவியணியின் நிலைமையின் பிரகாரம், 12 பதவிகளில் 710 வெற்றிடங்களும் 08 ஏனைய பதவிகளில் 1080 மிகைகளும் உள்ளதென வெளிப்பட்டது.

(ii) சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 06 வெற்றிடங்களும் தொழில்நுட்ப சேவையில் 144 வெற்றிடங்களும் எழுதுனர் மற்றும் இணைந்த சேவைகளில் 28 வெற்றிடங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தது.

(iii) அதிகாரசபையின் பாலங்கள் வடிவமைத்தல் பிரிவு பிரதான பதவிகளில் தகைமையுள்ள ஆட்களிற்கான பற்றாக்குறையுடன் செயற்படுகின்றது. அதற்கமைய, 07 பிரதான முகாமைத்துவ பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரசாங்க நிறுவனங்கள் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் செலவினம் செய்வதற்கு அல்லது அதன் வளங்களை (மனித வளம் உள்ளடங்கலாக) ஈடுபடுத்தல் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை மீறி அதிகாரசபை ஏனைய நிறுவனங்களிற்கு அதன் 260 உத்தியோகத்தர்களை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவித்திருந்ததுடன் பின்னர் அந்த ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள இணைக்கப்பட்டிருந்தனர்.

(இ) கொள்வனவு பிரிவின் செயலாற்றல்

(i) கொள்வனவு பிரிவு முறையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவு மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட நலிவான கட்டுப்பாடுகள் காரணமாக அது எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 36 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 15 ஆக இருந்தது. பிரதான பொறியியலாளர், 3 ஏனைய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற பிரதான பதவிகள் 2014 இலிருந்து வெற்றிடமாக் காணப்பட்டன.

(iii) ரூபா 31.32 மில்லியன் தொகையான காகிதாதிகளின் கொள்வனவு மாத்திரம் இப் பிரிவால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதேநேரம் ஏனைய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது இப் பிரிவின் சேவையினைப் பெற்றுக்கொள்ளாது ஏனைய பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய "நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின்" பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது 2014- 2018 வரையான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டத்தை 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் 2015 சனவரி 01 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தது.

மேலும், கூட்டிணைந்த திட்டத்தை உரிய நேரத்தில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளிற்குரிய கூட்டிணைந்த திட்டமானது 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 முதல் 2020 வரைக்குமான கூட்டிணைந்த திட்டமானது 02 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு பிரிவினதும் வேண்டப்பட்ட ஆளணியை கூட்டிணைந்த திட்டம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும்,

உண்மையான தேவையினை மதிப்பீடு செய்தபின்னர் மனித வளத் தேவைப்பாட்டு விபரங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமத்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், பணிப்பாளர் சபையின் மீளாய்விற்காக வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கும் நடைமுறை அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் முழுமையாக திருத்தப்பட்ட பாதீட்டிற்கான அங்கீகாரம் 2015 திசெம்பர் 21 இல் பெறப்பட்டிருந்தது. காத்திரமும் பயனுறுதியும் மிக்க பாதீட்டு முறைமையொன்று இன்மை காரணமாக அதிகாரசபையின் திருத்தப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

கட்டுப்பாட்டுத் துறை	கணக்காய்வு அவதானிப்புக்கள்
(அ) கணக்கீடு	i. கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல், பொறுப்புக்களை (நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத) வகைப்படுத்துதல் மற்றும் அட்டுறு செலவினத்தை கணக்கீடு செய்தல்.
	ii. தொடர்புடைய தரப்புடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துதல் (மகநெகும கம்பனிகள் மற்றும் அதிவேகப் பாதை போக்குவரத்து கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள்)
	iii. மாற்றப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டு பரிகாரம் மற்றும் பேரேட்டுக் கணக்குகளிற்கான விபரமான பட்டோலைகளைத் தயாரித்தல்.

(ஆ)	ஒப்பந்த நிர்வாகம்	i. குறித்த நோக்கங்களிற்காக நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துதல், நிதிப் பிரேரணைகளை மதிப்பாய்வு செய்தல், வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறுதல், பட்டியலிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துதல் போன்றன.
		ii. குறித்த நோக்கங்களிற்காக நிதிகளை பயன்படுத்துதல்.
(இ)	இருப்புக் கட்டுப்பாடு	பயன்படுத்த முடியாத இருப்பு விடயங்களை கைதவிர்ப்புச் செய்தல்
(ஈ)	சொத்துக்கள் முகாமைத்துவம்	காணிகளை பயன்படுத்துதல்

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்
2015 டிசம்பர் 31 இல்
முடிவடைந்த ஆண்டின்
நிதிசார் கூற்றுக்கள் மீதான 1971இன்
38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின்
14(2) (சீ) பிரிவின் பிரகாரமான
கணக்காய்வாளர் நாயகத்தின்
அறிக்கை மீதான பதில்
மற்றும் தற்போதைய நிலை.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிசார் கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிசட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பந்தி இல.	கணக்காய்வு அறிக்கை	பதில்	தற்போதைய நிலை
2.2	**நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**		
2.2.1	**ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்** அதிகாரசபையின் பூரண உரிமைத்துவம் கொண்ட உப கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியினதும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட அதிவேகப்பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனியினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் மேற்குறிப்பிட்ட உப கம்பனிகளுடன் ரூபா 1.9 பில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அக் கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் மற்றும் நிலுவையிலுள்ள மீதிகள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது.
	கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)இணங்குதல் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்-1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெறும் நேரத்தில் இனங்காணப்பட்டு தொடர்புடைய காலத்திற்காக அறிக்கையிடப்படுதல் வேண்டிய போதிலும், உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி புனரமைத்தல் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய இடைக்கால		கணக்குகளில் ஏற்கனவே தேவையான கணக்கு பதிவுகள் செய்யப்பட்டுவிட்டதோடு நிதி ஆண்டில் அணைத்து தீர்வையாகாத சிட்டைகளை கணக்கிட தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2.2.2 (அ) i	கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மீது மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 104;004 மில்லியன் கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் பிற்போட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாதுள்ள ரூபா 255.42 மில்லியன் பெறுமதியர்ன் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய மீதிகள் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன	<u>I இ. கொ. சா. இல. 25 ரூபா 89.6 மில்லியன்</u> 2016 ஆம் ஆண்டின் ஜனவரி மாத இறுதியில் நிர்மாணப் பிரிவினால் இந்த சிட்டைகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இ. கொ. சா. பெற்றுக்கொண்ட பின், நிதி பிரிவானது இது சம்பந்தமான 2015தில் கணக்கியல் நடைமுறைகளை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளது. <u>II இ. கொ. சா. இல. 11 ரூபா 10.1 மில்லியன்</u> இந்த சிட்டை ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் தீர்க்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. <u>III இ. கொ. சா. இல. 19 ரூபா 131 மில்லியன்</u> ரூபா 68.1 மில்லியன் ரூபா 131 மில்லியனில் இருந்து ஏற்கனவே கணக்கிடப்பட்டுள்ளது. 2015 மற்றும் எஞ்சிய தீர்வு 2016 இல் எடுக்கப்படுகிறது. <u>IV இ. கொ. சா. இல. 25 ரூபா 49.3 மில்லியன்</u> 2016 ஆம் ஆண்டின் ஜனவரி மாத இறுதியில் நிர்வாணப் பிரிவினால் இந்த சிட்டைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இ. கொ. சா. ஐ பெற்றுக்கொண்ட பின், நிதி பிரிவானது 2015 கணக்கியல் நடைமுறைகளை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளது.	
ii	அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான 12 மாத காலப்பகுதியில் வசூலாகுமென எதிர்பார்க்கப்பட்ட பெறவேண்டியவைகள் அல்லது தீர்க்கப்படவுள்ள பொறுப்பொன்றுநடைமுறைச் சொத்தொன்றாக அல்லது நடைமுறைப் பொறுப்பொன்றாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சிட்டைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வேலைதொடக்க முற்பணங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களிற்கும் கொடுப்பனவு பிரிவிகளிற்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 59,598,529 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் அவற்றின் தீர்ப்பனவுக் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது	வேலை தொடக்கம் முற் பணங்கள் பணம் செலுத்தும் நேரத்தில் கட்டணத்தில் இருந்து கழிக்கப்படுவதால், இந்த தீர்வுகள் செய்யப்பட இருக்கும் ஆண்டை திட்டமிடுவது கடினம். எனவே, இது நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.	2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்ககுளுக்காக நிதி சேவை சுற்றறிக்கை இல. 346 இல் தெளிவான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

	நடைமுறைச் சொத்துக்களாக எடுக்கப்பட்டிருந்தன. அதேநேரம் குறித்த பிரிவுகளிற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 12,237,389 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.		
iii	தீர்க்கப்படவுள்ள திகதிகளை இனங்காணாது ரூபா 4,858,982,805 மற்றும் ரூபா 3,331,018,091 தொகையான பிடி காசுகள் முறையே நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.	போதுமான தகவல் எதிர்காலத்தில் வழங்கப்படும்.	2016 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளுக்கான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் நிதி சுற்றறிக்கை இல. 346 இல் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் நிதிப் பெறுதலின் தாமதம் காரணமாக எதிர்ப்பார்த்தப்படி கொடுப்பனவுகளை செய்யமுடியவில்லை.
(ஆ)	**<u>எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்-3</u> கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மறும் வழுக்கள்** உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்திய தொகை பிற்போட்ட செலவினமாக கருதப்பட்டு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கடனில் மீளளிக்கப்பட வேண்டிய மூலதனப் பகுதி பிற்போட்ட செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நடப்பாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கணக்கீட்டு நடைமுறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	உள்ளூர் வங்கி நிதியளிப்பு நடவடிக்கைகளுக்கான எமது கணக்கீட்டு நடைமுறை எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 03 உடன் இணங்கி உள்ளது. எனினும், இந்த நடைமுறை வெளிப்படுத்த வேண்டும் என்றால் ஒரு தனிக்குறிப்பில் அதை அவ்வாறு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	2016 ஆம் ஆண்டின் கணக்குகளில் வங்கிக் கடன்களின் விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இது சம்பந்தமாக பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
(இ) i	**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்-7 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதியும் பயனுள்ள ஆயுட்காலமும் குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும்,ரூபா 972 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகப்	மதிப்பீட்டுத் திணைக்களம் முழுமையான தேய்மானமிடப்பட்ட நிலையான சொத்துக்களைப் பற்றி அறிவுத்தப்பட்டுள்ளதோடு 2016 ஆம் வருட காலப் பகுதியில் அச்சொத்துக்களை மீள் பெறுமதியிட நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீட்டுத் திணைக்களத்தால் இந்த சொத்துக்களை மதிப்பிபடுவதில் தாமம் ஏற்ப்பட்டுள்ளதால், இந்தச் சொத்துக்களை மதிப்பிட மீள்மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. எனினும், மதிப்பீட்டில் நிபுணத்துவம் இல்லாமை காரணமாக மதிப்பீட்டு

	பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		அறிக்கை இன்னும் பெறப்படவில்லை.
ii	வழமையாக, அதிகாரசபையின் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கைத்விர்ப்புத் திகதி வரைக்கும் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. அதிகாரசபையின் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மாதம் முழுவதற்கும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. இது தொடர்பிலான வெளிப்படுத்தலொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எஸ். எல். பி. எஸ். ஏ. எஸ். 7 உடன் நாங்கள் இணங்கி தேய்மான கொள்கையை அதில் வெளிப்படுத்தியதோடு கொள்கைக்கு தேவையான தகவலை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இது 2017 கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது.
2.2.3 (அ)	**கணக்கீட்டுக் குறைபாடுகள்** பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களினால் 2013 – 2015 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 507 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் அதிகாரசபையின் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் அதன் மீதான பெறுமானத்தேய்வு ரூபா 219.51 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.	உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டமானது தேவைப்பாட்டுடன் இணங்கிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதோடு 2016 இல் நிதிக் கூற்றுக்களுடன் ஒருங்கிணைய நடவடிக்கை எடுக்கப்படும்.	ரூபா 271.4 மில்லியன் மற்றும் ரூபா 250.7 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் முறையே, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மூலதனமாக்கப்பட்டுள்ளன.
(ஆ)	வீதிகளின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்களிற்காக 05 வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 69,800,000 பெறுமதியான மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.	கணக்குகளை இறுதியாக்கும் நேரத்தில், இந்தத் தகவல் எங்களிடம் இருக்கவில்லை, தேவையான கணக்கியல் மாற்றங்களை இணைத்துக் கொள்ளும் நிலையில் நாங்கள் இருக்க வில்லை. இது 2016 நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டுள்ளது.	இவை 2016 ஆம் ஆண்டு கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ) i	நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து கிடைத்திருந்த ரூபா 11,981,954 விற்பனை பெறுவனவுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் அதிகாரசபையினால் கையற்கப்பட்டிருந்த திகதியிலிருந்து கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.	இந்தப் பொருட்கள் முழுமையாக தேய்மானமிடப்பட்டன, மொத்த விற்பனை வருவாய்காளனது அகற்றும் இலாபமாக கணக்கிடப்பட்டுள்ளன.	பதிவு புத்தங்களை பரிசோதித்து, கணக்குகளில் தேவையான மாற்றங்களை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டனர்.
ii	ரூபா 15,050,000 பெறுமதியான கட்டிடங்கள் மீது 2015 ஆம் ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2015 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 752,500 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.	2016 ஆம் ஆண்டில் சரியாக்கும் நடவடிக்கையை எடுத்தது.	இது 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குப் புத்தகத்தில் சரிசெய்யப்பட்டுள்ளது.
2.2.4 (அ)	<u>விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்</u> பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. அதிகாரசபையினால் பேணப்பட்ட 46 நடைமுறைக் கணக்குகளின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 120,935,788,038 கூட்டுத்தொகையான வங்கிக் கடன்கள் குறிப்பிட்ட வங்கிகளால் உறுதிசெய்யப்பட்டிருந்த ரூபா 116,537,540,890 கூட்டுத்தொகையான மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.	<u>தே. சே. வங்கி</u> வங்கி கணக்குகள் மூலம் உறுதிப்படுத்தப்படும் மீதிகளில் எந்தவித வித்தியாசமும் இல்லை. ஒப்புதல்கள் ஏற்கனவே கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. <u>இலங்கை வங்கி</u> வீ. அ. அ. சபை கணக்குகள் மற்றும் வங்கியால் உறுதிசெய்யப்பட்ட மீதிகளுக்கு இடையிலான வித்தியாசம் ரூ. 2,857.82 மில்லியன் வங்கியின் 02 கடன் தொகைகளை உறுதிப்படுத்தாததால் இந்த தொகை உருவாகியுள்ளது. <u>மக்கள் வங்கி / ஹட்டன் நேவினல் வங்கி / கொமர்ஷல் வங்கி மற்றும் டீஎப்சீசீ வங்கி</u> மேலே உள்ள கணக்கு மீதியிற்கும் வங்கியினால் உறுதிப்படுத்தப்படும் மீதியிற்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. கணக்காய்வு அறிக்கையின் நடைமுறைக் கடன்களில் காட்டப்பட்டுள்ளன.	குறிப்பிட்டுள்ளது போல் எந்த வித்தியாசமும் இல்லை. கணக்கிணக்கம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
(ஆ)	தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தெற்கு அதிவேகப் பாதையின் கிரயம் ரூபா 114,166 மில்லியனாகும். இருப்பினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அதிவேகப் பாதையின் நேரொத்த பெறுமதி ரூபா 114,071 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது.	எங்கள் கணக்குப்படி, கணக்கிடப்படாத அதிவேக வீதி கருத்திட்ட செலவு ரூபா. 95 மில்லியன் 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்படும்.	2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகளின் இறுதியாக்களில் தேவையான மாற்றங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

(இ)	துணைக் கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய செலுத்த வேண்டிய மீதிகளிற்கும் குறிப்பிட்ட துணைக் கம்பனிகளினால் பெறவேண்டிய / செலுத்தவேண்டியவை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்களிற்கும் இடையே ரூபா 635,840,889 ஆன வேறுபாடொன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.	இந்த மூன்று கம்பனிகளில் இருந்து குறித்த ஒரு குறிப்பிடத்தக்க காலம் வரை கணக்கிணக்கம் செய்யப்படாததோடு தேவைப்படும் சீராக்கங்களை செய்வதற்கான கணக்கிணக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன.	கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டு எம். என். ஆர். சீ. ஈ. கம்பனியின் வேறுப்பாடுகள் அவதானிக்கப்படுகின்றன. மற்ற இரண்டு கம்பனிகளின் வேறுப்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளதோடு அவசியமான பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2.2.5	**<u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>** அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் அவ்வாறே தனியார் தரப்பினரிடமிருந்தும் நிலுவையாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்கு அதிகாரசபை பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், வெளித்தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டியவை உள்ளிட்ட மீதிகளைத் தீர்ப்பதற்காக அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட நிலமைகள் கீழே தரப்படுகின்றன.		
i	**<u>(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்</u>** 16 கடன்பட்டோர் கணக்குகள ரூபா 7,368,162,377 2012 இலிருந்து 2014 வரை மற்றும் 1987 முதல் 2014 வரை	ரூபா 7,7,368,162,377 ஆன தொகை தே. சே. வங்கி கடனுக்காக செயல்திட்ட முகாமைத்துவ அலகுலிருந்து பெற வேண்டியது மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெறவேண்டியவைகளாகும். செ. மு. அ. விடமிருந்து பெறத்தக்கவை, தே. சே. வங்கிற்கான ஒதுக்கீனை பெறும் போது தீர்வு செய்யப்படும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெறதக்கவையை பொருத்தமட்டில் அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுருத்தலுக்கு இணங்க கொடுப்பணவுகளை செய்ய மீதியின் தகவல்களை ஒரு சிறப்புக்	2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 521.5 மில்லியன் ரூபா பெறுமதியானது மீட்கப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் எஞ்சியவைகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டனர். தே. ச. வங்கி கடனிலிருந்து செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் முற்பணங்களாக 5,667 மில்லியன் தொகை நிலுவையாக உள்ளது. இடீஎம் இருந்து (1022.2 மில்லியன்) பெற

		குழுக்கு வழங்கப்பட்டது. 7.3 பில்லியனில் எஞ்சியிருக்கும் சமநிலை பி. எம். யூ இன் நடப்பு கணக்குகளுடன் தொடர்புடையது.	வேண்டிய தொகை சம்பந்தமான விபரங்கள் லலித் ஆர். டீ. சில்வா ஆணைக்குழுவை குறிக்கின்றது.
ii	**சேவை மற்றும் வாடகை முற்பணங்கள்** ரூபா .7,405,680 08 அரசாங்க நிறுவனங்களும் ஆட்களும்2001 - 2014	முக்கியமான, இந்த வைப்பு மதிப்பு இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புசபை உடன் வைப்புத் தொகைகளை கொண்டுள்ளது. தற்போது, இந்த வைப்புக்களை பகுப்பாய்வு செய்வதில் நாம் செயற்பட்டு வருகிறோம், நீண்ட கால இயல்புடைய வைப்புத் தொகையைத் தவிர வைப்புத் தொகையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நீண்ட கால இயல்பில் இருக்கும் இருப்பு மீதி வைப்புத் தொகையை தவிர எஞ்சிய வைப்புக்கள் ரூபா 1.0 மில்லியன் மீட்கப்படுகிறது. ஏனைய வைப்புகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருப்பதோடு மீட்டெடுக்கப்படும்.
iii	**வாடகை முற்பணங்கள்** ரூபா . .6,494,948 18 வைப்புக்கள 2008-2014	நடவடிக்கைகளை எடுத்த பின்: • ரூபா 937,380 ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. • ஒப்பந்தங்கள் ரூபா 2,802,000/- செயற்பாட்டில் உள்ளது. • 2,755,568 ரூபாய்க்கு சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	ரூபா 1,063,620 வைப்புத் தொகை மீட்கப்பட்டுள்ளது. கணக்குகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் மீற்கப்படும்.
iv	**ஒப்பந்த முற்பணங்கள** Rs.27,402,432 28 ஒப்பந்ததாரர்கள 2005 – 2014 மற்றும் 08 ஆண்டுகளிற்கு மேலாக	ரூபா 27.4 மில்லியன் தொகையில் ரூபா 15.8 மில்லியன் சுழற்சி முற்பணத்தொகையாக வீடமைப்பு கருத்திட்ட முற்பணங்காக தே. வி. அ. ச. உடன் தொடர்புபடுத்துகிறது. இது வெற்றிகரமாக இல்லாவிட்டாலும் இந்த முன்னேற்றங்களை மீண்டும் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருடன் தொடர்ந்து தொடர்ச்சியாக வீ. அ. அ. ச. செயற்பட்டு வருகின்றது. இந்தப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் நாங்கள் தற்போதும் தொடர்பு கொள்கின்றோம். வீ. அ. அ. சபை 2015 ஆம் ஆண்டில் வன திணைகளத்திற்கு ரூபா 2 மில்லியனை அபன்பொல ஆலை சம்பந்தமாக செலுத்தி உள்ளது. இந்த ஆலையின் இலக்கு பூர்த்தி செய்யப்பட வில்லை. இதன் விளைவாக, இந்த வைப்பு அவ்வாறு உள்ளது. மீதி முற்பணங்கள் படிப்படியாக தீர்வு செய்யப்பட்டு தீர்விற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.	31.12.2017 அன்று ரூபா 11,131,161.01 இலான ஒரு தொகை தீர்வுகாணப்பட்டுள்ளது.

v	**ஏனைய முற்பணங்கள்** ரூபா .3,740,000,000 நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு 2013 முதல் 2015 வரை	மற்ற காரியங்களுக்காக இந்தப் பணிக்காக அர்பணித்தப் பணத்தை உபயோகிப்பதன் காரணமாக உள்ளூர் வங்கியின் நிதியுதவித் செயல்திட்டங்களில் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுவதற்காக திறைசேரியால் தனியாக வாக்களிப்புக்கள் ஒதுக்கப்பட்டதோடு வீ. அ. அ. சபை ரூபா 10.4 மில்லியனை 2015 ஆம் வருடம் முதல் இன்று வரை பெற்றுள்ளது. வீ. அ. அ. சபை தேசிய சேமிப்பு வங்கியின் கடனுக்கான முழுத் தொகையைப் பெற்றதும் இந்த முற்பணங்களை முடிக்க வீ. அ. அ. சபை கணக்குகளில் பொருத்தமான கணக்கியல் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.	தே. சே. வ நிதியுதவி செயல்திட்டங்களின் கட்டணத்ததை தீர்வு செய்வதற்காக தனி ஒதுக்கீடு செய்ய திரை சேரியால் வழங்கப்பட்ட முற்பணங்களில் இருந்து 2018 ஆம் ஆண்டு மே மாதம் இந்த முற்பணங்களுக்கு எதிராக முழுத் தொகை ரூபா 3.74 மில்லியன் ஈடு செய்யப்பட்டுள்ளது.
vi	**கணக்கு மீதான முற்பணங்கள்** ரூபா. 11,478,909 வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண. (தனியார்) கம்பனி ரூபா. 71,100,621 05 ஒப்பந்ததாரர்கள 2013 முதல் 2015 வரை	நிலுவைகளை சரி செய்ததன் பின்னர் 2016 ஆம் ஆண்டில் இந்த முற்பணங்களை தீர்பதற்கு நடைவடிக்கை எடுக்கப்படும். தீர்வு செயல்முறை செயற்பாட்டில் உள்ளது. எனினும் ரூபா 71 மில்லியன் ஆர் எம் ஐ முற்பணங்களுடன் தொடர்புபடுகின்றது. முன்னேற்ற கொடுப்பனவுகளை செய்யும் போது தீர்வுகளை செய்வதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	வீ. அ. அ. சபை மற்றும் (மகநெகும) கம்பனிகளின் கணக்குகளை சரிசெய்தனர். பின்னர் கடன்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 52,287,949 / 80 இலான ஒரு தொகை 31/12/2017 வரை மீட்கப்பட்டுள்ளதுடன், இந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மீதமுள்ள மற்ற தொகையை மீட்டெடுக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
vii	**வேலைதொடக்க முற்பணங்கள்** ரூபா. 2,000,000,000 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2014 முதல் 2015 வரை ரூபா . 1,119,966,845 34 ஒப்பந்ததாரர்கள 2001 முதல் 2015 வரை	தீர்வு கட்டணங்களை பெற மா. வி. அ. அ சபை அலுவலர்களுடன் பல விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. மொத்த தொகையில் ரூபா 800 மில்லியனிற்கான தீர்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் எஞ்சியவையை தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 1.1 மில்லியனின் ரூபா 717 மில்லியன் தொகை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சிட்டையிலிருந்து ரூபா 383 வான தொகை மீளப் பெறுவதோடு ரூபா 19.6 மில்லியன் தொகையை மீளப் பெற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ரூபா 1885 மில்லியன் மதிப்புள்ள சிட்டைகள் முட்பணங்களுக்கு எதிராக 30.06.2018 அன்று தீர்வு செய்யப்பட்டுள்ளது எஞ்சியவை பரிசேதிக்கப்படுகிறது. ரூபா 947,116,897.23ஐ மொத்த தொகை ரூபா 1,119,966,845/ யிருந்து தீர்வு செய்யப்பட்டுள்ளது.

viii	**கொள்வனவு முற்பணங்கள்** ரூபா . 33,631,574 92 வழங்குனர்கள் 2011 முதல் 2015 வரை மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக	இந்த முட்பணங்கள் தீர்வுக்காக எழுத்து முலம் அறிவிக்கப்பட்ட வேறுபட்ட திணைக்களத்தில் இருந்து அலுவலகங்களால் வேண்டப்பட்டுள்ளன.	ரூபா 18,474,626.16 ஆனது 31.12.2017 அன்று தீர்க்கப்பட்டது. மீதி இணக்கம் செய்யப்படுகிறது.
ix	**பெறவேண்டிய வாடகைகள்** ரூபா. 1,781,623 பொறளை நிலக்கீழ் பாதையிலுள்ள 02 கடை உரிமையாளர்கள 05 முதல் 08 ஆண்டுகள் வரை ரூபா. 1,109,689 கண்டி நிலக்கீழ் பாதையிலுள்ள 05 கடை உரிமையாளர்கள 04 முதல் 05 ஆண்டுகள் வரை	கண்டி நகரின் நிலகீழ் பாதை வாடகையை பெற சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதே நேரம் பொறளை நிலக்கீழ் பாதை வாடகையை செலுத்தாதவர்களுக்கு எதிரா நடவடிக்ககை எடுக்கப்பட்டுவது செயல் முறையில் உள்ளது. எனினும் 2016 ஆம் ஆண்டின் பொறளையின் நிலக்கீழ் பாதையில் இருந்து ரூபா 544, 250.55 தீர்க்கப்பட்டுள்ளது.	2016 ஆம் ஆண்டில் ரூபா 576,489.64 ஐ ரூபா .1,781,623 ல் இருந்து மீட்கப்பட்டுள்ளது. பொறளை நிலக்கீழ் பாதை கடை 02 இன் இருந்து வாடகை சட்டமா அதிபர் ஆலோசனைக்காக குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஜூலையில் கண்டி நிலக்கீழ் பாதையில் உள்ள கடைகளிலிருந்து முழு அளவு மீட்கப்பட்டுள்ளது.
x	**அறவிடப்படாத சம்பளங்களும் ஏனைய படிகளும்** ரூபா.62,004,844 260 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள் ஒரு ஆண்டு ரூபா .62,757,658 94 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள இரண்டு ஆண்டுகள ரூபா .1,718,292 07 அமைச்சுக்களிற்கு விடுவிக்கப்பட்ட பதவியணியின்ர 2013 முதல் 2015 வரை	வீ. அ. அ. சபை ஊழியர்களின் சம்பளத்தை ஈடுகட்ட தவறிவிட்டால், வீ. அ. அ. சபை பணியாளரை விடுவிப்பதற்கு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த தொகையில் (ரூபா. 75,535 / -) ஏற்கனவே அந்தந்த அதிகாரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு ஊழியர்களிடம் இருந்து தவண்ண அடைப்படையில் ரூபா 1.2 மில்லியனை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டு இருக்கின்ற அதே நேரம் தவறாமல் தீர்வு செய்வதற்கு மற்றவர்களுக்கு நினைவூட்டல்கள் அனுப்பபட்டுள்ளன.	260 ஊழியர்களில் 204 ஊழியர்கள் வீ. அ. அ. சபைக்கு மீண்டும் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.. மீதமுள்ள வீ. அ. அ. சபை பணியாளர்களை உரிய அமைச்சில் இருந்து வீ. அ. அ. சபையிற்கும் வீ. அ. அ. சபை ஊழியர்களை உரிய அமைச்சுக்கும் விடுவிப்பதற்காக உரிய அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு. சம்பளம் மற்றும் அந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன.

			தவணை அடிப்படையில் ரூபா 1.2 மில்லியனை, மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததோடு எஞ்சியுள்ள மீதிகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.
xi	**அறவிடப்படாத பதவியணியினர் கடன்கள்** ரூபா. 3,104,786 அதிகாரசபையின் 50 ஓய்வுபெற்ற ஊழியர்கள்	நிலுவைகளை தீர்க்குமாறு உரிய ஊழியர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு அதனை செய்ய தவறும் பட்சத்தில் உத்தரவாதம் அளிப்பவர்களிடம் இருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மொத்த தொகை ரூபா 395,544 / - ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளது. உத்தரவாதம் அளிப்பவரிடம் இருந்து ரூபா.408,140 / ஆன தொகையை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு குழு கூட்டத்தில் மீள்பெற முடியாத நிலுவைத் தொடர்பான விடயத்தை பற்றி விவாதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஆ)	**செலுத்தவேண்டிய கணக்குகள்**		
i	**சேவை நடுனர் வைப்புக்கள்** ரூபா 494,608,295 200 சேவை நாடுனர் வேலைகள் 01 முதல் 07 ஆண்டுகள் ரூபா 227,865,985 119 சேவைநாடுனர் 2010 முதல் 2014 வரை	சேவை நடுனர் வைப்புக்களை கணக்குகளில் சரிசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு வி. ப. ந. நி. (ஆர்எம்ரீஎப்) இலிருந்து எந்தவொரு நிதியைப் பயன்படுத்தினாலும் அவ்வாறு வருமானத்திற்கு திரும்பவும் எழுத சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.	235.8 மில்லியன் ரூபாய் அளவு ஏற்கனவே தீர்க்கப்பட்டு இதில் 156 மில்லியன் ரூபாய் செலவுகள் பிற நிதிகளில் நிறைவு செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டில். வருமானத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. மேலும், இந்த செய்முறையை தொடர்ச்சியாக பின்பற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
ii	**பாதுகாப்பு வைப்புக்கள்** ரூபா 2,278,159 111 ஒப்பந்ததாரர்கள 29 ஆண்டுகளிற்கும் மேலாக	இந்த பாதுகாப்புப் வைப்புக்கள் ஒப்பந்தங்களை வழங்கும் போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன. இருப்பினும், இந்த பாதுகாப்பு வைப்புகளை வழங்குவது சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் வேண்டுகோளின்படி செய்யப்படுகிறது. சில ஒப்பந்த காரர்கள் தங்களது வைப்புகளை கோரி எந்த கோரிக்கையையும் செய்யவில்லை.	20,000.00 ரூபாய்க்கு ஒரு தொகை வழங்கப்பட்டதோடு மற்றய வைப்புக்கள் ஒப்பந்தக் காரர்களால் கோரப்படும் போது விடுவிக்கப்படுகிறன்றன.

iii	**செயற்திட்டங்களிற்கும் ஏனைய ஒப்பந்ததாரர்களிற்கும் செலுத்த வேண்டியவை** ரூபா 973,394,696 1073 ஒப்பந்த வேலைகள் 03 முதல் 10 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கும் மேலாக	மொத்த தொகையில் மொத்தம் ரூபா 47 மில்லியன்கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர்களால் கோரிக்கைகள் விடப்படும் போது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அவ்வாறு விடிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர். இறுதி மீதிகளை பகுப்பாய்வு செய்த பிறகு ஏதாவது எஞ்சியிருந்தால் மீண்டும் எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	608.14 மில்லியன் ரூபாய் தொகை தீர்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் அதில் ரூபா .12 மில்லியனை கணக்குகளில் பதிவு மீண்டும் செய்யப்பட்டன. இ.நா. தினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு நீண்ட காலமாக உரிமை கோரப்படாத நிறுத்தி வைக்கப்பட்ட பணத்திற்கான விபரங்கள் மாகாண அலுவலகங்களில் இருந்து பெறப்பட்டன.. இதுவரை குழுவின் பரிந்துரைகள் கிடைக்கவில்லை. ஏதிர்காலத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் வழங்கப்பட்ட சிபாரிசுடன் இணங்குவதற்கு குறிப்பிடப்பட்டது.
iv	**செயற்திட்டங்களிற்கும் ஏனைய ஒப்பந்ததாரர்களிற்கும் செலுத்த வேண்டியவை** ○ பூரணப்படுத்தப்படாத சிட்டைகள் மீது ரூபா 205,861,302 ○ 28 ஒப்பந்த வேலைகள் 01 ஆண்டிற்குக் குறைவாக ○ அங்ககீகரிக்கப்படாத முரண் வேலைகள் மீது ரூபா 135,099,370 27 ஒப்பந்த வேலைகள் 01 ஆண்டிற்குக் குறைவாக	விசாரணைக்காக உயர் மட்ட குழுவிற்கு சொற் பூசலிலான சிட்டைகள் சமர்பிக்கப்பட்டதோடு அதில் நிறை செய்யப்படுகிறது. எனினும் மொத்த சொற்பூசலிலான சிட்டையில் ரூபா 42.2 மில்லியன் தற்போது தீர்வு செய்யப்பட்டது.	இந்த சிட்டைகளை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட குழுவானது அவர்களது அது அல்ல என்று கூறி எந்த முடிவையும் வழங்கவில்லை. எனவே. அந்த சிட்டைகள் எதிர்கால ஆலோசனைகாக உரிய அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.
v	**ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்த வேண்டியவை** ரூபா .328,923,378 06 ஒப்பந்ததாரர்கள் 01 ஆண்டிற்குக் குறைவாக	மொத்த தொகையில் மொத்தம் ரூபா 47 மில்லியன் தீர்வையாகும் நிலையில் உள்ளது. வேறுப்பாட்டுக்குழுவின் இறுதி முடிவு கிடைத்தப் பின்னர் எஞ்சிய சிட்டைகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	மிகையான சிட்டைகள் சம்பந்தப்பட்ட ரூபா 47 மில்லியனைத் தவிர மற்ற எல்லா சிட்டைகளும் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளன.
vi	**வருமானத்திற்கு மாற்றப்படாத தாமதக் கட்டணங்கள்** ரூபா . 676,846,546 450 ஒப்பந்ததாரர்கள 2010 to 2015	நேர நீடிப்பினை பெற்றிருக்காத அந்த ஒப்பந்தக் காரர்களுக்கான திரவமாக்கல் சேதங்களின் வருமானத்தை திருப்பி எழுத நடவடிக்கை எடுக்கப்படும்.	ரூபா 341,143,715 / 75 இலான ஒரு தொகை செலவு வைக்கப்படுகிறது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 42,952,335 / 19 ஆன தொகை ஒப்பந்தக்

				காரர்களுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டது. பணத்தை விடுவிப்பதற்காக கணக்காய்வாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்ட தகுதிவாய்ந்த குழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
2.2.6	**கணக்காய்விற்கான சான்றின்மை** மொத்த அலகுகள், அலகு விலைகள் மற்றும் மொத்தப் பெறுமதிகளை உள்ளடக்கிய விபரமான பட்டோலைகள் போன்ற சான்றுகள் இன்மை காரணமாக ரூபா 552,044,028 கூட்டுத்தொகையான கருவிகள், நேர் பொருட்கள், நேரில் பொருட்கள், உதிரிப் பாகங்கள், எழுதுகருவிகள் மற்றும் அச்சுப் பொருட்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.		பொருத்தமான தகவலை சமர்ப்பிக்க சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.	2016 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை மூடுவதற்கு இல. 346 நிதி சுற்றறிக்கையில் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
2.3	**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.** கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.			
	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள			
i	நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2015 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 336 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை	அதிகாரசபையின் 02 உப அலுவலகங்களிற்கும் 03 பிரிவுகளிற்கும் வழங்கப்பட்ட ரூபா 31,651,973 கூட்டுத்தொகையான சில்லறைக் காசு கட்டுநிதிகளும் எரிபொருள் கட்டுநிதிகளும் மீளாய்வாண்டின்	(மற்பணங்களைத் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு அவ்வாறு தவறும் பட்சத்தில் அவர்களது சம்பளத்தில் இருந்து மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிசார் சுற்றறிக்கை எண் 346 இன்படி சம்பந்தப்பட்ட தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருகின்றன. மேலும் எதிர்காலத்தில் இதை மீண்டும் செய்யாதிருப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

		இறுதியிலுள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.		
ii	நிதிப்பிரமாணம் 396	வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாதுள்ள ரூபா 3,903,709 பெறுமதியான 67 காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஜூலை 2016 ல் திருத்த நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.	இந்த காசோலைகள் 2016 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்டுள்ளன. ரூபா 124,973.20 மற்றும் ரூபா 2,862,161.07 இலான தொகையிடப்பட்ட புதிய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதோடு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டன. வருவாய் அதிகாரிகள் நி. சு. (எப்.ஆர்) 396 ஐ பின் பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.
(ஆ)	2003 யூன் 02 ஆந் திகதிய பிஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை			
i	9.4 ஆம் பிரிவு	அதிகாரசபையின் 260 பதவிநிலை அங்கத்தவர்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.	அமைச்சிக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களை மீள் அழைக்க நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதோடு அமைச்சரவை அனுமதியுடன் எதிர்காலத்தில் அலுவலர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	204 ஊழியர்கள் மீண்டும் வீ. அ. அ. சபைக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக உரிய அமைச்சுடன் எழுத்து மூலம் தொடர்பு இருந்தது.
ii	9.3.1 (viii) ஆம் பிரிவு	முகாமைத்துவ மட்ட பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகார சபையினால் வெற்றிகரமான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	வெற்றிகரமான திட்டம் ஒன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.	இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது.
3	**நிதி மீளாய்வு**			
3.1	**நிதிசார் விளைவுகள்** சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள்,முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,962.68 மில்லியனான வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 1,674.93 மில்லியன் வரிக்கு முந்திய மிகையினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 6,637.61 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 12,506 மில்லியனால் அதிகரித்திருந்தமையே நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது. இருப்பினும், அதிகாரசபையின் செயற்பாட்டுச் செலவினமும் மீளாய்வாண்டில் ரூபா 5,868.47 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதேவேளை, உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கான கடன்கள் அதிகரித்திருந்தன.		

3.2	**அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல்** வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல் ரூபா 21,307 மில்லியன் ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 45 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், அரசாங்க பங்களிப்பு மற்றும் அதிவேகப் பாதை வருமானம் (அரசாங்க முதலீடுகளிலிருந்தான உழைப்புக்கள்) என்பன ரூபா 1,016 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக அமைந்திருந்ததுடன் அதிகாரசபையின் சுய பெறுமதி சேர்த்தல்கள் எதுவும் காணப்படவில்லை. அதேவேளை, கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் அரசாங்கப் பங்களிப்புக்களும் உதவிகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீதிகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய வீதிகளை நிர்மாணித்தல் போன்ற அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.		
3.3	**பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன. **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** **2015** — **ரூபா மில்லியன்** **2014** — **ரூபா மில்லியன்** தேறிய நடைமுறைச் சொத்துக்கள் (855.55) — 2,717 தேறிய சொத்துக்கள் 161,409 — 170,633 திரண்ட பற்றாக்குறை (12,740) — (13,576) மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் திரண்ட பற்றாக்குறை முன்னைய ஆண்டின் ரூபா 13,576 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 12,740 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும்,தேறிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் முறையே ரூபா 3,572.55 மில்லியன் அல்லது 131 சதவீதத்தினாலும் ரூபா 9,224 மில்லியன் அல்லது 05 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன.		
4 4.1	**செயற்பாட்டு மீளாய்வு** **செயலாற்றல்**		
4.1.1	**தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்** இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.		
i	தேசிய வீதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 4,994.78 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும்,மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1,996.81 மில்லியன் அல்லது 39.97 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.	எமது புள்ளி விபரங்களின்படி 2015 ஆம் ஆண்டில் 70% பயன்படுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் திகதி பொது கணக்காய்விற்கு பொருத்தமான புள்ளிவிவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டின் வீ. அ. அ. சபையின் முன்னேற்ற அறிக்கை தொடர்பான பிரிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. எனவே வீதிகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பு முன்னேற்றம் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவில் இருந்து சேகரிக்கப்பட்டன. பராமரிப்பு முகாமைத்துவ பிரிவில் பெறப்பட்ட தகவல்கள் சரியாக 2015 ஆம் ஆண்டின் முன்னேற்ற	மொத்த ஒதுக்கிட்டின் 85.2% மான ரூபா 5000 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் உண்மையாக வீதி பராமரிப்புக்கு செலவிட்ட தொகை ரூபா 4259.8 மில்லியன்.

		அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.	
ii	23 செயற்திட்டங்களில் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் 06 நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களினால் அமுலாக்கப்பட்டிருந்த வீதி பராமரிப்பு வேலைகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 161.37 மில்லியன் கிரயத்தில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த வேலைகள் மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 27.91 மில்லியனாக இருந்தது.	பின்வரும் காரணங்கள் காரணமாக வீதி பராமரிப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட முடியவில்லை. • சிட்டைகளை செலுத்துவதற்கு ஆண்டின் முதல் 03 மாதங்களில் போதுமான நிதி கிடைக்கவில்லை. • சிட்டைகள் கட்டண தாமதம் காரணமாக, கட்டுமான பணிகளின் முன்னேற்றம் குறைவாக இருந்தது.	இத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் முடிவில் நிறைவடைந்துள்ளன, ஆனால் சிட்டைகள் சடுதியாக வந்தன.
iii	காலரீதியான பராமரித்தல், வடிகால்கள் மற்றும் கட்டமைப்பு மேம்படுத்தல்கள், சமிக்கை விளக்கு முறைமைகளையும், வீதி விளக்குகளையும், வீதி குறிகாட்டிகள் மற்றும் அடையாளங்களையும் பராமரித்தல், சிற்றளவு வீதி பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் அவசர பராமரித்தல்கள்/அனர்த்த வேலைகள் என்வற்றிற்காக ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. அதன் விளைவாக, நியம தர மட்டத்தில் தேசிய வீதி வலைப்பின்னலை பராமரித்தல் என்பது, ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைவான பயன்படுத்தல்கள் காரணமாக பாதிப்படைந்திருந்தது.	ஒதுக்கீடுக்கு எதிரான உண்மையான செலவின் சதவீதம் கீழே சுருக்கப்பட்டுள்ளது: அவ்வப்போது பராமரிப்பு 69% வடிகால் மற்றும் கட்டமைப்பு முன்னேற்றம் 50% சிக்னல் ஒளி அமைப்புகளின் பராமரிப்பு, 56% தெரு விளக்குகள், வீதி அடையாளம் மற்றும் குறிப்பது மற்றும் சிறிய வீதி பாதுகாப்பு மேம்பாடுகள் அவசர பராமரிப்பு / பேரழிவு வேலைகள் 59%	ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவது உரிய காலத்தில் முற்பணம் பெறப்படுவதில்லை.
4.1.2 i	**பொறியியல் சேவைகள் மற்றும் பாலங்கள் வடிவமைப்பு பிரிவின் செயலாற்றல்** பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பிரிவின் வேலைத் திட்டம் 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்ககப்பட்டிருந்த போதிலும், அத் திட்டத்திற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2016 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டம் இப்போது முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது.
ii	மீளாய்வாண்டின் போது 69 பாலங்களை வடிவமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 39 பாலங்கள் மாத்திரமே வடிவமைக்கப்பட்டிருந்தன.	2016 ஆம் ஆண்டில் பாலங்கள் வடிவமைப்பதற்கான வேலைகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில பாலங்களை நிர்மாணித்தல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது.	தி. மு. அ. மற்றும் வீ. அ. அ. ச. அல்லாத பணிகள் மூலம் அவசர வேலைகளை வழங்குவதன் மூலம் இலக்கை அடைய

			முடியவில்லை.
iii	பாதுகாப்பு தலைமையகத்திற்கான நுழைவுப் பாதையிலுள்ள பாலங்களினதும் கடற் சுழியோடல் விஸ்தரிப்பு மீதான தெஹிவலை கால்வாய்க்கு மேலுள்ள பாலத்தினதும் வேலைகள் அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராதிருந்த போதிலும், அதிகாரசபையின் பால வடிவமைப்பு பிரிவினால் வடிவமைக்கப்பட்டிருந்தன.	அவசர தேவைகளின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டத்திற்கு வெளியே இரண்டு பாலங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.	கடல் சுழியோடல் நீடிப்பு செயற்திட்டம் மற்றும் பாதுகாப்பு தலைமை அணுகுவீதிக்கான செயல்திட்டம் வீ. அ. அ. சபை இன் கீழ் உள்ளது.
4.2 4.2.1	**ஒப்பந்த நிர்வாகம்** **வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்** மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(அ)	**வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள்**		
i	ரூபா 25,103 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் 259 வீதிகளின் முன்னேற்ற வேலைகளை பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வெலைகளின் ஒட்டமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டன. அந்த வீதி முன்னேற்ற வேலைகளில் 206 வேலைகள் அதிகாரசபைக்கு உரித்தற்ற வேலைகளாக காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான கிரயங்கள் முறையே ரூபா 17,928 மில்லியன் மற்றும் ரூபா 913 மில்லியனாகும். பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான 53 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு உரித்தானவையாக காணப்பட்டன. அவற்றின் ஒப்பந்தப் பெறுமதியும் செலவிடப்பட்ட தொகையும் முறையே ரூபா 7,175 மில்லியன் மற்றும் ரூபா 581 மில்லியனாக காணப்பட்டன.	பின்வரும் காரணங்களுக்காக பௌதீக முன்னேற்றம் 50% ற்கு குறைவாக இருந்தது. • நிலம் கையகப்படுத்துதல் வேலையில் தாமதம் • நிலவும் சூழ்நிலைகள் • பொதுச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு வீ. அ. அ. சபை செயற்திட்டங்கள் அல்லாத சில செயற்திட்டங்கள் அசல் நோக்கம் முடியமுன் கைவிடப்பட்டது.	வீ. அ. அ. சபை வீதி கட்டுமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வீ. அ. அ. சபை அல்லாத 4 வீதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வீ. அ. அ. சபை அல்லாத மேலே உள்ள 4 வீ.அ.அ.ச அல்லாத வீதிகள் கிட்டத்தட்ட முடியும் நிலையில் உள்ளது.
ii	மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டிய மேலும் 84 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,902 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் எந்த வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அச் செயற்திட்டங்களில் ஒன்றுக்காக ரூபா 2.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த 84 செயற்திட்டங்களில், 54 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு	முன்னுரிமைகளை கருத்தில் கொண்டு நிதி இல்லாததால் வீ. அ. அ. சபை செயற்திட்டங்களை கைவிட்டது.. எவ்வாறாயினும் இடை நிறுத்தப்பட்ட வீ. அ. அ. சபை செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் தொடரப்படும்.	நிதி கிடைக்காததால், சில செயல்திட்டங்கள் முடிக்கபடவில்லை. மற்றவைகள் திட்டப்பணிகளை குறைப்பதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் வீதிகள் நிறைவு

	உரித்தற்றவையாக இருந்ததுடன் அவற்றின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,465 மில்லியனாகும்.		செய்யப்பட்டுள்ளன.
(ஆ)	**<u>உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்பி)</u>** வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1,433.85 கிலோ மீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 152 பில்லியன் தொகையான கடன்களை பெறுவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 64 வீதிகள் புனரமைப்பதற்கு ரூபா 152 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. அதிகாரசபை 2012 – 2015 வரையான காலத்தில் 07 உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 131,441 மில்லியன் மொத்தமான கடன்களை பெற்றிருந்தது. அதில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,523 மில்லியன் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் செலுத்தவேண்டிய பகுதி ரூபா 126,918 மில்லியனாகும் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் பகுதி என்பவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.		
i	இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. (i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் (எல்பிஎவ்பீ) கீழுள்ள வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக 54 வீதிகளிற்கான ஒப்பந்த பிரேரணைகளை ஒப்பந்தகாரர்கள் தாமே கொண்டு வந்திருந்தனர். சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகளின் பிரகாரம், 54 வீதிகளிற்குமான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 162 பில்லியனாக காணப்பட்டதுடன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (சீஏரீஈசீ) ரூபா 146.5 பில்லியனுக்கு இந்த ஒப்பந்த வேலைகளை	நெடுஞ்சாலைத் திட்ட அட்டவணை (எச்.எஸ்.ஆர்) + 20% மேந்தலை மற்றும் இலாபம் மற்றும் கிடைக்கக்கூடிய சந்தை விகிதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், மதிப்பீட்டாளரின் அளவை கருத்தில் கொண்டு தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு ஒவ்வொரு ஒப்பந்தக் காரர்களினதும் கோரிக்கைகளையும் மதிப்பிட்டுள்ளது. பொதுவாக, பொறியாளர் மதிப்பீடு ஒப்பந்த விலை நிர்ணயிக்கும் வழிகாட்டியாக பயன்படுத்தப்படுகிறது. இந்த விலைக்கு ஒப்பந்தக்காரர் உடன்படவில்லை என்றால் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள் முதல் குழு (SCAPC) ஒப்பந்தக்காரருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் மற்றும் வேலைக்கான அவசியமும்	எதிர்கால வீதி செயல்திட்டத்திற்கான கோரப்படாத முன்மொழிவுகளுடன் ஈடுபடும் செயற்திட்டங்களில் கொள்முதல் வழிகாட்டி இணைப்பு 30, "சுவிஸ் சவால் வழிமுறையை பின்பற்றுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

	வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது. இருப்பினும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவானது சீஏரீஈசீ இனால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதியினை எவ்விதக் காரணமுமின்றி ரூபா 155.79 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.	அவசரநிலையையும் கருத்தில் கொள்ளத்தக்க வகையில், பொறியாளர் மதிப்பீட்டிற்கு நெருக்கமான விலையில் ஒரு நியாயமான விலைக்கு வந்துசேர்கிறது. வழக்கமாக இந்த விலை தெ. ம. கு பரிந்துரை விலை மற்றும் ஒப்பந்தக்காரர் மேற்கோள்விலைக்கும் இடையே சமரசப்படும்.	
ii	ஒப்பந்தகாரரின் பிரேரணைகளை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) முறைப்படி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை விடயங்கள், அளவைகள், மதிப்பாய்வை ஆதாரப்படுத்தும் வீதங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீதிக்குமாக பொறியியலாருடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நெடுஞ்சலை நியம வீதத்தை (எகஎஸ்ஆர்) பயன்படுத்தி சீஏரீஈசீஇனால் ஒப்பந்தகாரருடைய பிரேரணைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அளவீட்டு பட்டியலில் (பிஓகியூ) ஒப்பந்தகாரரால் பிரேரிக்கப்பட்ட வீதங்களை பொறியியலாருடைய வீதங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்வாக இருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிலிருந்துஒப்பந்தகாரர்களிற்கு வீதங்கள் முரண்பட்டிருந்தன.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது ஒவ்வொரு ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தின் பரிந்துரையாளரின் அளவிலான கருத்திற் கொண்டு (எச்.எஸ்.ஆர்) + 20% மேந்தலை மற்றும் இலாபம் மற்றும் கிடைக்கக்கூடிய சந்தை விகிதங்கள் ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்படும் பொறியியலாளர் மதிப்பீட்டை ஒப்பிடுவதன் மூலம், தெ. ம். குழு ஒவ்வொரு ஒப்பந்தக் காரர்களினதும் கோரிக்கையை ஒப்பிட்டு மதிப்பீடு செய்துள்ளது. ஒப்பந்த விகிதங்கள் தளத்தின் இடம், ஏற்கனவே இருக்கும் வீதி நிலை, போக்குவரத்து பொருட்கள், ஒப்பந்ததாரர் வசதிகள், தளத்தின் வானிலை மற்றும் ஒப்பந்தத்தின் முன்னைய ஆண்டு ஆகியவற்றின் காரணமாக ஒப்பந்ததிற்கு ஒப்பந்தம் வேறுபட்டிருக்கலாம். செயல்திட்டத்தின் அருகே பொருத்தமான மூலபொருட்கள் பற்றாக்குறையாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, ஒப்பந்தக்காரர்களின் விகிதம் அதிகமாக இருக்கும். எவ்வாறாயினும் ஒவ்வொரு தொ. ம. குழுவும் பொறியாளர்களின் மதிப்பீட்டை ஒப்பிடுவதன் மூலம் விகிதங்கள் உயர்ந்தவையாகவும் குறைவாகவும் இருக்கும் சில உருப்படிகளை உயர்த்திக் காட்டியுள்ளன. இருப்பினும், தொ. ம குழு ஒப்பந்தத் தொகைக்கு அதிகமான கருத்தை வழங்கியுள்ளதோடு பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு நெருக்கமாகப் ஒப்பந்த தொகைக்கு இணக்கம் செய்யுமாறு தொ. ம. குழு எஸ். ஏ. பி. சீ யிற்கு பரிந்துரை செய்துள்ளது.. எனினும், இதற்கிடையில், பொறியாளரினால் மதிப்பீடானது துறைமுகங்கள் மற்றும்	"சுவிஸ் சவால் வழிமுறை" ஐ பயன்படுத்துவதன் மூலம், அரசாங்கத்திற்கு அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்காக குறைந்த விலை தேர்ந்தெடுக்கப்படும். ஒப்பந்த தொகைக்கு இணக்கம் செய்யுமாறு தொ. ம. குழு எஸ். ஆ. ஏ. பி. சீ. ற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

		நெடுஞ்சாலைகள் செயலாளரால் அனுமதியளித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	
iii	2012 இன் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிகமாக அஸ்பற் இடப்பட்டிருந்த சில வீதிப் பகுதிகள் எல்எவ்சீஎவ்பி இன் கீழ் புனரமைப்பதற்காக திரும்பவும் சேர்க்கப்பட்டிருந்தன.	2012 இல் வெள்ளம் காரணமாக வீதிகள் இந்த பகுதி மிகவும் மோசமாக சேதமடைந்ததோடு மேற்பரப்பு தோல்விகள் காரணமாக இந்த பிரிவு போக்குவரத்துக்கு பொருத்தமற்றது. எனவே எல் பீ எப் பி இன் கீழ் வீதி புணரமைப்பு திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டது.	இந்த வீதிகள் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன. வீதியின் ஒட்டுமொத்த மேற்பரப்பு நிலையானதாக தரத்திற்கு இல்லை. எனவே எல் பீ எப் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்கியது அவசியமாகும்.
iv	உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் 28 வீதிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 55,392.2 மில்லியன் கடன் பெற்றிருந்தது. பெறப்பட்ட கடனில், செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஏனைய நடவடிக்கைகளில் ரூபா 28,000 மில்லியன் தொகை செல்வழிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 21,238.98 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், கிடைக்கக்கூடிய கடன் மீதி ரூபா 6,153.34 மில்லியனாக இருந்தது. இருப்பினும், செய்யப்பட வேண்டிய மிகுதி வேலைகளிற்காக பெறப்பட்ட கடனிலிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா 34,153.34 மில்லியனாக இருந்தது. இதன்படி,மிகுதி வீதி வேலைகளிற்காக கொடுப்பனவுகளை செய்கின்ற வேளையில்எதிர்காலத்தில் கட்டாயமாக நிதிப்பிரச்சனைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதுடன்இது நிர்மாண வேலைகளை மோசமாக பாதிக்கக்கூடும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 28,000 மில்லியனை அதிகாரசபை, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு நிதிகள், நிர்வாக செலவுகள் மற்றும் பிற நடவடிக்கைகளில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் மற்ற செயற்திட்டங்களின் வீதி கட்டுமான பணிகள் பற்றிய மாதக் கோரிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்திற்கு மாறாக மற்ற நடவடிக்கைகளுக்கு கடன் தொகையைப் பயன்படுத்த பின்வரும் காரணங்கள் இடம்பெற்றன: வெளிநாட்டு நன்கொடை முகவர் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், சீனாவின் அபிவிருத்தி வங்கி, சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டு வருகின்ற பல பிரதான வீதி நிர்மாண செயற்திட்டங்களை வீ. அ. அ. சபை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த செயல் திட்டத்தின் அதிகமான வற்றிற்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை அளித்துள்ளதோடு அவை அட்டவணை இலக்குக்குள் நிறை வேற்றப்பட வேண்டி உள்ளது. பல்வேறு கடன் உடன்படிக்கைகளின்படி அதே நேரத்தில் ஒவ்வொரு கொடுப்பனவினதும் பெரும் பங்கு இந்த நன்கொடையாளரின் நிதியுதவி ஒப்பந்தங்களின் கீழ் அந்தந்த கடன்களில் இருந்து	தற்போது 26 செயல் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இரண்டு (02) செயல் திட்டங்களானது 31.12.2018 க்கு முன் முடிவடியும் நிலையில் உள்ளது. 2018 மே மாதம் வரை தே. சே. வங்கியில் வாக்களிப்பின் கீழ் ரூபா 17.65 பில்லியன் பெற்றுள்ளோம். எனவே எந்தவொரு நிதி நெருக்கடியும் இல்லை.

		செய்யப்படுகிறது. ஒவ்வொரு பணத்திற்கும் அரசாங்க பங்களிப்பு உள்ளூர் நிதிகளிலிருந்து வீ. அ. அ. சபை மூலம் செய்யப்பட வேண்டும். இருப்பினும் 2014 ஆம் ஆண்டுக்கான திரைசேரியிலிருந்து பணத்தை ஒதுக்கி வைத்தல் தற்போது நடைபெறும் சாலைப் பணிகள் பணம் செலுத்துவதற்கு திரைசேரியால் வெளியிடப்படவில்லை. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் வெளிநாட்டு நிதி வழங்குபவர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துவதற்கும் வீ. அ. அ. சபை உடனடியாக மீதி தொகையை செலுத்த வேண்டும். • இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. • தற்போது இடம்பெறும் வீதி வேலைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டுக்கான திரைசேரியால் ஒதுக்கப்பட்ட பணம் விடுவிக்கவிக்கபடவில்லை. • ஆகையால் தே. சே. வ. இலிருந்து கடன்களை தீர்ப்பதற்கு ஒரு குறுகிய கால கடன் பெறப்பட்டது.	
V	பெல்மடுல்ல – எம்பிலிபிட்டிய – நெகாகம வீதியை புனரமைப்பதற்கு மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்டிருந்த ரூபா 2,172 மில்லியன் தொகையான கடனைப் பயன்படுத்தி எம்பிலிபிடியவில் சனாதிபதி இல்லத்தையும் 9.21 கி.மீ விஸ்தீரணமுடைய ஏனைய 17 வீதிகளையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 161.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.	எம்பிலிப்பிட்டியவில் ஜனாதிபதி வீட்டை நிர்மாணிப்பதற்கான மூல பொட்களை வழங்குவதற்காக செயலாளர், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. பின்னர் ஆர். இ என்பது 10 வது பொறியியல் சேவை ரெஜிமென்ட்டிற்கு மூலபொருள் வழங்கியுள்ளது. இருப்பினும் நிலைமை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட (எஸ்சீஏபிசீ), பணம் செலுத்திய தொகையை கழிப்பதற்கும், அதன்படி மொத்த மாதாந்த இடைக்காலச் செலுத்துதல்களில் இருந்து 18.45 மில்லியன் ரூபாவை கழிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. 9.21 கி.மி. கூடுதல் 17 வீதிகள் நிர்மாணிக்க கூடுதல் பணம் செலுத்தியது எஸ்சீஏபிசீ ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தே. சே. வ. இலிருந்து டிசம்பர் வரை பெறப்பட்ட தொகை ரூபா 2096	மாதாந்த இடைக்கால கொடுப்பனவுகளில் இருந்து மொத்த தொகையை கழிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

		மில்லியன் வரைக் காட்டப்பட்டதானது பெல்மடுல்ல - எம்பிலிப்பிட்டிய - நோனகம வீதி.செயற்திட்டத்திற்காகும். எனினும், ஒப்பந்தத்திற்கு முற் பணம் கொடுப்பதற்காக ரூபா 596 மில்லியன் செலுத்தப்பட்டது. மேலே கூறப்பட்ட உருப்படி 03 பணிகளுக்கு ரூபாய் 1500 மில்லியனை தே. சே. வ. கடனிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. எனவே, நிதி முன்னேற்றம் பௌதீக முன்னேற்றத்துடன் வேறுபடுகின்றது.	
vi	08 வீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வீதிகளின் நீளம் மற்றும் அகலம், கொங்ரீட் வடிகால்கள், மதகுகள், பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் வீதியின் மேற்பரப்பு நிர்மாணம் போன்ற சில வேலைகளைக் குறைத்து ரூபா 3,333 மில்லியன் தொகையான சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்,இச் சேமிப்புக்கள் மூலச் செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட நோக்கெல்லையினை கருத்திற்கொள்ளாது ஏனைய நிர்மாண செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. ஏனைய செயற்பாடுகளின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.	செயற்திட்டங்களின் முன்னுரிமை காரணமாக இந்த சேமிப்புகள் பயன்படுத்தப்பட்டன.	குறிக்கப்பட்டது.

செயற்பாடு	செலவிடப்பட்ட தொகை
	ரூபா மில்லியன்
அங்கீகரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு செயற்திட்டங்களிற்கு முரணாக 59 வீதிகளை நிர்மாணித்தல்	943.54
செயற்திட்டத்திற்கு முரணாக ஏனைய வீதிகளில் பாலங்களை நிர்மாணித்தல்	65.86
கேகாலையில் டெளசன் விடுதியை நிர்மாணித்தல், மாகாணப் பணிப்பாளரின் அலுவலகம் மற்றும் ஏனைய வீதிகளை நிர்மாணித்தல்	1,370.23
07 ஏனைய முரண்பட்ட வீதிகளை நிர்மாணித்தல்	953.47
மொத்தம்	**3,333.10**

(இ)	**நரோவூட் அப்கோட் வீதியில் பாலத்தின் நிர்மாணம்**		

i	பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. நோர்வூட் அப்கோட் வீதியில் 9.12 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணம் ரூபா 3,456,682 தொகையில் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 4 மீற்றர் முதல் 7 மீற்றர் வரை பாலத்தின் அகலம் அதிகரிக்கப்பட்டிருந்தமையால் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 8,162,377 இற்கு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 3,425,378 தொகையினை பெற்றுக்கொண்ட பின்னர் பாலத்தின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.	இது 2016 க்கான வேலைத்திட்டத்தில் நேரடி ஊழியரின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.	எஞ்சிய வேலை இப்போது முடிவடைந்துள்ளது.
ii	பாலத்தின் மேற்பரப்பின் ஒரு பகுதியில் மாத்திரம் கொங்றீட் இடல் பிரயோகிக்கப்பட்டிருந்ததுடன் அபாய சமிஞ்சை உருவாக்கப்பட்டிருந்த போதிலும்,கை இயந்திரத்தைப் பயன்படுத்தி பாலத்தின் ஏனைய பகுதிகள் போதிளவில் பாதுகாக்கப்படாமையினால் விபத்து ஆபத்துக்கள் உயர்வாக இருந்தன.	இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும்.	எஞ்சிய வேலை இப்போது முடிவடைந்துள்ளது.
iii	பாலத்தின் நிர்மாணத்தை 2010 ஒக்தோர் 26 இல் தொடங்குவதற்கும் 2011 மார்ச் 25 இற்கு முன்னர் முடிவுறுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணம் 2016 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	2015 ஆம் ஆண்டில் வேலை செய்ய நிதி இல்லாததால் இது 2016 வேலைத் செயற்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் நிதி பெறப்படுவதன் அடிப்படையில் வேலை செய்யப்பட முடியும்.	எஞ்சிய வேலை இப்போது முடிவடைந்துள்ளது.
(f)	**விஜயபாகுகந்த பாலத்தின் நிர்மாணம்** அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 7.9.11 ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 30.83 மில்லியன்பொறியியல் மதிப்பீட்டை விடவும் 25.31 சதவீதம் குறைவாகரூபா 23.90 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. பாலத்தின் நிர்மாண வேலைகளை 2012 சனவரி 09 இற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 04 மாதங்கள் கடந்த பின்னரும் கூட 2014 திசெம்பர் வரையிலும் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்வில்லை. இருப்பினும், தாமதக் காலத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன், மேலதிக வேலைகள் காரணமாக ஒப்பந்தப்	கொள்முதல் வழிகாட்டல் நெறிப்படி ஒப்பந்த மதிப்பீட்டு விலை பொறியியலாளர்களின் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக இருக்கும்போது விலைமனுகோரலை நிராகரிக்க கடுமையான மற்றும் விரைவான விதி இல்லை. மேலும் இது ஒரு சிக்கலான கட்டுமான செயல்திட்டம் அல்ல. விலை குறைவாக இருந்தபோதிலும் ஒப்பந்தத்தின் தரம் குறைக்கப்படுவதில்லை. ஈவரீ வழங்கப்படாத போதிலும் செயற்திட்டங்களில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக ஏற்கனவே திரவ இழப்புக்கள் கழிக்கப்பட்டன. கொத்மலை நீர்த்தேக்கத்தின் செயல்பாட்டுக் கூறுகள் காரணமாக, கட்டுமானத் செயற்திட்டம் மாற்றப்பட	வேலை இப்போது நிறைவடைந்துள்ளது..

	பெறுமதி ரூபா 11,992,423 இனால் அல்லது 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது	வேண்டும். இதன் விளைவாக, கூடுதல் தொகை ரூபா. 11.9 மில்லியன் செலவிடப்பட வேண்டியிருந்தது.	
ii	பாலம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும்,பாலத்தினை பயன்படுத்துவோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பக்கவாட்டுச் சரிவுச் சுவர்களின் நிர்மாணம், கை இயந்திர செப்பனிடுதல், பாலத்தின் மேற்பரப்பின் மீது தாரிடுதல் மற்றும் பாலத்திற்கும் நுழைவுகளிற்கும் இடையே பின்புறத்தை நிரப்புதல் போன்ற வீதியின் பூரணப்படுத்தல் வேலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.	பாலத்திற்கான அணுகுவீதிகள் ஐ வீதி செயல் திட்டங்களில் இணைக்கப்பட்டது.	ஐ வீதி செயல் திட்டங்களின் கீழ் முடிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
4.2.2	**திருகோணமலைவெளிச்சுற்றுவட்ட வீதியின்புனர் நிர்மாணம்** ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495 மில்லியன் தொகை செலவழித்து மட்டக்களப்பு – திருக்கோவில் ஆறு- திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்தை பின்தள்ளி தொடர்புபட்ட அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை (ஏ-6) என்பவை தொடர்புபடுகின்ற திருகோணமலையிலுள்ள வெளிச்சுற்று வட்ட வீதிகளில் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இருப்பினும், நிதிகள் இன்மை காரணமாக பாலங்களை தொடர்புபடுத்துகின்ற வீதிகள் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2016 மே 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இது ஐக்கிய இராச்சியத்தின உருக்கு பாலத்திட்டத்துடன் தொடர்புடையது.	நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைகளுக்கு ஏற்ப நிலத்தை கையகப்படுத்தியதன் மூலம் வீதிகளை நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
4.2.3 i	**கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்** பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. கதிர்காமம் சுற்றுலா விடுதியின் நிர்மாண வேலைகள் 2004 இல் தனியார் கம்பனி ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர், நிர்மாண வேலைகள் நேர் ஊழிய அடிப்படையின் ஊடாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து; சுற்றுலா விடுதியின் கீழ் மாடியின் நிர்மாண வேலைகள் ரூபா 12,352,242 இற்காக ஒப்பந்தகாரருக்கு 2010 செப்தெம்பர் 28 இல் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக ஒப்பந்தகாரருக்கு	எஞ்சியுள்ள பணியை முடிக்க பொறியாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படி, ரூபா 2.19 மில்லியன் பிடிப்பு பணத்தில் இருந்து கழிக்கப்பட்டுள்ளது .	நிர்மான வேலைகள் செய்யப்பட்டுள்ளதோடு ஊழியர்களின் பாவனைக்காக சுற்றுலா விடுதி தயார் நிலையில் உள்ளது.

	ரூபா 11,771,448 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2011 யூன் 07 இற்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாண வேலை 2015 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.		
ii	ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கீழ் மாடி வேலைகளில் குறிப்பிடத்தக்களவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், முதலாவது மாடியின் நிர்மாண வேலைகளும் அக் குறைபாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் 2014 திசெம்பர் 24 இல் ரூபா 7,922,316 இற்காக அவருக்கே ஒப்படைக்கப்பட்டிருந்தன.	கலைக்கப்பட்ட சேதங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்	தற்போது 95% வேலை நிறை வேற்றப்பட்டுள்ளது.
iii	கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய விதத்தில் நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துவதற்கு 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒரு புதிய ஒப்பந்தமாக ஒப்பந்தத்தின் எஞ்சிய பணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
4.4 i	**பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள** ,து தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2008 ஆகஸ்ட் 20 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவா வீதியிலுள்ள காணிக்காக வருடாந்த குத்தகை வாடகையாக ரூபா 6 மில்லியன் செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், 2009 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாதாந்த வாடகை ரூபா 1,000 எனத் திருத்தப்பட்டது. அமைச்சரவையால் நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த குத்தகை கொடுப்பனவை குறைப்பதற்கு இயலக்கூடியவாறு குத்தகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குத்தகை உடன்படிக்கை ஏற்கனவே கையொப்பமிடப்பட்டு, பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சட்டபூர்வமான உடன் மிகை கட்டண பணத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2009 ஆம் ஆண்டில் அமைச்சரவை குத்தகை வருவாயை வருடத்திற்கு ரூபா 1000 என திருத்தி அமைத்துக்கொள்ள புதிய முடிவு எடுக்கப்பட்டது. எனினும், 2008 ஆம் ஆண்டின் முந்தைய அமைச்சரவை முடிவை அடிப்படையாகக் கொண்டு வருட வருடம் நாம் செலுத்திய தொகை ரூபா 6 மில்லியன் புதிய முடிவுக்கு எதிரானதாக கருதப்படுகிறது. எனவே, உண்மை செலுத்துதல் முந்தைய கட்டணத்தைவிட குறைவாக இருக்க வேண்டும் என்பதால், நாங்கள் முந்தைய கட்டணத்தை தொடரவில்லை.	2016 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானதோடு 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் கணக்குகளில் தேவையான சீராக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

		எனவே, எந்த தண்டனையும் சுமத்தப்பட்டால், இரு தரப்பினரும் நிலைமையை நன்கு அறிந்திருப்பதால், நாங்கள் ஒரு விலக்கை கோர முடியும்.	
ii	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் 2014 நவம்பர் 29 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் வரை தலைமை அலுவலகம் புதிய கட்டிடத்திற்கு குடிபெயர்ந்திருக்காமையால் 2014 திசெம்பரிலிருந்து 2015 ஏப்ரல் வரை ரூபா 49.4 மில்லியன் தொகையான கட்டிட வாடகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.	கட்டிட நிர்மாணத்தின் தாமதங்கள் காரணமாக,"செத்சிறிபாய" இருந்து நகர்த்துவது தாமதமாகியது. ஆதன் காரணமாக ந. அ. அ. சபைக்கு வாடகை செலுத்த வேண்டியிருந்தது., ஆனால் கட்டடம் கட்டப்பட்டு முழுமையாக இப்போது ஆக்கிரமிக்கப்பட்டது.	தலைமை அலுவலகம் கட்டப்பட்டு முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டது.
iii	குறித்த வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராமை மற்றும் நிதிகள் கிடைக்காமை என்பன காரணமாக 2011 முதல் 2015 வரையான ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 14,857.52 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய 169 வீதிச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவை தொடர்பில் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த செலவினம் ரூபா 2,213.87 மில்லியனாகும். ரூபா 7,293.38 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய மேலும் 73 வீதிகளை அகலமாக்கல் மற்றும் முன்னேற்றுதல் செயற்திட்டங்கள் 2015 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்த மொத்தக் கிரயம் ரூபா 1,689.63 மில்லியனாகும்.	பின்வரும் காரணங்கள் காரணமாக உரிய காலப்பகுதியில் செயல் திட்டங்கள் முடிக்கப்படவில்லை: • நிலம் கையகப்படுத்துதல் வேலையில் தாமதம் • வானிலை நிலைமைகள் முடக்கப்பட்டது • நிதிகளின் பற்றாக்குறை மற்றும் அந்த செயல் திட்டங்கள் இன்னும் நிறைவடையும் செயற்பட்டியல் உள்ளது.	அனைத்து முக்கிய வீதிகள் தற்போது நிறைவுற்றுள்ளது. நிதி வரையரை காரணமாக ஏனைவைகள் இடை நிறத்தம் செய்யப்படடுள்ளது.
4.5 (அ)	**சொத்துக்கள்** **முகாமைத்துவம்** இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் ரூபா 32,139,477 பெறுமதியான உதிரிப்பாகங்களின் இருப்புக்கள் பயன்படுத்தப்படாது 2012 ஆம் ஆண்டு முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.	இந்த உருப்படிகளின் மாற்றுப் பயன்பாடு மற்றும் முன்னோக்கிய நடவடிக்கைகளை ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது.	மெதுவாக நகரும் பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ)	ரூபா 4,746,349 பெறுமதியானசீருடைகள், சப்பாத்து மற்றும் செருப்புகள், ரயர் மற்றும் பொருள் இருப்புக்கள்- அஸ்பற் பொறி பழுதடைந்த பொருளிருப்பு என்பன அவற்றினை கைதவிர்ப்பு செய்வதற்கு கவனத்திற்கெடுக்காமல் 2008 முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.	பொருட்களுக்கு ஆராய்ந்து, மாற்றுப் பயன்பாட்டை முன்மொழிவதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டிற்கு சில பொருட்கள் வழங்கப்படுகின்றன.	2015 ஆம் ஆண்டில் கடுகதிப்பாதை செயல்பாட்டு அலகு ஊழியர்களுக்காக வாங்கிய சீருடையில் உள்ள பொருட்கள் 58 தவிர, சீருடை பொருட்கள் ஏற்கனவே வழங்கப்பட்டன 2011-2014 ஆண்டு முதல் நிலுவைத் தொகையை சரிபார்க்க ஏற்கனவே ஒரு கணக்கெடுப்பு சபை நியமிக்கப்பட்டு, குழு வின் சிபாரிசில் அவ் உருப்படிகள் ஏலம் விடப்பட்டன.
4.6	**சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்** அதிகாரசபையால் அதன் இணைந்த கம்பனிகளுடன் நிறைவேற்றப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.		
(அ) i	மகநெகும கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய தொகை (ஸ) அதிகாரசபையால் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களிற்கான வாடகை 2012 பெப்ரவரி 10 இல் உரிய கம்பனியுடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 2010 முதல் 2014 வரையான காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 333,200,550 தொகையான வாடகையை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த அளவு பரிமுதல் செய்யக்கூடிய எண்ணிக்கையிலானது என்பதால், கடன் தீர்வுகளுக்கு எதிராக முழு அளவையும் மீட்டெடுப்பது நடைமுறை அல்ல. எனவே, இந்த தவணைகளை தவணை முறையில் செலுத்தும் நடவடிக்கை செயல் முறையில் உள்ளது. நாங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ரூபா 43.47, மில்லியனை மீட்டெடுத்துள்ளோம்.	2016 ம் ஆண்டில் 143.5 மில்லியன் ரூபா பெறுமதியான தொகையை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, வேறுபாடுகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.
ii	(ii) வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு 2004 – 2007 வரையான ஆண்டுகளின் போது சொத்துக்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 63,276,545 மானியத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மகாநெகும வீதி நிர்மாணத்துடனான நிலுவைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இது சம்பந்தமாக மகாநெகுமா கம்பனி உடன் பல கூட்டங்கள் நடைபெற்றதோடு நிலுவை தொகைகளை மீளப்பெற இணக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஆ)	2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 10,923,083 தொகையான கூலியினையும் 2014 ஆம் ஆண்டின் போது குளிர் கலவையினை வழங்கியமைக்காக ரூபா 5,685,164 தொகையினையும் அறவிடுதலுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அல்லது வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 10 மில்லியன் தொகைக்கான பணிக்கான வேலை சிட்டைகள் ஏற்கனவே ஜூலை 2016 ல் தீர்க்கப்பட்டு, ரூபா 1.8 மில்லியன் இன்று வரை குளிர் கலவை விநியோகத்திற்கு எதிராக உள்ளது. 2016 ஆம் ஆண்டில் மீதியை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இது 2016 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டது.
(இ) i	**அங்கீகரிக்கப்படாத முரண் கட்டளைகளும் வேலைக் கட்டளைகளும்** வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம்.பதிற் கடமை தலைவரின் 2011 மார்ச் 28 ஆந் திகதிய 2011 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், முரண் கட்டளைகளையும் மேலதிக மற்றும் கூடுதலான வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், பின்வரும் கூடுதலாக செய்யப்பட்ட வேலைகளிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.	செயல்முறையை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுத்த பின்னர்: • ஒப்பந்த மதிப்பில் 10 சதவீதத்திற்கும் குறைவான வேறுபாடு பணிப்பாளர் நாயகத்தின் கேள்வி மனு கோரள் சபைக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. வீ. ஆ. அ. சபை கேள்வி மனு கோரல் சபையின் சிபாரிசின் அடிப்படையில் பணம் செலுத்தபடுகிறது. • செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலின் படி, ஒப்பந்த மதிப்பில் 10% க்கும் அதிகமான வேறுபாட்டுக் கட்டளைகளை கொடுப்பனவுக்கு பரிந்துரை செய்ய அமைச்சரவை துணை குழுவிற்கு குறிப்பிடப்பட்டு குழு ஒப்புதல் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகிறது.	37 வழக்குகளில் 10 வழக்குகள் தவிர மற்ற அனைத்து வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாத முரண் கட்டளைகளின் பெறுமதி	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய முரண் கட்டளைகளின் தொகை
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஒப்பந்தப் பெறுமதிக்குள் வழங்கப்பட்ட முரண் கட்டளைகள்	987.4	272.8
ஒப்பந்த பெறுமதியினை விஞ்சி வழங்கப்பட்ட முரண் கட்டளைகள்	384.7	42.3
மொத்தம்	1,372.1	315.1

ii	வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2013 மார்ச் 19 ஆந் திகதிய 2013 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின்	பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இருந்தும் வேலை ஆணைகளை நிறைவேற்றுவதற்கு	468 வழக்குகளில் 36 வழக்குகள் தவிர மற்ற அனைத்து வழக்குகளும்

	பிரகாரம், வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், அக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பின்வரும் வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறப்பட டிருக்காமை அவதானிக்கப்பட்டது.	எடுக்கப்படவில்லை. இது பணிப்பாளர் நாயகத்தின் வாய்மொழி ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, பணிப்பாளர் நாயகம் ஒப்புதலுக்காக டி.ஐ.ஏ. தலைமையிற்கான சிறப்பு குழுவிற்கு நிலுவையிலுள்ள ஒப்புதலுக்கான பணி உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறது.	தீர்க்கப்பட்டுள்ளன.
		வேலைக் கட்டளைகளின் பெறுமதி / **ரூபா மில்லியன்** 2013 இலிருந்து வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள 17,093.4 2013 வரை வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள் 587.8 மொத்தம் 17,681.2	**2015 செலுத்** / **ரூபா மி**
iii	மேலும், முன் அங்கீகராம் இன்றியும் வீதிகளை அகலப்படுத்தி முன்னேற்றுவதற்கான ஒப்பந்தங்களிற்காக தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரம் இன்றியும் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த முரண் வேலைக் கட்டளைகளின் பெறுமதி ரூபா 19,368.4 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 3,281.9 மில்லியனாகும். அதற்கமைய, செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியினைக் கணிப்பிட்ட பின்னருள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அட்டுறுச் சட்டைகளின் பெறுமதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலை செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மகாநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரண கம்பெனிக்கு 18 மில்லியன் ரூபா ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதிலும், சான்றிதழ் சிட்டைகள் வீ. அ. அ. சபையால் 31 டிசம்பர் 2015 இல் பெறப்படவில்லை. ஆகையால், வீ. அ. அ. சபையின் நிதிக் கூற்றுக்களில் அட்டுறவினை மேற்கொள்ள முடியவில்லை.	2016 ஆண்டு முடிவுறு கணக்குகளுக்கான தெளிவான அறிவுறுத்தல்கள் நிதி சுற்றுகை இல. 346 இன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.
4.7	**மனிதவள முகாமைத்துவம்** பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		

(அ)	**பதவியணி** இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.		
i	2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் பதவியணியின் நிலைமையின் பிரகாரம், 12 பதவிகளில் 710 வெற்றிடங்களும் 08 ஏனைய பதவிகளில் 1080 மிகைகளும் உள்ளதென வெளிப்பட்டது	8 பதவியணிவகைகளிள் 1080 அதிகப்படியான பணியாளர்கள் தீவின் பரந்த வீதி முன்னேற்றம் மற்றும் புனர்வாழ்வுத் திட்டத்தை அமுல்படுத்திய பணியாளர்களின் ஆட்சேர்ப்பு காரணமாக இருக்கின்றனர். முகாமைத்துவ சேவை திணைக்களத்திலிருந்து பதவியணிக்கு முக்கியமானதாக இருந்தது. என்றாலும், அங்கீகாரம் வழங்கப்படவில்லை. எனவே, அதிகமான ஊழியர்கள் பிரிவில் புதிய ஆட்சேர்புக்களைத் தற்காலிகமாக நிறுத்த நிர்வாகம் முடிவு செய்துள்ளது. 12 பிரிவுகளில் 710 காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டுள்ளன. தீவு மட்டத்திலான வீதி முன்னேற்ற மற்றும் புணர் நிர்மான திட்டத்தின் அமுலகத்தின் போது 8 பிரிவுகளில் 869 மேலதிக வெற்றிடங்கள் சேர்க்கப்பட்டனர். இருப்பினும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பதவியணி அனுமதி தேவையானதோடு அவ்வாறு அனுமதி வழங்கப்படவில்லை. ஆகையால் முகாமைத்துவம் புதிய நியமனத்தை மேலதிக ஊழியர் பிரிவின் கீழ் இடை நிறுத்த தீர்மானித்துள்ளது.
ii	சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 06 வெற்றிடங்களும் தொழில்நுட்ப சேவையில் 144 வெற்றிடங்களும் எழுதுனர் மற்றும் இணைந்த சேவைகளில் 28 வெற்றிடங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரச்சபையின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தது.	மூத்த நிர்வாக முகாமையில் மேலாண்மையில் 06 இடங்களில் 02 காலியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தொழில்நுட்ப சேவைகளில் 68 பதவிகளுக்கான விண்ணப்பங்களை அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேலதிக பணிப்பாளர் நாயக பதவி தவிர மூத்த நிர்வாக மேலாண்மையில் உள்ள காலியிடங்கள் பதில் செயலாற்றுகை அடிப்படையில் நிரப்பப்பட்டன. செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் வருமான பணிப்பாளர் பதவி விண்ணப்பப் பத்திரம் மூலம் நிரப்பப்படுகிறது. மூன்று செயல்திட்ட இயக்குனருக்கான பதவி அனுபவத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் நிரப்பப்படும்.
iii	அதிகாரசபையின் பாலங்கள் வடிவமைத்தல் பிரிவு பிரதான பதவிகளில் தகைமையுள்ள ஆட்களிற்கான பற்றாக்குறையுடன் செயற்படுகின்றது. அதற்கமைய, 07 பிரதான முகாமைத்துவ பதவிகள்	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.	(40 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 06 இயந்திர கண்காணிப்பாளர்கள்) தொழில்நுட்ப சேவைகளில்

	2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டன.		வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
(ஆ)	**ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள** 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரசாங்க நிறுவனங்கள் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் செலவினம் செய்வதற்கு அல்லது அதன் வளங்களை (மனித வளம் உள்ளடங்கலாக) ஈடுபடுத்தல் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை மீறி அதிகாரசபை ஏனைய நிறுவனங்களிற்கு அதன் 260 உத்தியோகத்தர்களை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவித்திருந்ததுடன் பின்னர் அந்த ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள இணைக்கப்பட்டிருந்தனர்.	அமைச்சரவை ஒப்புதலின் பேரில் எதிர்காலத்தில் ஊழியர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இது சம்பந்தமாக உரிய அமைச்சுடன் தகவல் தொடர்பு இருந்தது.
(இ)	**<u>கொள்வனவு பிரிவின் செயலாற்றல்</u>**		
i	கொள்வனவு பிரிவு முறையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவு மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட நலிவான கட்டுப்பாடுகள் காரணமாக அது எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை.	கொள்முதல் பிரிவு விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக, சம்பந்தப்பட்ட பிரிவுகள் அவற்றின் தேவை மற்றும் மத்திய கொள்முதல் பிரிவின் மூலம் அன்றி தாமே கொள்முதலை செய்தது.	கொள்முதல் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக வீ. அ. அ. சபையின் இயக்குநர்கள் குழு வினால் சபைபத்திரம் (1785/2016) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
ii	பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 36 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 15 ஆக இருந்தது. பிரதான பொறியியலாளர், 3 ஏனைய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற பிரதான பதவிகள் 2014 இலிருந்து வெற்றிடமாக் காணப்பட்டன.	கொள்முதல் பிரிவு விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக, அதற்கு ஏற்ப பதவியணி தேவை சரிசெய்யப்பட்டது. தற்போது, தற்போதுள்ள ஊழியர்களுக்கு மேலதிகமாக இரண்டு பொறியாளர்கள் 2015 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.	கொள்முதல் பிரிவின் முக்கிய பதவி ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளது.
iii	ரூபா 31.32 மில்லியன் தொகையான காகிதாதிகளின் கொள்வனவு மாத்திரம் இப் பிரிவால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதேநேரம் ஏனைய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது இப் பிரிவின் சேவையினைப்	வேலை தொழிற்பாடுகளுடன் படிப்படியாக கொள்முதல் பிரிவு ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.	2016 ஆம் ஆண்டில் 535 மில்லியன் ரூபா பெறுமதியான நிர்மான பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆதற்கு மேலதிகமாக 2017

	பெற்றுக்கொள்ளாது ஏனைய பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.		ஆம் ஆண்டில் கொள்வனவு தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5 5.1	**கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்** **கூட்டிணைந்த திட்டம**		
(அ)	2003 யூன் 02 ஆந் திகதிய "நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின்" பிரிவு 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது 2014- 2018 வரையான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டத்தை 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் 2015 சனவரி 01 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தது. மேலும், கூட்டிணைந்த திட்டத்தை உரிய நேரத்தில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளிற்குரிய கூட்டிணைந்த திட்டமானது 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 முதல் 2020 வரைக்குமான கூட்டிணைந்த திட்டமானது 02 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	இது சிறப்பு சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளதோடு மற்றும் எதிர்காலத்தில் கூட்டுறவுத் திட்டத்தை உரிய நேரத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கூட்டுறவுத் திட்டமும் நடவடிக்கைத் திட்டமும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.
(ஆ)	2015 ஆம் நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், பணிப்பாளர் சபையின் மீளாய்விற்காக வருடாந்த	சுற்றறிக்கையின் படி கூட்டுறவு திட்டத்தில் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவைப்படும் ஊழியர்களை சேர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	கூட்டுறவு திட்டத்தில் ஒவ்வொரு பிரிவுக்குமான ஊழியர் தேவையை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

	செயன்முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கும் நடைமுறை அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.		ஒவ்வொரு பிரிவிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவு சுருக்கமாக உள்ளது.
5.2	**செயல் நடவடிக்கைத் திட்டம் 2015** ஆம் நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம்த்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், பணிப்பாளர் சபையின் மீளாய்விற்காக வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கும் நடைமுறை அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.	எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது. காலாண்டு முன்னேற்ற அறிக்கை எதிர்காலத்தில் இயக்குனர் சபைக்கு முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்	எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது.
5.3	**பாதீட்டுக் கட்டுப்பாடு** 2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் முழுமையாக திருத்தப்பட்ட பாதீட்டிற்கான அங்கீகாரம் 2015 திசெம்பர் 21 இல் பெறப்பட்டிருந்தது. காத்திரமும் பயனுறுதியும் மிக்க பாதீட்டு முறைமையொன்று இன்மை காரணமாக அதிகாரசபையின் திருத்தப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	கூட்டு ஒப்பந்தத்தின் சிறப்புரிமைகளுக்குப் பதிலாக ஊழியர்களுக்கான இடைக்கால கொடுப்பனவு செலுத்துதல் காரணமாக இது முக்கியமாக நடந்துள்ளது. இது ஊழியர்களின் கோரிக்கைகளை சார்ந்தபடியால் 2015 ஆம் ஆண்டில் இடைக்கால கொடுப்பனவு ஏற்பாடு செய்யப்படுவது ஒரு கடினமான பணியாகும். மேலும், தேசிய நெடுஞ்சாலை அமைப்புக்கு வெளிப்புறச் சுற்றறை சேர்ப்பது சேகரிப்பினை அதிகரித்துள்ளதோடு இது வரவு செலவுத் திட்டத்தை மறுசீரமைக்கும் நேரத்தில் முன்வைப்பது கடினமாக இருந்தது. பாதீட்டுக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.	குறிப்பிடப்பட்டது.
6	**முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்** கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.		
	கட்டுப்பாட்டுத் துறை	கணக்காய்வு அவதானிப்புக்கள் ----------	
(அ)	கணக்கீடு	i. கணக்கியல் கொள்கைகளை வெளிப்படுத்தல், பொறுப்புக்களை வகைப்படுத்துதல் (நடைமுறை	

		மற்றும் நடை அல்லாத) மற்றும் அட்டுறு செலவுகளை கணக்கிடல். ii. சம்மந்ததப்பட்டவர்களுடன் கொடுக்கல் வாங்கள்களை வெளிப்படுத்துதல் மகநெகும நிறுவனங்கள் மற்றும் அதிவேக வீதி போக்குவரத்து நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கள்கள்	
		iii இடமாற்றம் செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் அகற்றப்பட்ட சொத்து குறித்த கணக்கியல் முறை மற்றும் பதிவேட்டு கணக்குகளுக்காக விவரமான அட்டவணை தயாரிப்பு	
(ஆ)	ஒப்பந்த நிர்வாகம	உத்தேசித்த நோக்கங்களுக்கான நிதிகளின் சிறந்த பயன்பாடு, நிதி கோரிக்கைகளை மதிப்பீடு செய்தல், வேலைகட்டளைக்கு முன் ஒப்புதல் பெறுதல், திட்டமிட்டப்படி கட்டுமான பணியின் நிறைவேற்றல். II. உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக நிதியைப் பயன்படுத்துதல்.	
(இ)	இருப்புக் கட்டுப்பாடு	வழக்கற்ற சரக்கு பொருட்களை அகற்றுவது	
(ஈ)	சொத்துக்கள் முகாமைத்துவம	நிலங்களின் பயன்பாடு	

தலைவர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

ஆண்டறிக்கை - 2015

வீ.அ.அ.ச.இன் நிறைவேற்றுகை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆண்டறிக்கை - 2015

01. வீ.அ.அ.ச.இன் நிறைவேற்றுகை

வீ.அ.அ.ச ஆனது 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்றுகை மீதான அனைத்து விபரத் தகவல்களும் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் அத்தியாயம் 3-7 இல் வழங்கப்பட்டிருந்தது. கீழ்வருவன வீ.அ.அ. சபையின் நடவடிக்கையினது முக்கியமான பரப்புக்களின் நிறைவேற்றுகைக்கான சுருக்கமாகும்.

1. **வீதிப் பராமரிப்பு அமுலாக்கம்:** 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் A தர மற்றும் B தர வீதிகள் 12,210 கி.மீ. மொத்த நீளத்தைக் கொண்டுள்ள தேசிய வீதி வலைப்பின்னல் மற்றும் 169.85 கி.மீ. கடுகதிப்பாதை மற்றும் 4,456 பாலங்கள் பொதுவான நிலை பராமரிப்பில் பராமரிப்பு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக உள்ளூர் நிதிகளை பயன்படுத்தி 272.09 கி.மீ. வீதிகளுக்கு மணல் போட்டு மூடல் செய்யப்பட்டது.

2. **நெடுஞ்சாலை அபிவிருத்தி:** வீதிகளின் புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றமானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. உள்ளூர் நிதிகளுடனான நெடுஞ்சாலை அபிவிருத்தி நாடு பூராகவும் மாகாணப் பணிப்பாளர் காரியாலயத்தினால் எடுக்கப்பட்டது. 31.12.2015 இல் உள்ளூர் நிதிகளுடன் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றங்களின் கீழ் 342 செயற்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதுடன், 116 செயற்திட்டங்கள் நிறைவு. 31.12.2015 இல் 38 செயற்திட்டங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 14 வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற செயற்திட்டங்கள் நிறைவு உள்ளூர் வங்கி நிதியிட்ட செயற்திட்டம் என இச்செயற்திட்டம் அழைக்கப்படு கின்றது. இதற்கு மேலதிகமாக குறிப்பிடத்தக்க தொகையில் வீதி புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றங்கள் வெளிநாட்டு நிதியிட்ட உதவியால் மேற்கொள்ளப்பட்ட விபரனம் வீஅ.அ.ச. இன் ஆண்டறிக்கை அத்தியாயம் 5 இல் விபரிக்கப்பட்டது.

3. **பாலங்கள் நிர்மாணம்:** 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளூர் நிதிகளுடன் பலவீனமான பாலங்கள் நிர்மாண திட்டத்தின் கீழ் மொத்தமாக எடுக்கப்பட்ட 83 பலவீனமான பாலங்கள் இவ்வாண்டு காலப்பகுதியில் நிறைவு. ஐக்கிய இராச்சியம் நிதியிட்ட உருக்கிடுப்பால செயற்றிட்டம் கட்டம் 1 – 28 பாலங்கள் நிறைவு மற்றும் 2015 டிசெம்பர் இறுதியில் 25 பாலத்தின் நிர்மாண வேலைகள் வளர்ச்சியில். இதற்கு மேலதிகமாக பலதரப்பட்ட பால நிர்மாணங்கள் செயற்றிட்டங்கள் நிறைவு மற்றும் வெளிநாட்டு நிதியிட்ட செயற்றிட்ட முகாமைத்துவ அலகுகள்.

4. **வீதிகள் மற்றும் பாலங்களின் வடிவமைப்பு:** குறித்த ஆண்டு காலப் பகுதியில், நாட்டின் ஊடான தேசிய வீதி வலைப்பின்னலில் 37 எண்ணிக்கையான ஊடறுப்பு வடிவமைப்புக்கள் கிட்டத்தட்ட 70 எண்ணிக்கையான பாலங்களுக்காக பால வடிவமைப்புக்கள், கிட்டத்தட்ட 152 கி.மீ. வீதிகளுக்கான வீதி வடிவமைப்புக்களை வீ.அ.அ. சபை நிறைவு செய்தது. 2015 ஆண்டு இறுதியில் 391 கி.மீ. வீதி வடிவமைப்புக்கள், 178 கி.மீ. கடுகதிப் பாதை வடிவமைப்புக்கள், 42 எண்ணிக்கையான பால வடிவமைப்புக்கள் மற்றும் 31 எண்ணிக்கையான ஊடறுப்பு வடிவமைப்புக்கள் வளர்ச்சியில் உள்ளது. இவ்வேலைகளானது வீ.அ.அ. சபையின் நான்கு வடிவமைப்புக் காரியாலயங்களான கொழும்பு, கண்டி, இரத்தினபுரி மற்றும் குருநாகல் இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

5. **வீதி மற்றும் பால வேலைகளில் தரக்கட்டுப்பாடு:** 9 மாகாணங்களின் கள பரிசோதனைக் கூடம் ஊடாக வீதியின் பராமரிப்பு மற்றும் கட்டுமானங்களின் போது வேலைகளின் தரக்கட்டுபாட்டுக்கு உதவுதல் மற்றும் ஆலோசனைகளை வீ.அ.அ.ச. இன் ஆராச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்ச்சியாக வழங்கியது.

6. **காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றம்:** வீ.அ.அ.ச.இனால் அமுல்படுத்தப்பட்ட பால மற்றும் வீதிகள் செயற்திட்டங்களிற்காக பிரதேச செயலாளர்களினால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகான ஒருங்கினைப்பை வீ.அ.அ.ச. இன் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற பிரிவானது 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

7. **சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அளவீட்டு அமுலாக்கல்:** EIA/IEE அறிக்கைகளைத் தயாரித்தல் உள்ளடங்கலாக பலதரப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அளவீடு அமுல்படுத்தலிற்கு வீ.அ.அ.ச.இன் சுற்றுச்சூழல் மற்றும் பிரிவு அதன் தொடர்ச்சியான அனுசரயினை வழங்கியது.

8. **கடுகதிப்பாதை அபிவிருத்தி:** கொட்டாவை- பின்னதுவை வரைக்குமான இலங்கையின் முதலாவது கடுகதிப்பாதை, தெற்கு கடுகதிப்பாதை நிறைவு செய்யப்பட்டு மக்களின் பாவணைக்கு நவம்பர் 2011 இல் திறந்து வைக்கப்பட்டது. பின்னதுவ- கொடகம (மாத்தறை) (34.54 கி.மீ.) வரைக்குமான தெற்கு கடுகதிப்பாதையின் கட்டம் 2 வதின் கட்டுமான வேலை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாத காலப்பகுதியில் நிறைவடைந்து மக்களின் பாவனைக்குத் திறக்கப்பட்டது. இலங்கையின் கடுகதிப்பாதை வலைப் பின்னலிற்கு இணைப்பதற்கான முக்கிய பாலமான தெற்கு கடுகதிப்பாதை மற்றும் கொழும்பு – கட்டுநாயக்க கடுகதிப்பாதையின் ஊடாக கொழும்பு பாரிய பகுதிக்கிடையில் உயர்வேக தொடர்பு வசதிக்காக இப்பாலம் அடையாளம் காணப்பட்டது. கொட்டாவ தெற்கு கடுகதிப் பாதையில் இருந்து இவ்வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலை ஆரம்பிப்பதுடன் சிகேஈ (CKE) கெரவலப்பிட்டியில் நிறைவடைகின்றது. மூன்று பாகங்களான கொட்டாவ – கடுவல (11 கி.மீ.) யில் இருந்து கடுவல – கடவத்தை (8.9 கி.மீ.) மற்றும் கடவத்தை – கெரவலப் பிட்டியில் இருந்து (9.3 கி.மீ.) நிர்மாண பாகம் 1 (OCH) யில் இருந்து கொட்டாவ – கடவத்தை பாகம் 2014 மார்ச்சில் நிறைவு செய்யப்பட்டது. 2014 டிசெம்பர் இறுதியில் கடுவல – கடவத்தையில் இருந்து OCH பாலம் 2 நிர்மாண வேலை ஜூலை 2015 இல் நிறைவடைந்துள்ளது. 17.09.2015 ஆம் திகதி மக்களின் பாவணைக்கு திறந்து வைக்கப் பட்டது. 2015 இறுதியில் OCH இன் பாகம் 3 இற்கான முன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், காணிச் சுவீகரிப்பு வளர்ச்சியில் உள்ளது.

9. **மொத்த நிதி நிறைவேற்றுகை:** 2015 ஆம் ஆண்டினது வீ.அ.அ.சபையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி அடங்கலாக மொத்த நிதியிடல் ஒதுக்கீடுகள் ரூபா 191,214.20 மில்லியனாக இருந்ததோடு வருடாந்த செலவு ரூபா 173,373.62 மில்லியனாயிருந்தது. 2015 இல் மொத்த நிதியில் பங்களிப்பு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதிகள் 61% க்கு அதிகமானதாகும்.

செயல் திறன்	ஒதுக்கீடுகள் (ரூபா மில்லியன்)	செலவு (ரூபா மில்லியன்)
கடுகதிப் பாதை அபிவிருத்தி	49,906.42	45,236.75
நெடுஞ்சாலை அபிவிருத்தி	84,300.46	76,475.37
அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வீதிகள்	19,923.64	17,270.03
மேம்பாலங்கள் மற்றும் பாலங்கள் நிர்மாணம்	11,181.27	8,669.19
தேசிய அனர்த்தத்தில் பாதிக்கப் பட்ட வீதிகள் புனருத்தாரணம்	451.87	398.15
நிறுவன ஆதரவு	25,450.53	25,324.12
மொத்தம்	**191,214.20**	**173,373.62**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்

2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த

ஆண்டின் நிதிசார் கூற்றுக்கள் மீதான

1971 இன் 38 ஆம் இலக்க

நிதிசட்டத்தின் 14(2) (சீ) பிரிவின்

பிரகாரமான கணக்காய்வாளர்

நாயகத்தின் அறிக்கை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிசார் கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிசட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2017ஆம் ஆண்டிலிருந்து இணக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது.

2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)இணங்குதல்

(அ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 1–நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

I. 2016ஆம் வருடத்திற்கான இறுதி கணக்குகள் சம்பந்தமான தெளிவான அறிவுருத்தல்கள் நிதிச்சுற்றறிக்கை இல. 346இல் வழங்கப்பட்டுள்ளது.

II. 2016ஆம் வருடத்திற்கான இறுதி கணக்குகள் சம்பந்தமான தெளிவான அறிவுருத்தல்கள் நிதிச்சுற்றறிக்கை இல. 346இல் வழங்கப்பட்டுள்ளது.

III. 2016ஆம் வருடத்திற்கான இறுதி கணக்குகள் சம்பந்தமான தெளிவான அறிவுருத்தல்கள் நிதிச்சுற்றறிக்கை இல. 346இல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மறும் வழுக்கள்

கணக்கியல் நடவடிக்கைகள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 உடன் இணங்கிசெல்வதோடு 2017ஆம் வருடத்திலிருந்து தனியான குறிப்பு வெளிப்படுத்தப்படும்.

(இ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 –ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

I. சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்ய ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் மதிப்பீட்டு திணைக்களத்தினால் மிதிப்பீட்டு அறிக்கை இன்னும் வழங்கப்படவில்லை.

II. 2017ஆம் ஆண்டிலிருந்து இணக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2016 வருட காலப்பகுதியில் 271.4மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆனி மாதத்தில் ரூபா 248.1 மில்லியன் மூலதனமாக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவைகள் 2016ஆம் வருடத்தில் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) (i) கணக்காய்வாளர் நாயகத்திற்கு விரிவான விளக்கம் வழங்கப்பட்டுளளது.

(ii) 2016 வருட காலப்பகுதியில் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) இவ் வித்தியாசம் இலங்கை வங்கியுடன் தொடர்புபட்ட இரு காணிகளின் உறுதிப்பாடுயின்மை காரணமாக தோன்றியுள்ளது. 31.12.2016இல் வீ.அ.அ.சபையிற்கும் வங்கியிற்கும் இடையில் வித்தியாசம் இல்லை.

(ஆ) இவ் வித்தியாசம் 2016ஆம் வருடத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

2.2.5 <u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

(அ)**கிடைக்க_வேண்டிய கணக்குகள்**

I. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா 448,442,137.6 இலான தொகை தீர்க்கப்பட்டுள்ளதோடு எஞ்சியுள்ள தொகைகளை தீர்க்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுருத்தல்கள் வழங்கப்பட்டன.

II. நீண்டகால நிலுவைகளை இணக்கம் செய்து தீர்க்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

III. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா834,870தீர்வு செய்யப்பட்டுள்ளதோடு ஏனைய வைப்புக்கள் இணக்கம் செய்யப்பட்டு கொன்டிருக்கின்றன.

IV. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா834,870இலான தொகை மீள்பெறப்பட்டுள்ளது.

V. தேசிய சேமிப்பு வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களின் சிட்டைகளை தீர்வு செய்ய தனியான வாக்களிப்பு ஒதுக்கீற்றிலிருந்து திரைசேரியினால் வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து மொத்த முற்பன கொடுப்பணவுக்கு எதிராக ரூபா460,226,704யிலான ஒரு தொகை ஈடு செய்யப்பட்டுள்ளது.

VI. இந்த விடயத்தை நிறைவு செய்ய கணக்குகள் இணக்கம் செய்யப்படுகின்றன.இது வரை ரூபா 40,625,664,.09இலான ஒரு கூட்டுத்தொகை பெறப்பட்டுள்ளதோடு ரூபா14.3 மில்லியனை பெற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்த காரர்களுக்கு ஏனைய மீதிகளிலிருந்து எஞ்சியுள்ள தொகைகளை மீள்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுகொண்டிருக்கின்றது.

VII. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா.961,388,296.63இலான தொகை தீர்க்கப்பட்டுள்ளதோடு 2017 ஆனி இல் முற்பணத்திற்கு எதிராக தீர்வு செய்ய ரூபா811,796,343.54 பெறுமதியிலான சிடடைகள் வழங்கப்பட்டுள்ளன.

2017 ஆனி 30வரை1,119,966,845இல் ரூபா 902,462,476.51 தீர்வு செய்யப்பட்டுள்ளது.

VIII. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா18,435,626.16தீர்வு செய்யப்பட்டுள்ளது.

IX. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா576,439.65இலான தொகை மீள்பெறப்பட்டுள்ளதோடு ஏனைவைகளை பெற சட்ட ஆலோசனைக்காக கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குத்தகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா539,206.83 இலான தொகை மீள்பெறப்பட்டுள்ளது.

X. தவனை அடிப்படையில் உரிய ஊழியர்களிடமிருந்து ரூபா1.2மில்லியனை மீள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டிருப்பதோடு ஏஞ்சிய மீதிகள் பெறப்பட்டுள்ளது.

XI. ரூபா 395,544யிலான தொகை மீள்பெறப்பட்டுள்ளது. உத்தரவாதியிடமிருந்து ரூபா 408,140யிலான ஒரு தொகையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு தொகை அல்லது ரூபா632,184.23ஐ பதிவழிப்பதற்கான அனுமதியை பெற பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய ஊழியர்களின் ஒப்புதலுடன் பணிக்கொடை கட்டணத்திலுருந்து எஞ்சிய தொகை ரூபா1,668,917.50யை மிள்பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

I. ஏனைய நிதிகளிலிருந்து பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 154 மில்லியன் தொகையிலான 2016ஆம் வருடத்தில் மீள்எழுதப்பட்டுள்ளது.

II. விளக்கங்கள் கணக்காய்வு நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

III. 2016ஆம் வருட காலப்பகுதியில் ரூபா160.2 மில்லியன் விடுவிக்கப்பட்டதோடு ரூபா12 மில்லியன் மீள் எழுதப்பட்டுள்ளது. எஞ்சிய நீண்டகால மீதிகளை விடுவிக்க அல்லது திரும்பி எழுதுவதற்காக மீளாய்வு செய்ய ஒரு குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுகொண்டிருக்கின்றது.

IV. சர்ச்சைக்குரிய சிட்டைகள் உயர் மட்ட குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. நடவடிக்கை செயல் முறையில் உள்ளதோடு குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப அவை நிறைவு செய்யப்படும்.

V. ஆதிகரிக்கப்பட்ட வேறுபாடுகளில் ரூபா 47 மில்லியன் தொகையை தவிர்ந்த ஏனைய எஞ்சிய மீதிகள் முற்று முழுதாக தீர்க்கப்பட்டன.

VI. ரூபா341,143,715.75 வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு ரூபா32,223,592,51. 2016ஆம் வருடதிதல் விடுவிக்கப்பட்டதோடு எஞ்சியவைகள் நடவடிக்கை எடுப்பதற்காக மீளாய்வு செய்யப்படுகிறது.

2.2.6 கணக்காய்விற்கான பற்றாக்குறை

கணக்காய்வு தேவையினை நிறைவு செய்வதற்கு பூர்திதயான தகளுடன் கூடிய அட்டவணைகளை தயாரிப்பதற்கான தெளிவான அறிவுறுத்தல்கள் நிதி சுற்றறிக்கை இல.346யில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3 முகாமைத்துவ தீர்மானங்கள்,விதிகள்,கட்டுப்பாடு மற்றும் சட்டங்களுடன் இணக்கம் இன்மை

அ.

I. எதிர்காலத்தில் இவற்றை மீண்டும் செய்ய வேண்டாம் என உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தல்.

II. 2016ம் வருடத்தில் இக் காசோலைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன ரூபா124,973.20 தொகையிடப்பட்ட புதிய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதோடு ரூபா2,862,161.07 வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது.

ஆ.

I. வீ.அ.அ.சபைக்கு 204 ஊழியர்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

II. இணக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்

(i) மொத்த ஒதுக்கீட்டில் 85.2%வீதத்திற்கான ரூபா4,259.8 மில்லியன் தொகை வீதி பராமரிப்பு வேவையிற்காக வீ.அ.அ.சபை 2016ஆம் வருடத்தில் செல வழித்துள்ளது.

(ii) 2015ஆம் வருட இறுதியில் இக் செயற்திட்டங்கள் முடிக்கப்பட்டிருந்தது.அனால் சிட்டைகள் பின்னர் பெறப்பட்டது.

(iii) ஒதுக்கீடுகளின் பயன்பாட்டிற்கான முற்பணங்கள் உரிய நேரத்தில் பெறப்படவில்லை.

4.1.2 பொறியியல் சேவைகள் மற்றும் பாலங்கள் வடிவமைப்பு பிரிவின் செயலாற்றல்

(i) இணக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது.

(ii) 2016ஆம் வருடத்தில் 18 பாலங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு இரண்டு பாலங்கள் வடிவியல் வடிவமைப்பு நிதியிடல் தாமதம் காரணமாக நிறைவு செய்யப்படவில்லை.

(iii) ஏற்கனவே கணக்காய்வாளர் நாயகத்திற்கு விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

4.2 ஒப்பந்த நிர்வாகம்

4.2.1. வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்

(அ) வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள்

(i) நிலைமையிலான மாற்ற மீளாய்வு செய்யப்படுகிறது.

(ii) நிதி இன்மை காரணமாக சில கருத்திட்டங்கள் குறைக்கப்பட்ட எல்லைக்குள் பூர்த்தி செய்யப்பட்டன. நிதி உள்ள அளவிற்கு ஏற்ப ஏனையவைகள் 2017ஆம் வருடத்தில் கருத்திற் கொள்ளப்படும்.

(ஆ) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (LBFB)

I. எதிர்கால வீதி செயல்திட்டத்திற்கான கோரப்படாத முன்மொழிவுகளுடன் ஈடுபடும் செயற்திட்டங்களில் கொள்முதல் வழிகாட்டி இணைப்பு ங0, "சுவிஸ்சவால்வழிமுறையை பின்பற்றுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

II. "சுவிஸ்சவால் வழிமுறை" பயன்படுத்துவதன் மூலம், அரசாங்கத்திற்கு அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்காக ஆகக்குறைந்த விலை தேர்ந்தெடுக்கப்படும்.

III. இந்த வீதிகள் க0 ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானிக்கப்பட்டவை. வீதியின் ஒட்டுமொத்த மேற்பரப்பு நிலையானதாக தரத்திற்கு இல்லை. எனவே LBFB ' திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்கியது அவசியமாகும்.

IV. தற்போது 18 செயல் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 03 செயல் திட்டங்களானது முடிவடியும் நிலையில் உள்ளது. உ0க7ஆனி மாதத்திற்குள் தற்போத செயற்பாட்டில்

உள்ள 7 செயற்திட்டங்கள் நிறைவேற்றிக்கொள்ள முடியும். வாக்களிப்பின் கீழ் ரூபாகள.கூடு பில்லியன் பெற்றுள்ளோம். எனவேஎந்தவொரு நிதி நெருக்கடியும் இல்லை.

v. மாதாந்த இடைக்கால கொடுப்பனவுகளில் இருந்து மொத்த தொகையை கழிக்கப்பட்டுள்ளது.

vi. ஏற்கனவே கணக்காய்வாளர் நாயகத்திற்கு விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

4.2.2 திருகோணமலைவெளிச்சுற்றுவட்ட வீதியின்புனர் நிர்மாணம்

காணிச்சுவீகரிப்பு நடைமுறைக்கு இணங்க காணிகளை பெற்ற பின் வீதிகளை நிர்மாணிக்கதீர்மாணிக்கப்பட்டுள்ளது.

4.2.3 கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்

(i) ஒப்பந்த இல வீ.அ.அ.ச./எம்எம்/எஸ் பி/ஜி ஒஎஸ்எல.்.2016.்.55யின் கீழ் ரூபா15மில்லியலான வேலையிற்கான ஒப்பந்தம் போட்டியிலான விலை மனுக்கோரலில் வழற்கப்பட்டது.

4.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

I. மீளாய்வு செய்யப்பட்ட குத்தகைக்கான ஒரு புதிய குத்தகை ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டதோடு கையெழுத்தானதோடு உ0ககூ ஆண்டு கணக்குகளில்

தேவையானசீராக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) புதிய கட்டிடத்திற்கு தலைமை அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது.

(iii) சில கருத்திட்டங்கள் குறைக்கப்பட்ட எல்லையின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டன.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) இவ்வுருப்படிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
(ஆ) சீருடை துணிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதோடு ஏனைய உருப்படிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

4.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

I. கசகூ.டு மில்லியன் ரூபா பெறுமதியான தொகையை மீள்பெறப்பட்டுள்ளது.

II. இது சம்பந்தமாக மகாநெகுமா கம்பனி உடன்பல கூட்டங்கள் நடைபெற்றதோடுநிலுவை தொகைகளை மீளப்பெற இணக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) இது உ0கசூ ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டது.

(இ) அங்கீகரிக்கப்படாத முரண் கட்டளைகளும் வேலைக் கட்டளைகளும்

(i) ஈஎ வழக்குகளில் க0 வழக்குகள் தவிர மற்ற அனைத்து வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

(ii) சசூஅ வழக்குகளில் ஈசூ வழக்குகள் தவிர மற்ற அனைத்து வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

(iii) எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டது.

4.7 மனிதவள முகாமைத்துவம்

(அ) பதவியணி

(i) வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(ii) மேலதிக பணிப்பாளர் நாயகம் நிதி மற்றும் நிர்வாக பதவிகள் தவிர்ந்தஏனைய சிரேஸ்ட்ட முகாமைத்துவ வெற்றிடங்கள் நிரப்பபட்டன. தொழில்நுட்ப சேவைகளில் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(இ) கொள்வனவு பிரிவின் செயலாற்றல்

(i) கொள்முதல் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவீ. அ. அ. சபையின் இயக்குநர்கள் குழுவினால் சபைப்பத்திரம் (1785/2016) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ii) கொள் முதல் பிரிவின் முக்கிய பதவி ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளது.

(iii) உ0கசூ ஆம் ஆண்டில் ருஈடு மில்லியன் ரூபா பெறுமதியான நிர்மான பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆதற்கு மேலதிகமாக உ0கஎ ஆம் ஆண்டில் கொள்வனவு தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

(அ) 2018-2027 காலத்திற்கான வீதிப்பிரிவு பெருந்திட்டம மேம்படுத்தப்படுகிறது.அது கூட்டுறவுத்திட்டத்திற்கு வழிகாட்டுவகோடு எதிர்கால வீதி பிரிவு கருத்திட்டங்களை

அடையாளம் காட்டுதல் மற்றும் ஒரு அரச கொள்கைகளுடன் வீதிப்பிரிவின் தேவைகளை வளர்த்தலாகும்.

(ஆ) கூட்டுறவுத்திட்டம் 2017இல் ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள ஊழியர் தேவைகளை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு பிரிவுகளில் இருந்து பெறப்பட் தகவல்கள் சுருக்கப்படுகிறது.

5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

இணக்கத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஏற்கனவே விளக்கம் வழங்கப்பட்டுளளது.

ஓப்பம்
நிதிப் பணிப்பாளர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயல்திறனை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட நடுத்தர கால அளவீடுகள்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலைகளின் தரம் மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்காக புதிய பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவு தர உத்தரவாத மற்றும் கண்காணிப்பு முன்னேற்றப் பிரிவு எனப்பட்டது (QA & PM).

2. நிலக் கையகப்படுத்தல் செயற்பாடுகளை துரிதப்படுத்தவும், திறைசேரி நிதியிலிருந்து இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்கவும் உரிய முகவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

3. திறைசேரி ஒதுக்கிய நிதி வரையறைக்குள் வேலைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு பணிப்பாளர்களுக்கும், மாகாணப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

4. செயற்றிறனை அதிகரிக்கும் நோக்குடன், 33 வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு முதுமானி கற்கைகள் உள்நாட்டு பல்கலைக்கழங்களில் மேற்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை புலமைப்பரிசில்களை வழங்கியது.

5. வீதி அபிவிருத்தி அதிகாரசபை அங்கத்தவர்களுக்கு அவர்களது கொள்ளளவை அதிகரிப்பதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

6. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயல்திறனை அதிகரிப்பதற்காக வேலை வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

7. செயலாக்க கற்கைகள், விபர வீதி மற்றும் பாலங்களுக்கான பொறியியல் வடிவமைப்பு ஒப்பந்த ஆவணங்களை தயார் செய்தல் போன்றவற்றுக்கான பயிற்சிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கியது. இதனூடாக செயற்றிறனை அதிகரிக்கவும், செலவுக் குறைப்பு மற்றும் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலிலுள்ள கால தாமதம் ஆகியவற்றை குறைத்தலுக்கான பயிற்சியையும், தொழில்நுட்ப அறிவினை முன்னேற்றுவதற்கான வாய்ப்பினையும் வழங்கியது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை